ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே—நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி" "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு" "நாடொப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—௯. யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவ௵ ஆவணி௴ ௩௰௳ (15-9-35) ஞாயிற்றுக்கிழமை பகுதி—௧௧.

## தோத்திரம்.

ஆதியந்தங் காட்டாத முதலா யெம்மை அடிமைக்கா வளர்த்தெடுத்த அன்னைபோல
நீதிபெறுங் குருவாகி மனவாக் கெட்டா நிச்சயமாய்ச் சொச்சமதாய் நிமல மாகி
வாதமிடுஞ் சமயநெறிக் கரிய தாகி மௌனத்தோர் பால்வெளியாய் வயங்கா நின்ற
சோதியையென் னுயிர்த்துணையை நாடிக் கண்ணீர் சொரியஇரு கரங்குவித்துத் தொழுதல் செய்வாம்.

—தாயுமான சுவாமிகள்.

# கூடித் தொழில் செய்க.

கூடித் தொழில்செய்தோர் கொள்ளைலாபம் பெற்றார்
வாடிடும் பேதத்தால் வாய்ப்பதுண்டோ தோழர்களே!

நாடிய ஓர்தொழிலில் நாட்டார் பலர்சேர்ந்தால்
கேடில்லை நன்மை கிடைக்குமன்றோ தோழர்களே!

சிறுமுதலால் லாபம் சிறிதாகும்; ஆயிரம்பேர்
உறுமுதலால் லாபம் உயருமன்றோ தோழர்களே!

அறுபதுபேர் ஆக்கும் அதனை ஒருவன்
பெறுவதுதான் சாத்தியமோ பேசிடுவீர் தோழர்களே!

பற்பலபேர் சேர்க்கை பலம்சேர்க்கும்; செய்தொழிலில்
முற்போக்கும் உண்டாக்கும் முன்னிடுவீர் தோழர்களே!

ஒற்றைக்கை தட்டினால் ஓசை பெருகிடுமோ
மற்றும் பலரால் வளம்பெறுமோ தோழர்களே!

ஒருவன் அறிதொழிலை ஊரார் தொழிலாக்கிப்
பெரும்பே றடைவதுதான் பெற்றியென்க தோழர்களே!

இருவர் ஒருதொழிலில் இரண்டுகோள் ஒத்திருந்த
சரிதம் அரிதுநம் தாய்நாட்டில் தோழர்களே!

நாடெங்கும் வாழ்குவதிற் கேடொன்று மில்லையெனும்
பாடம் அதைஉணர்ந்தாற் பயன்பெறலாம் தோழர்களே!

பீடுற்றார் மேற்கில் பிறநாட்டார் என்பதெலாம்
கூடித் தொழில்செய்யும் கொள்கையினால் தோழர்களே!

ஐந்துரூபாய்ச் சரக்கை ஐந்துபணத்தால் முடித்தல்
சிந்தை ஒருமித்தால் செய்திடலாம் தோழர்களே!

சந்தைக் கடையோகம் தாய்நாடு? லக்ஷம்பேர்
சிந்தைவைத்தால் நம்தொழிலும்சிறப்படையும் தோழர்களே!

வாடித் தொழிலின்றி வறுமையாற் சாவதெல்லாம்
கூடித் தொழில்செய்யாக் குற்றத்தால் தோழர்களே!

கூடித் தொழில்செய்யாக் குற்றத்தால் இன்றுவரை
மூடிய தொழிற்சாலை முக்கோடி! தோழர்களே,

கூடைமுறம் கட்டுநரும் கூடித் தொழில்செய்யின்
தேடிவரும் லாபம் சிறப்புவரும் தோழர்களே!

கூடுவதும் கூடிப் பிரியாமையும் கொண்டு
நாடும் தொழிலால்நம் நாடுயரும் தோழர்களே!

—"கவிதாமண்டலம்."

"உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில், உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்."

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டு விசாரணை—16

# மன்னாரில் இரட்டைக்கொலை.

## பன்றி வேட்டையால் வந்த வினை.

## யானையென நினைத்துச் சுட்டேன்.

## எதிரிகள் விடுதலை.

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் 9.

யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டில் நீதியரசர் திரு. L. M. மாட்டினெஸ் முன்பாகவும் திரு. ஏ. வி. நீட்சாட் என்பவரைத் தலைமையாகக்கொண்ட யூரிக்கனவான்கள் முன்பாகவும், சென்ற சித்திரை மாதம் 5-ந் திகதியளவில் மன்னார்ப்பகுதியைச்சேர்ந்த வன்னமூட்டை என்னுமிடத்தில் இராமசாமி என்பவனைக் கொலைசெய்ததாக (1) கிட்னன் குருசாமிமீதும், அதேயிடத்தில் அதே நேரத்தில் சுப்பையா என்பவனைக் கொலைசெய்ததாக (2) முருகன்–மனுவல்மீதும் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்காளி சார்பாக முடிக்குரிய நியாயவாதி திரு. நிகால் குணசேகராவும், எதிரிகள் சார்பாக நியாவாதி திரு. W. குணம்ஸ் பென்சர் அவர்களும் விவாதித்தார்கள்.

முதலாவதாக முடிக்குரிய நியாயவாதி வழக்கின் சாராம்சத்தை யூரிமார்களுக்கு எடுத்துரைத்தார்.

அதன்பின்னர் மன்னார்ப்பகுதி மெடிக்கல் ஆபீசர் டக்டர் S. W. C. இரத்தினேசர் கூறிய சாட்சியத்தின் சாராம்சம் வருமாறு:-

“சித்திரைமாதம் 8-ந் திகதியன்று சாயங்காலம் 4-30 மணியளவில் பிரேத பரிசோதனை செய்தேன். அப்போது இறப்பதற்குமுன்னர் ஏற்பட்ட காயங்களைப்பற்றிக் குறித்துக் கொண்டேன். அவைபின்வருமாறு:-

1. நெஞ்சின் நடுஎலும்பின் மத்தியில் 9-ம் எலுப்புக்கு நேராக $\frac{1}{5}$ அங்குல அகலமான ஓர் துவக்குச் சூட்டுக் காயங் காணப்பட்டது. அக்காயங் கருமையடைந் திருந்ததுடன் இரத்தோட்ட நரம்பையும் பீறிக் குண்டுபாய்ந்திருந்தது.

2. இடது மார்பில் $\frac{1}{5}$ அங்குல அகலமான ஓர் துவக்குச்சூட்டுக் காயங் காணப்பட்டது. சுவாசப்பையையும் சதையையும் பீறிக் குண்டுபாய்ந்திருந்தது.

3. வலது கமக்கட்டுக்கு மேலாகவுள்ள சதையில் மூன்று காயங்கள் காணப்பட்டன. ஒவ்வொன்றும் $\frac{1}{5}$ அங்குல அகலமான காயங்களாக இருந்ததுடன் தசையைப் பீறிக் குண்டுகள் பாய்ந்திருந்தன.

4. வலதுகையின் நடுவில் உட்பக்கமாக 50 சத அளவான ஓர் தோற்புரைக் காயம் காணப்பட்டது. அதனைப் புழுத்தின்றிருந்தது.

5. வலது முழங்கையின் நடுவில் உட்பக்கத்தில் 25 சத அளவான ஓர் தோற்புரைக்காயம் காணப்பட்டது. அதனையும் புழுத்தின்றிருந்தது,

6. வலது மணிக்கட்டில் 50 சத அளவான ஓர் தோற்புரைக்காயம் காணப்பட்டது. அதனையும் புழுத்தின்றிருந்தது.

துவக்குச் சூட்டினால் ஏற்பட்ட காயங்களிலிருந்து இரத்தம் பெருகினமையினாலேயே மாரணம் சம்பவித்திருக்கின்றது. காட்டினுள் சவத்தின் முதுகு நிலத்தில் படிந்திருக்கக் கண்டேன். சவம் அதிகமாக அழுகல்தாகியிருந்ததுடன் புழுக்களுடனும் வலதுகாலை மடித்தும் இடதுகாலை நீட்டியும் கிடந்தது. சூடுபட்ட இடத்திலிருந்து நகர்ந்திருக்கவேண்டுமெனவும், சிலநிமிஷங்களின் பின்னரே உயிர் பிரிந்திருக்க வேண்டுமெனவும் அபிப்பிராயப்படுகிறேன். பிரேதத்தின்மீது வேட்டியில்லை. ஆனால் 3-4 அடி தூரத்துக்கு அப்பால் ஓர் வேட்டி காணப்பட்டது. அவ்வேட்டியில் துவக்குச்சூட்டுக் காயங்கள் யாதாயினுங் காணப்படவில்லை.

அன்றையதினமே 5–30 மணியளவில் சுப்பையாவின் பிரேதத்தையும் பரிசோதித்தேன். இறப்பதன் முன்னர் ஏற்பட்ட காயங்களைப் பரிசோதித்தேன். காயங்கள் வருமாறு:

அ. வலதுபக்கத்து நெஞ்சின் நாலாவது விலா எலும்பும் நடுஎலும்பும் பொருந்துமிடத்தில் $\frac{1}{5}$ அங்குல அகலமான ஓர் துவக்குச்சூட்டுக் காயங் காணப்பட்டது. இருதயத்தின் வலப்பக்கத்தைப் பீறிக்கொண்டு பாய்ந்திருந்தது.

ஆ. இடதுபக்கத்து நெஞ்சில் 5-ம் 6-ம் எலும்புகட்கூடாக $\frac{1}{5}$ அங்குல அகலமான ஓர் துவக்குச் சூட்டுக்காயங் காணப்பட்டது. சுவாசப்பையைப்பீறிக்குண்டுபாய்ந்திருந்தது.

இ. மேற்சொல்லிய காயத்தின் கீழ் அதேயகலத்தில் ஓர் துவக்குச் சூட்டுக்காயங் காணப்பட்டது. சுவாசப்பையைப்பிறிக்குண்டுபாய்ந்திருந்தது.

ஈ. 1-ம் 2-ம் எலும்புகட்கூடாக மார்புக்கு நேராக $\frac{1}{5}$ அங்குல அகலமான ஓர் துவக்குச்சூட்டுக் காயங் காணப்பட்டது. சுவாசப்பையினூடாகக் குண்டுபாய்ந்திருந்தது.

உ. வயிற்றினில் 50 சத அளவானதோர் பாரிய துவக்குச்சூட்டுக் காயங் காணப்பட்டது. குடலினூடாகக் குண்டுபாய்ந்திருந்தது. ஆனால் குண்டு வெளிப்பட்ட இடத்தில் 1 ரூபா அளவான காயமாக இருந்தது.

பிணத்தின் முதுகுப்பக்கம் நிலத்திற்படக் கிடந்ததுடன் ஓர் வேட்டி அரையிற் காணப்பட்டது. அவ்வேட்டி பெலமான கயிற்றினால் அரையுடன் பிணைக்கப்பட்டிருந்தது. மடியில் வெற்றிலைப்பையும் வேட்டியினுள் அரைஞாண்கொடியும் காணப்பட்டன. இரு பிரேதங்களினதும் இடைத்தூரம் 12 அடி. இவனது தேகத்திலிருந்து 4 குண்டுகள் எடுக்கப்பட்டன. மரணம் உடனேயே சம்பவித்திருக்கிறது.

இச்சாட்சியை நியாயவாதி குணம்ஸ்பென்சர் அவர்கள் நீண்டநேரம் குறுக்குவிசாரணை செய்தார்.

அதன்பின் சிலசாட்சிகள் விசாரணைசெய்யப்பட்டதின்மேல் பாலைப்பெருமான்கட்டு வாசியாகிய அத்தாப்பு-மனுவல் என்பவர் கொடுத்த சாட்சியத்தின் சாராம்சம் வருமாறு:—

நடந்த சம்பவம் ஞாபகத்திலிருக்கின்றது. அன்றையதினமாகிய வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் நானும் இராமசாமியும சுப்பையாவுமாகச் சேர்ந்து வேட்டையாடுவதற்காகக் காட்டுக்குச் சென்றோம். காட்டினுள் ஒற்றையடிப் பாதை வழியே செல்லுகையில் இராமசாமி முன்னாகவும் சுப்பையா இடையிலும் நான் கடைசியிலுமாகப் போனோம். துவக்குச் சூட்டுச் சப்தத்தைக் கேள்வியுற்றதும அது யாரெனக் கத்தினேன். உடனேயே அதாவது காய்ந்த சருகுகளின்மீது காலடிச் சப்தங் கேட்டவுடனேயே அப்பக்கமாக நான் ஓடினேன். அங்கு காலடிகள் காணப்பட்டன. எனது காது சிறிதளவு கேட்காததினால் எத்தனை வேட்டுகள் கிளப்பப்பட்டன வெனச் சொல்ல முடியாது. இதன் பின்னர் நான் குருவில் குளத்திற்கு சமீபமாக வரும்போது 2-ம் எதிரி துவக்குடன் ஓடுவதையும் 1-ம் எதிரி அக்குளத்தில் தண்ணீர் குடிப்பதையுங் கண்டேன். உடனே 1-ம் எதிரியை நோக்கி “பாவங்கள் நிறைந்தவனே நீ இதனைச் செய்துவிட்டாய். நானும் அங்கு நின்றால் சுடுபட்டிருப்பேன்” எனச் சொல்ல எதிரி ஒன்றும் பேசாது மௌனமாக நின்றான். பின்னர் நான் சம்பவம்நடைபெற்ற இடத்திற்குச் செல்லவில்லை. இதனைப் பற்றிப் பயமிகுதியினால் ஒருவருக்கும் சொல்லவில்லை, ஞாயிற்றுக்கிழமையன்று கபிரியேல்பிள்ளை கேட்டபோதாவது நான் சொல்லவில்லை. நான் பொலிஸ்கோட்டில் நீ இருவரைச் சுட்டாய் அதனுடன் திருப்திப்படவில்லை. என்னையும் சுடுவாய் எனவும் சொன்னேன். பின்னர் நான் சந்தியா என்பவனது விட்டிற்கு வந்தபோது அங்கு நான் இராமசாமியும் சுப்பையாவும் சுடப்பட்டார்கள். அவ்விடத்தில் நானும் நின்றிருந்தால் நானும் சுடப்பட்டிருப்பேன் எனக்கூற இராசாவென்பவன் ‘ஆகா’ எனக்கூறி ஆச்சிரியப்பட்டான். பின்னர் 2-ம் எதிரி கையிலோர் துப்பாக்கியுடன் அங்கு ஓடிவந்தான். அவன் என்னிடம் “ஒருவருக்கும் சொல்லாதே யாருக்காவது நீ சொன்னாயேயானால் நான் உன்னைச் சுடுவேன். எனச் சொன்னான்.”

அதன் பின்னரும் சில சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டன.

ஈற்றில் எதிரிகளது வாக்குமூலங்கள் வாசிக்கப்பட்டன. முதலாவது எதிரியாகிய கிட்டினன்-குருசாமி என்பவன் 9–4–35ல்கூறியவற்றின் சாராம்சம்:“ கடந்த வியாழக்கிழமையன்று மனுவல், சந்தியா, இராசா முதலியவர்கள் மீன் பிடிக்க வரும்படி அழைத்தார்கள். யாக்கோபுவும் வந்தான் அன்று வேட்டைக்கும் போக வேண்டுமெனச் சொன்னார்கள்.

“வெள்ளிக்கிழமைகாலை 6 மணியளவில் நானும் இரண்டாம் எதிரியும், சந்தியாவும், இராசாவுமாகக் காட்டிற்குப்போனோம். நாங்கள் வெளியிடத்திற் போனபொழுது ஓர் தொகையான பன்றிகள் கூட்டங் கூட்டமாக வந்தன. நான் சுட்டேன். பன்றிகள் காயமடைந்தன. நாங்கள் தேடினோம். சந்தியாவும் இராசாவும் பிள்ளைகளுக்குப் பால் இல்லாதபடியால் நாஙகள் பால்வாங்கவேண்டும், நீங்கள் போய்ப் பாருங்கள் என்றார்கள். நானும் 2-ம் எதிரியும் பன்றிகளைத் தேடிப்போன இடத்தில் யானை மாதிரி ஓர் உருவந் தெரிந்தது. உடனே 2-ம எதிரி சுட்டான். யானை மாதிரிச் சப்தமுங்கேட்டது. கடைசியாக ஐயோ! ஐயோ! எனச் சத்தங்கேட்டதால் மனிதனின்குரல் கேட்கப்படுகிறதென நினைந்து இருவரும் ஓடினோம். நாங்கள் குளத்தருகே இறங்கியபோது மனுவல வேறுவழியால்வந்து எங்களைச் சந்தித்தான. அந்நேரத்தில் 2-ம் எதிரி வேறுபாதையால் விட்டிற்கோடினான். நானும் மனுவேலும் போகும்பொழுது ரங்கசாமியைச் சந்தித்தோம்.”

இரண்டாவது எதிரி 9-4-35ல் கூறியவற்றின் சாராம்சம்வருமாறு:-

“நானும் மற்றவர்களுமாக வெள்ளிக்கிழமை அதிகாலையில காட்டிற்கு வேட்டைக்குச் சென்றோம். சந்தியா என்பவன் ஓர்துவக்குடனும் 1-ம் எதிரி முத்துக்கருப்பனுடைய துவக்குடனும் வந்தார்கள். காட்டிலே ஓர் தொகையான பன்றிகளைக்கண்டோம். நான் சந்தியாவிடமிருந்து துவக்கை வாங்கினேன். சந்தியாவும் இராசாவும் போனதன்மேல் நானும் 1-ம் எதிரியும் சிறிதுதூரத்திற்குச் சென்றோம். அப்போது 1-ம் எதிரி கையைக்காட்ட நான்நின்றேன். உடனே முதலாம் எதிரி சுட்டான். சூடுபட்ட மனிதர்கள் ஐயோ எனக் கத்த நாங்கள் ஓடினோம. 1-ம் எதிரி தனது துப்பாக்கியை எறிந்தான். சுப்பையாவும் இராமசாமியும போன இடத்தில் எஙகளுடைய குண்டுகள் அவர்களுக்குப் பாய்ந்தனஎனச் செவிட்டு மனுவலுக்கு 1-ம் எதிரி கூறினான்.”

அதனபின்னர் நீதியரசர் யூரிமார்களுக்கு வழக்கின் விபரத்தை எடுத்துக்கூறினார். சிறிதுநேர யோசனையின்பின் யூரிமார்கள் ஏகமனதாக எதிரிகள் யாதொருவிதமான குற்றச் சாட்டுகட்கும் குற்றவாளியல்லர் எனக் கூறினார்கள். நீதியரசர் எதிரிகளை நோக்கி “இது உங்களுக்கோர் படிப்பினையாக இருக்கின்றது. காட்டிலே யாதுகாணப படுகின்றதெனக் கவனியாது இலக்குவைப்பது மிகவுங் கூடாது. இனிமேல் எச்சரிக்கையாகவிருங்கள்” எனக்கூறி எதிரிகளை விடுதலைசெய்தார்.


## அச்சு வேலைகள்

| | |
|---|---|
| ஞாபகபத்திரங்கள் | சிட்டைப்பிரதிகள் |
| சுற்றறிக்கைகள் | தரிசனப்பத்திரங்கள் |
| விலைப்பட்டிகள் | சிறு விளம்பரங்கள் |

பெரிய எழுத்தில்

சுவர் ஒட்டி விளம்பரங்கள்

நாடக அறிக்கைகள்

இன்னும்

இவைபோன்ற சகல அச்சுவேலைகளும், அழகாகவும் காலக்கிரமப்படியும் குறைந்த கிரயத்திற் செய்து கொடுக்கப்படும்.

வெளியூரிலுள்ளவர்கள் முற்பணமனுப்புதல்வேண்டும்

## திருமகள் அச்சியந்திரசாலை

சுன்னாகம்

**பத்திரக்கிரயம்**
இலங்கை, இந்தியா, பர்மா ரூபா 4.
மலாய்நாட்டுக்கு வெள்ளி 4.
சீவியசந்தா ரூபா 40.
தனிப்பிரதி சதம் 5.
இந்தியாவுக்கு ,, அணு 1.
மலாய்நாட்டுக்கு ,, காசு 5.

# ஈழகேசரி

**விளம்பரவிகிதம்**
முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 7-00
,, அரைக்கலம் ,, 4-00
,, காற்கலம் ,, 2-50
அரசியல்சம்பந்தமான விளம்பரங்களுக்குச் சலார் வேறு.

தொகுதி—சு. | யாழ்ப்பாணம், சுன்னுகம்: யுவஷு ஆவணிமீ ௩௰௨ (15-9-35) ஞாயிற்றுக்கிழமை | பகுதி—கக.


## தாமரைப்பூ.


வெள்ளவத்தை, குல. சபாநாதன்.


தாமரையென்பது ஒருபேரெண்ணினையும் கொடியினையும் உணர்த்தும் பலபொருளொருசொல்லாயும், தாவுகின்ற மரையெனப் பொருள்படும் வழி வினைத்தொகைச் சொற்றொடராயும் நின்று பொதுமொழியெனப்படுமாயினும், பூவென்னுங் குறிப்பான் ஒருசார் நீர்ப்பூவைக் குறிக்கும் ஒருபொருளொருசொல்லெனப்படும.

பூக்களுட் பொலிந்தது தாமரையென்பதே தமிழர்தம் கொள்கை. இத்தாமரையுள், செந்தாமரை, வெண்டாமரை, மலைத்தாமரை, ஓரிதழ்த்தாமரை, குழித்தாமரையெனப் பலவகையுண்டெனவும், இவற்றுட் சிறந்தது செந்தாமரையெனவுங் கூறுப.

"பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச்
சாம்புநத, மாவிற் கருமுனியா யானைக்—
கமரும்ப, ரேவிற் றிருமா லெனச்சிறந்த
தெனபவே, பாவிற்கு வள்ளுவர்வெண்பா"

எனக் காவிசாகரப் பெருந்தேவனர் எடுத்துக்காட்டியதனல் தாமரைக்குரிய சிறப்பு அதன் இனையாகிய பூவினுலேற்பட்ட தொன்றுமென்பது வெளிப்படை. இவ்வெடுத்துக்காட் டுவமையிற் கிளந்த உவமானங்களுள் பூவினை முதற்கண் அமைத்திருத்தல் சிறப்புடைப்பொருளை முந்துறக் கிளத்தல் எனும் உத்திபற்றிப்போலும்.

"பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே"

என நாவுக்கரையர் நவின்ற உண்மையும் ஈண்டு நினைவுகூர்தற்பாற்று.

தாமரைப்பொய்கை: ஒரு நாட்டிற்குத் தடாகமிருத்தல் இயற்கை வனப்பை மிகுவிக்குமெனினும், அத்தடாகத்தின்கண் தாமரை பொலிந்து விளங்காவிடின் அது தன்னழகிற் குறைபாடுடைத்தாகிவிடுமெனும் உண்மையினைப் புலவர்கள் பன்முறை நினைவூட்டுவார்கள். இதனை ஒரு புலவர் மிகவழகாக எடுத்துக்காட்டுகின்றார்.

"சந்திர னில்லா வானந் தாமரை யில்லாப்
பொய்கை, மந்திரி யில்லா வேந்தன் மதகரி
யில்லாச் சேனை, சுந்தரப் புலவ ரில்லாத்
தொல்சபை சுதரில் வாழ்வு, தந்திக ளில்லா
வீணை தனயிலா மங்கை போலாம்."

இன்னும்,

"நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்
குளத்துக் கணியென்ப தாமரை பெண்மை
நலத்துக் கணியென்ப நாணந் தனக்கணி
தான்செல் லுலகத் தறம்"

என விளம்பிநாகனர் விளம்பியிருத்தலும் ஈண்டு நோக்கற்பாலது.

தெய்வத்தாமரை: தாமரையினைத் தமிழர்கள் 'தெய்வத்தாமரை' யென அழைத்தமை வெற்றுரையோ அன்றே என்பதைச் சிறிதாராய்வாம். தமிழர்கள் ஆழ்ந்த கருத்துக்களை உள்ளடக்கியே பெரும்பாலும் பெயரிடுவர் என்பதற்கு இதுவுமோர் சான்றாகும். இப்பூவானது தெய்வங்களான் நனி விரும்பப்படுவதொன்றென்றும், பல தெய்வங்கட்குப் பிறப்பிடமாயும் உறைவிடமாயுங் கருதப்பட்டமையான் தெய்வத் தாமரையென்றும் பண்டைக்காலந்தொட்டே போற்றப்பட்டுவந்தது. இப்பூவானது கடவுள் சூடுதற்குரியதென்பது.

"நீர்நணிப் பிரம்பி னடுங்குநிழல் வெரூஉ
நீத்துடை நெடுங்கயந் தீப்பட மலர்ந்த
கடவு ளொண்பூ வடைதத லோம்பி"

எனும் "பெரும்பாணற்றுப்படை" யடிகளாற் பெறப்படுதல் காண்க.

பத்மநாபன்: இவ்வுலகம் யாவையும் படைத்தவன் பிரமன். இப்பிரமன்தானும் திருமாலின் கொப்பூழிற் றோன்றிய கமலத்திற் றோன்றியவனாகையால் இப்பூவே உலகத்தின் தோற்றத்திற்கு பிரமதேவனிலும் சிறந்த காரணமென்பது வலியுறும். நான்முகனைப் பயந்த தாமரையினை நக்கீரர் திருமுருகாற்றுப்படையில்,

"எழுறு ஞாலந் தன்னிற் றோன்றித்
தாமரை பயந்த தாவி லூழி
நான்முக வொருவற் சுட்டி"

எனக் குறிப்பிட்டிருத்தலே போதிய சான்றாம். இன்னும் பல புராணங்களிலும் இவ் வரலாற்றினைக் காணலாம்.

பொறிவாழ் பூ: பூவுக்குத் தாமரை சிறந்ததென்ப துண்மையே யெனினும், பூவென்று சிறப்பித்துச் சொல்லக்கூடியது செய்யோன் உறை செந்தாமரை யென்பர் சிவப்பிரகாச சுவாமிகள். (பூவெனப்படுவது பொறிவாழ்பூவே) திருமகள் திருப்பாற்கடலினின்றும் தோன்றிய ஞான்று தாமரை மலரிற் றோன்றினளென்றும், அவள் தன் இரு கரங்களிலும் இரு தாமரைப் பூப பிடித்திருக்கிறளென்றும், உபதேச காண்டம கூர்மாவதாரச் சருக்கம் 39-ம் 40-ம் செய்யுட்களிற் கூறப்பட்டிருத்தலைக் காண்க. தாமரையில் திருமகள் தங்குதலால் தாமரை சிறந்ததா அன்றேல் திருமகள் சிறந்தாளா வெனும் ஆசங்கையினையெழுப்பி விடையிறுக்கு முகத்தான், பேராசிரியர் தம் திருக்கோவையுரையில், தாமரையின் சிறப்பினை மிகவழகாகக் குறிப்பிட் டிருத்தலால் அதனை முற்றும் குறிப்பிட விரும்புகின்றாம்.

"இனித் திருமகட்குந் தாமரையெனினு மமையுமென்று அமைவுரைத்ததென்னை? இதனை யுவமையாக்கக்குறையென்னையெனின், திருமகளாலே தாமரை யுயர்ந்ததாம, தாமரையினது சிறப்புக் கூறிற்றில்லையாம். என்னை, எல்லாராலும் விரும்பப்பட்ட அழகு அவட்குண்டாகையாலே திருமகளென்று பெயராயிற்று. அங்ஙனம் பெருமையுடையவளும் இதன் சிறப்பு நோக்கியே யிதனிலிருந்தா ளல்லது தன்னாலே யிதற்குச் சிறப்புப்பெறவேண்டியிருந்தாளல்லள். ஆகலாற்றாமரைக்கொத்ததும் மிக்கதுமில்லை. அங்ஙனம் பெருமை யுடையவளாலும் விரும்பப்பட்டதாகலான் திருவென்பது கண்டாரால் விரும்பப்படுந்தன்மை நோக்கமென்பது பெற்றாம்!

தவளத்தாமரை: திருமகள் செந்தாமரையிலுறைய அவளுடைய மருமகளாகிய கலைமகள் வெண்டாமரையில் உறைகின்றாள். இவள் வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைக் கமலத்தே வீற்றிருக்கின்ற செய்தி பல புராணங்களிலும் புலவர்களின் கலைமகள் வணக்கத்திலும் கூறப்பட்டிருக்கின்றது.

பார்ப்பதி: இறையருளின் உருவாய பார்ப்பதியும் இமயமலையரசனுக்கு மகளாக அவதரித்தபொழுது தாமரைப்பூவின்கண் தோன்றினாள் எனக் கந்தபுராணம் கூறும்.

"மெய்த்தவ மியற்றிய வெற்பன் காணிய
வத்த— மலருமோ ராவிந் தத்தின்மேற்
பைத்ததோர் குழவியின் படிவத் தற்றன
ளொத்திறத் தயிரையு மீன்ற தொன்மை
யாள்" (பார்வதிப்படலம்)

குன்றமெறிந்த முருகவேளும் இப்பூவுலகின்கட் டோன்றிய ஞான்று பதுமமே பாயலாயிற்றெனக் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் மிகவழகாக வெடுத்துக்காட்டலோடு தாமரையின் சிறப்பினையும் அதுநோற்ற தவத்தின் பெருமையினையும் திருவவதாரப் படலத்தில் நயமாக விரித்துக் காட்டியிருக்கின்றார்கள். அச்செய்யுட்களுள் இரண்டினைமட்டும் குறிப்பிடுகின்றாம்.

"மறைகளின் முடிவால் வாக்கான் மனத்தி
ஞலளக்கொ ணமை, னிறைவுடன் யாண்டு
மாகி நின்றிடு மமல மூர்த்தி, யறுமுக வுரு
வாய்த் தோன்றி யருளொடு சரவ ணத
தின், வெறிகமழ் கமலப் போதின் வீற்றி
ருந் தருளி னனே" (16)

"வளஞ்செறி யினைய பாலால் வான்சர வ
ணமாம பொய்கைத், தளஞ்செறி பதும
மொன்றிற் சராசரம யாவுங காப்பா, னுள
ஞ்செறி கருணை யெய்தி யொப்பிலாக கு
மர மூர்த்தி, யிளஞ்சிறு மதலை போல வி
னிதுவீற் றிருந்தான மன்னோ" (113)
(திருவவதாரப்படலம)

இன்னும் சூரியபகவான் தனது இருகரங்களிலும் தாமரைப்பூவைப பிடித்திருத்தல், "தண்டாமரையேந்திய வானவன்" எனும் கந்தபுராணவடியால் அறியக் கிடக்கின்றது. சைனர்தம் அருகக்கடவுள் ஆகாயத்தில்தோன்றிய தாமரைப் பூவில் நடந்துவந்தாரென்பர். அதுபற்றி அக்கடவுளைப் பூமிசை நடந்தானெனப் பெயர்கூறுப. எனவே முற்றத்துறந்த உடையிலாத துறவியினுள்ளத்தையும் தன்வயப்படுத்திற்றாயின், இதனாற் கவரப்படாத உள்ளமுடையாருமுலகத்துளரோ? புத்த பகவானுடைய பாதம் தாமரைப் பீடிகையில் இருக்கின்றன என்பதால புத்தருடையபாதம் தாமரையிலேதான வைக்கத்தகுந்தது என்பது குறிப்பு. எல்லாச் சமயத்தார்க்கும் தாமரை பொது.

திருமாலின் காட்சியைப் புனைந்துரைக்கும் கம்பர் அவனுடைய எல்லா அவயவங்களுடைய அழகுக்குங் காரணம் தாமரைப்பூவொத்தமையே யென்று கூறுதலால் தெய்வங்களும் தாமரையை வழிபடவேண்டுதல பெறப்படும். "கருமுகில் தாமரைக் காடுபூத்து" என வந்தது காண்க.

இங்ஙனம் பலதெய்வங்கள்தோன்றற்கும்உறைதற்கும்இடமாயுள்ள தாமரையினைத் தெய்வத் 'தாமரை'யெனப் போற்றிய தமிழரின் நுண்மாண் நுழைபுலம் இருந்தவாறென்னே! பூக்களின்பயனை மிக நுட்பமாகக் கணடனுபவித்தவர்கள் தமிழர்களேயென்பதற்கையமுண்டோ? தாவரநூல் தமிழர்கட்கோர் புதிய துறையன்றென்பது இதனாற் பெறப்படுதல் காண்க. இவற்றைத் தொகுத்துக்கூறாக் காரணம்பற்றி இவற்றின் நுட்பங்களை நம்முன்னோர் அறிந்திலர் எனக்கூறல் சிறிதும பொருந்தாமை காண்க. வரலாற்றோடு சேர்த்து உரைக்குங்காற் பெருஞ்சுவையை நுகர்ந்த உள்ளம் தனித்துக்கூறலில் பெறுஞ் சிறுசுவைக்கட் செல்லாதொழிந்தமையின் அவர் அங்ஙனம் தனித்தெடுத்துத் தொகுத்திலர். ஏனைய பலவற்றையும் தொகாமைக்கும் இதுவே காரணம.

சீதாபிராட்டி: இவள் முற்பிறப்பில் வேதவதி எனும பெயருடன இருந்தாளென்றும, இராவணன இவளைத் தீண்டியதால இவனுடைய அரசை யழிக்கத் தீர்மானித்துத் தீக்குளித்தனளென்றும், இவள இலங்கையில் ஒரு தாமரைப்பொய்கையில் தாமரைபபூவிற் பிறந்து சிவபூசைநிமித்தம பூக்கொய்ய வந்த இராவணன்கண்காண இருந்தனளென்றும், இராவணன் இக்குழந்தையை எடுத்துச்செல்ல அங்கிருந்த நிமித்திகர் இக்குழந்தை யிவ்விடமிருப்பின் இலங்கை யழியுமெனக் கூறினரென்றும், அதனல் அக்குழந்தையை ஒரு பெட்டியில் இட்டு கடலில் மிதககவிட, அது மிதிலை நகரையடைந்து சனகனல் கண்டெடுக்கப்பட்டதென்றும், கூர்மபுராணம் கூறும். கம்பர் தாமரையிற் பிறந்த கதையினைக்குறிப்பிடாது சனகனுடைய வீட்டுநிகழ்ச்சியினின்றே தொடங்குகின்றார். (தொடரும)


**எதிர்பாருங்கள்!**

உயரிய நூல்! ஒப்பற்ற விளக்கம்!!

திரு. வே. சிவக்கொழுந்து
அவர்கள் இயற்றிய

**புதிய தமிழ் - - ஏழாந்தரக் கணிதம்**
(அச்சில்)

இஃது பாடீகணிதம், அக்ஷரகணிதம், கேத்திரகணிதம் எனும மூனறு பகுதிகளும இணைக்கபபெற்று பல உதாரணக் கணக்குகளுடனும் நூறறுககணககான அப்பியாசக் கணக்குகளுடனும உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிடபபெறறு 200 பககங்கள்வரையில் கொண்டுள்ளதாய் அதி சீக்கிரம் பிரசுரமாகும். ஜே. எஸ். ஸி., எஸ். எஸ். ஸி. வகுப்புகளுக்கு உபயோகிக்கத தக்கது.

Publishers:
வடலங்கா புஸ்தகசாலை
கடைத்தெரு, பருத்தித்துறை
(25) 1-9-35


மக்களுயிர்க் குடலோ டுண்டாகிய சம்பந்தத்தை அன்போடு பொருந்தவந்த பயனென்பர்.

கதைப்பகுதி.

# ஆண்பெண் சமத்துவம்

— அல்லது —

# அமாராவதி கண்ட உண்மை.

(திருமதி. இ. கமலாம்பிகை, வேரவில்.)

"நான் நினைத்த சுவர்க்கமல்ல, குடும்பவாழ்வு" "அடிமையின் குழி என்பதை நான்முன் அறிந்திலேன்" "ஜீவியத்தில் நான் செய்த பிழைகளில் மாபெரும் பிழை பிறிதொன்றில்லை" என்னும் இன்னோரன்ன விடைகளே அமராவதியின் வினுக்களுக்கு வெளிவரலாயின!

இருபது வயதிற்கு மிகுதியெனக் கூடா இளம்மங்கை. செல்வத்துரை நீதிபதியின் ஏக புத்திரி. வாழ்வில் "தாழ்வை"ப் பார்த்தறியாப் பெண். காலத்துக்கேற்ற கல்விகற்ற கன்னிகை. ஆண்பெண் சமத்துவத்தில் அதிக பிரீதியுடையாள், அமராவதி.

உபகாரவேதனம் பெற்று வரும் தந்தையின் பெருநிலையால் செல்வர், ஆங்கிலங்கற்றவருறவே அமராவதியுடையதாயிற்று. இளம் மனைவியர் ஓதுங் குடும்பந்தொல்லைகளே அவள் கிரகித்த இல்லாள் அடையக் கூடிய இன்பங்கள்! அவள் வயதுடையோர் மனதிலெழும் மணவாழ்க்கையின் ஆசை அவளுக்கில்லாது போனதல்ல. இல்லை! இந்த ஆசையே, தன்னுடன் உறவாடும் கன்னியர் விவாகத்தைப்பற்றிக் கொண்டிருக்கும் எண்ணங்களைப் பிரித்தறிய ஏவியது.

இல்லற வாழ்க்கையே எல்லாம் என நினைத்து, இன்பமனுபவிக்கவே விவாகஞ்செய்த தன்வயதோடொத்த அல்லது சில வருடங்கள் கூடிய கன்னியர், "கணவனுடன் வாழ்வு எல்லாம் அல்ல" என்பதைச் சொல்லச் செவியுற்ற அமராவதி தான் இதில் அகப்படுதல் கூடாதென்று நிச்சயித்தது புதினமல்ல. கனவிலும் இக்கன்னியர் மொழிகளையே கண்டு திடுக்கிடுவாள்! "சிருஷ்டிகாலத்தில் மனுஷனுக்குத் துணையாயன்றோ மனுஷியையும் கடவுள் படைத்தார்? எச்சமயத்தோரெனிலும் இருவர் துணைவன் துணைவியாய் இணைக்கப்படும் பொழுது "வாழ்விலும் தாழ்விலும்............" என்று புத்தி புகட்டப்படுகின்றனரே! எங்கேனும் பெண் புருஷனுக்கு அடிமையென்றதை யான் படித்ததில்லையே. அப்படியாக உண்மையில் உலகில் நடப்பதென்ன? பெண்கள், பிணங்கள் போல் புருஷர் பின்னே திரிய, புருஷர் தாம் நினைத்தவைகளை நினைத்தபடியே செய்கின்றனரே! பெண் "பேதை" என்று கூக்குரல் போடுகின்றனரே!! என்ற எண்ணங்களே அவள் மனதை வருத்த, தான் அந்த வாழ்வில் ஈடுபடுவதில்லையென்றும், ஈடுபட்ட தன் சாதியாரின் கட்டுக்களைத் தான் படிப்படியே அறுத்தெறிதல் வேண்டுமென்றும் நிச்சயித்தாள்.

இந் நினைவுகள் அமராவதி மனதில் மாருப்புண்கள் போன்றேயிருக்கின்றன. "விவாகம்" யாருக்கு மெனின் அடங்காக் கோபம் அவளுக்கு உண்டாகும்! ஏன்? ஏன் இவ்வாண்மக்களுக்கு நாங்கள் அடிமைகளல்லவென்று காட்டும் வரையும் இப்பெண்கள் தாம் விவாகஞ் செய்வதில்லையென்று நிச்சயிக்கக்கூடாது. இன்று தன்னுடன் இல்வாழ்க்கையைப்பற்றி இடித்து இழிவாய்க்கதைக்கும் கன்னியரே இரு நாட்கள் செல்லமுன் ஆடவருக்கு அடிமைகளாய் வர உடன்படுகின்றனர்! அமராவதியால் இவைகளை நினைக்கவே முடியவில்லை!!

சில காலம் கழிந்தது. சட்டசபை அங்கத்தினரைத் தெரியும் காலம் அணுகுகின்றது! அமராவதியோ வெகு அவதானமுடையவள். "என்னைத் தெரிவு செய்யுங்கள்" என்ற மந்திரத்தைச் செபித்துக்கொண்டு ஒவ்வொரு குடிசைகளிலும் நுழைகின்றார்கள். அவளை அறியாதே, அவள் நாளும் இத்தொழில் பற்றிக் காணும் காட்சிகள், அவள் எண்ணங்களை மாற்றுகின்றன. உலகத்தின் மறுபுறங்களையும் நேரே காண்கிறாள். வறியகுடும்பத்தலைவிகளுடனும், "தீண்டப்படாதோர்" என விலக்கப்பட்ட பெண்கள் திலகங்களுடனும் நெடுநேரம் சம்பாஷிக்கிறாள். "ஓ! இந்த அமைதியீனத்தை இவ்விடம் காணவில்லையே; ஒவ்வொரு குடும்பமும் இன்பமாய் வாழ்கின்றதே; ஆண் பெண் 'இருபாலாரும் தத்தம் கடமைகளைச் செய்து அன்பும் சமாதானமும் உடையவர்களாய் வாழ்கின்றனரே; வேலையில்லா நேரங்களில் இருபாலாரும் எவ்வளவு சமாதானமாய்ச் சம்பாஷித்து இன்பத்தையோ அன்றி இன்னலையோ சரிவரப் பிரிக்கின்றனர். அன்பின் பெருகிய அந்த அழகிய பிள்ளைகள்! பெற்றோர் மனம் மகிழக் குதித்துக் கூத்தாடுகின்றனர். இக்காட்சியை விட இன்பத்தைத் தரும் காட்சி வேறு முளதோ? என்று நினைக்கிறாள். நேரே கண்ணுறுகிறாள். இல்வாழ்வின் இன்பங்களை!

ஓர் வீட்டின் தலைவி பொல்லா நோய்வாய்ப்பட்டு வருந்துகிறாள். தலைவன், தன் கவலையை மனையாளறியின் அவள் அக்கவலையிலும் பங்கு பற்ற அவள் மனங் கூட வருந்துமென்று பயந்து குடிசையின் வெளிப்புறத்திலிருக்கிறான். மனையுள் மனையாளுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்த அமராவதி வெளியே வருகிறாள். புருஷன் புலம்புவதைப் பாக்கிறாள். அவன் கண்களினின்றும் கண்ணீர் மலை அருவியென ஓயாது பெருகுகின்றது. "அம்மா! தாங்கள் எம் குடிசைக்கு வர நாம் என்ன புண்ணியந்தான் செய்தோமோ யான் அறியேன். என் அரசியின் நிலையைத் தாங்கள் கண்ணாரக் கண்டீர்களே! அவளின் ஆவி இன்னும் சிறிது நேரத்தில் பிரிந்து விடும் போல் தெரிகிறது. வைத்தியரோ "தங்கள் பெயருக்குப் பங்கம் நேரக்கூடும்" என்று போலும் உண்மையைச் சொல்லுகிறார்களில்லை. என் உயிரின் உயிரைக் காப்பாற்றுவார்களாயின் என் உயிரையே தத்தஞ் செய்து அவர்களுக்குக் கொடுத்து விடுவேன். வாழ்விலும் தாழ்விலும் இருவரும் சரிவரப் பங்குபற்ற வேண்டுமென்று விவாகத்தன்று சொன்னார்களே! என் சாவிலும் என்று சேர்க்காது விட்டனரோ? நாங்களிருவரும் வெகு இன்பமாய் வாழ்ந்தோம். துன்பத்தையே அறியோம். அம்மா! எத்தனை நாட்கள் எத்தனை நேரம் நாம் ஊணையில்லாதிருந்திருப்போம். இது துன்பத்தையே கொண்டுவரவில்லை. எம்பட்டினியை அயலவரே அறிந்திரார், என்று சொல்லிக் கொண்டே "மகனே"!! என்று கூவி அழைக்கிறான். சூரியன் கதிர்கள் நிர்வாணத்தை மறைக்க நான்கு வயதிற்கு மேற்படாத குழந்தை ஓடி வருகின்றது! கட்டி முத்தமிடுகிறான். "பிள்ளை! இப்பிள்ளையொன்றே எம் அன்பின் உபகாரமாக ஈசன் கொடுத்த செல்வம். "படைத்தவன் படியளப்பான்" என்று சொல்லுகின்றார்களே. அப்படியெனின், பெற்றாரின்பார்வையை இன்னும் தேவையுடைய இப்பிள்ளையினின்றும் அன்னையை ஐயன்பிரிப்பாரா? இல்லை! "என்று சொல்லிக்கொண்டு" பேய்மனமே! ஏன் வருந்துகின்றனை? உலகத்தையறியா இப்பெண்ணுக்கு முறையிடுதலில் என்ன புண்ணியம்? நீ உன் பிதாவைநோக்கி அவன் சிந்தனையில் மகிழும்நேரத்தை ஏன் வீணுக்குகின்றனை! என்று தன்மனதை நோகிறான். இருந்த இடத்தைவிட்டு பித்தம்பிடித்தவன்போ லோடுகிறான். அமராவதி அசையாதேநிற்கிறாள்! நினைவா? அன்றிக் கனவா? ஒன்றுமே தெரியவில்லை!

சிறிதுநேரம்—வெகு சிறிதுநேரம்! யாரோ பாடுகின்றனர்! அன்புததும்பும்பாட்டு. "இனியேதெனக்குன்னருள்வருமோ.................."உண்மை! இச்சிறு குடிசையைக்கொண்ட சிறுவளவின் ஓர் பக்கத்து நின்றே இத்தொனி பிறக்கின்றது. தூண்டல் வாய்ப்பட்ட மீன்போன்று அமராவதி அவ்வருள்சப்தம் வந்தவழியே, இழுபடுகிறாள். நாலுபக்கமும் தென்னோலைகொண்டு அடைக்கப்பட்டிருக்கின்றது. பூமயமாய ஓர் நாற்காற்பந்தல் தோரணங்கள் வரிசைவரிசையாக வெளியே தொங்குகின்றன. அணித்தேதவருகிறாள். நடுவே நன்குகழுவப்பெற்றவோர் கருங்கல். நாம் எவ்விடமேனும் பார்க்கக்கூடிய ஓர் சிற்பிகைப்படாதகல்! ஓர் விசேஷமுமே அதை ஒட்டியில்லை. கருணைமிகு கண்களில்லை; நாம் கொடுப்பதை ஏற்கவோ கேட்பதைக் கொடுக்கவோ கைகளில்லை; உள்ளத்தை உருக்கும் திருநடனத்தையே காணோம்! எம்மை ஊட்டும் அன்னையே பக்கத்திலில்லை. கல்! இக்கல்லின்முன் பலவிதப்பழங்களும் பரவப்பெற்றிருக்கின்றன. பச்சை அரிசி பலவிதமாய்ப் பொங்கிப்படைக்கப் பெற்றிருக்கின்றது. நெய்விளக்குகள் பந்தரில் உட்பரப்பை வெளிப்படுத்துகின்றன. சாம்பிராணி முதலிய வாசனைத் திரவியங்கள் காற்றைப்பற்றி நிற்கின்றன. இவைகளைக்கடந்தப்பால் உலக உணர்ச்சியற்ற ஓர் உருவம் தெரிகின்றது. கண்களால் நீர்வடிகின்றது. நா ஈசனின் அருளை இடைவிடாது செபிக்கின்றது. அவன் பெயரைப் போற்றுகின்றது. இவையில்லையெனின் கல்லுருவம் என்றே சொல்லலாம். வேறவையவ அசைவையே காணோம்! அமராவதியின் கைகளும் தலைமேல் செல்கின்றன. கூப்பித்தொழுகிறாள். வேறெதுசெய்ய முடியும்? கடவுளெங்குமிருக்கிறாரெனின் அக்கல்லில் இல்லாதுபோதலெப்படி?

சூரியன் மேற்றிசையில் மறைகிறான். இக்காட்சியைத் தான் மட்டும் கண்டு களித்தல் கூடாதென்று போலும்! சந்திரன் வெளித் தோற்றுகிறான். தன் தண் கதிர்களைப் பரப்புகிறான். சாந்தம்!-சாந்தம்!! இந்தச் சாந்தத்தைக் குழப்ப மனமில்லான் போன்று வாயுதேவன் மெல்லெனவே வீசுகிறான்.

மகளே! மகளே!! அணித்தேயிருந்த எளிய குடும்பங்களைத் தன்னைத் தெரிவு செய்யுமாறு வேண்டிச் சென்ற புதல்வியைத் தேடித் தந்தை வருகிறார். அமராவதி செவிகளில், "மகளே" என்ற சப்தம் விழுகின்றது. தன்னை நோக்கி நடக்கும் தந்தையைத் திரும்பிப் பார்க்கிறாள். "அப்பா! வருகிறேன். தங்களை வருத்தியதற்கு என் மனம் வருந்துகிறது" என்று சொல்லிக் கொண்டே தேடி வந்த தந்தையைப் பின் தொடருகிறாள். அவளால் வேறு பேசமுடியவில்லை!

"என்ன அறியாமை! உலகத்தின் மறுபக்கத்தை நான் இதுகாறும் அறியாதிருந்தேன். செல்வத்தில்-பணச்செருக்கில் அமிழ்ந்தி இல்லத்தின் உண்மை இரகசியத்தையறியாத, உண்மை இன்பத்தை நுகராத பெண்களின் பேச்சைக் கேட்டு ஏமாற்றப் பட்டேன்; இல்லாள் பெறுமின்பமே யின்பம்! இல்லாளின் இடத்தை.... அந்த வருத்தத்திலமிழ்ந்தி அவஸ்தைப்படும் பெண் தின் புருஷன் மனதில் பெற்றிருக்குமிடத்தை விட, பெண்ணெனப் பிறந்தோர் பெறக்கூடிய பிறிதோர் உயர்விட முண்டோ? அவள் செய்த புண்ணியமே புண்ணியம். அவளின் அடிமைநிலைமை தெரியவில்லையே! அவளின் பொருட்டல்லவா புருஷன் அங்கு நின்று புலம்புகிறான்? அடிமை! என்ன ஆச்சரியம்!! அவள் அடிமையாயின் அவன் ஏன் அவள் பிரிவை நினைந்து இவ்வளவு மனவருத்தமுறுகிறான். சாகிறேன் என்கிறான்! ஓ! என் சிநேகிதிகள் கண்களில் இவ்வில்லற நிலைமை ஏன் தெரியப்பெறாது சென்றது? பிள்ளை! தங்களிருவரின் பிரிவு படா அன்பின் கொடையாமே! இல்வாழ்க்கை சிறப்புற இருவரின் இடையறு அன்பு வேண்டும். என் சிநேகிதிகள் அன்பின் மயத்தை என்னென்றறியார்! இவ்விடமோ அன்பு மயமாகவேயிருக்கிறது. உத்தியோகத்திற்கும், பொருளுக்கும் ஆடவர் தேடப்படின் பெண்கள் வரிக்கப் பெறின் இல்லறம் நல்லறமாவதெங்ஙனம்? அமைதியீனமே அங்கு நிலவுமென்பதற்கு ஐயமுமுண்டா? நாகரீகக் கல்வியும், இயற்கைக்கு மாறுபாடாய கொள்கைகளும் எமக்களித்த பலன் இதுதான் போலும்! என்ன பேதமை! இவ்வினிமையுடைய இல்லறத்தையா நான் வெறுத்திருந்தேன்? இக்குடிசைக்கு இன்று யான் சென்றிராவிடின், மனையாள் பெறும் பெருமிடத்தையும், அடையும் இனிய இன்பங்களையும் நான்

(தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.)

இந்திய வங்கி லிமிற்றெட்
THE INDIAN BANK Ltd.
[Incorperated in British India in 1907]
ஷை வங்கியின் கிளை ஸ்தாபனம் ஒன்று சென்ற யூன்மீ 13உ வியாழக்கிழமைதொடக்கம் யாழ்ப்பாணம் பெரியகடையில் எஸ். கே. கந்தையாச் செட்டியார் கட்டட மேல்மாடியில் ஸ்தாபிக்கப்பட்டுச் செவ்வனே நடைபெற்று வருகிறதென்பதை யாவருக்குந் தெரிவித்துக்கொள்ளுகின்றேம்.
(2) 26-35.

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டு விசாரணை—18

# நடுத்தெருவில் தாலிகட்டப்பட்ட நல்லூர் சரஸ்வதி வழக்கு.

## கனகரத்தினத்தைத் தளையசிங்கமாக்கித் தளையசிங்கத்தை மணமகனுக்கிச் சரஸ்வதியைப் பற்றிக்கொண்ட கந்தையா.

## கலியாணத்துக்குக் கிலிற் நகைகள்.

சீதனஉறுதியும் - ஈட்டுறுதியும் கள்ளக் கையொப்பமும்.

## 6 எதிரிகள்மீது 12 குற்றச்சாட்டுகள்.

[நமது நிருபர்]

யாழ்ப்பாணம் 11.

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டில் நீதியரசர் திரு. L. M. மாட்டினெஸ் முன்பாக (1) சின்னத்தம்பர்-கந்தையா, (2) சபாபதி-கனகரெத்தினம், (3) சூரியர்-சதாசிவம், (4) மயில்வாகனம்-குமாரசாமி, (5) சின்னத்தம்பி-சபாரெத்தினம், (6) குயிலன் அல்லது சிதம்பரி-கதிரவேலன், முதலியவர்களுக்கு எதிராக, சென்ற பங்குனிமாதம் 6-ந் திகதியளவில் (1) யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த நல்லூர் என்னுமிடத்தில் சரஸ்வதி என்னும் மங்கையைக் கடத்தும் நோக்கமாகச் சட்டவிரோதமான கூட்டங்கூடியதாகவும், (2) அம்மாதிரிச் சட்டவிரோதமாகக் கூட்டங்கூடிச் சரஸ்வதியை அனுப்பிச் சென்றதாகவும், (3) சரஸ்வதியைக் கடத்திச்சென்றதாகவும், (4) 7-ந் திகதியளவில் அல்வாய் தெற்கு என்னுமிடத்தில் சரஸ்வதியுடன் பலவந்தப் புணர்ச்சிசெய்ததாக 1-ம் எதிரிமீதும், (5) 6-ந் திகதியளவில் நொத்தாரிஸ் C. T. குமாரசுவாமி முன்பாக சின்னம்மா என்னும் பெண்ணை ஏமாற்றித் தளையசிங்கமாக நடித்து 3342-ம் இலக்க சீதனப்பத்திரத்தை எழுதுவித்ததாக 1-ம், 4-ம், 5-ம் எதிரிகள்மீதும், (6) மேற்சொல்லிய செயலுக்கு உதவிசெய்ததாக 2-ம் எதிரிமீதும், (7) சின்னம்மாவிடம் சீதனபத்திரத்தை எழுதிவாங்கி நஷ்டத்தை விளைவித்ததாக 2-ம் எதிரிமீதும், (8) மேற்சொல்லிய செயலுக்கு உதவிசெய்ததாக 1-ம் 4-ம் 5-ம் எதிரிகள்மீதும், (9) 3342-ம் இலக்க சீதனபத்திரத்தில் கள்ளக்கையொப்பமிட்டதாக 2-ம் எதிரிமீதும், (10) மேற்சொல்லிய செயலுக்கு உதவிசெய்ததாக 1-ம் 4-ம் 5-ம் எதிரிகள்மீதும், (11) 3343-ம் இலக்க ஈட்டுறுதி முடித்ததாக 2-ம் எதிரிமீதும், (12) மேற்சொல்லிய செயலுக்கு உதவிசெய்ததாக 1-ம் 4-ம் 5-ம் எதிரிகள்மீதும் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணை ஆரம்பமாகுமுன் எதிரிகள் யாவரையும் தனித்தனி குற்றவாளிகளோ? சுற்றவாளிகளோ? எனக்கேட்க, 2-ம் எதிரியைத் தவிர்ந்த ஏனைய எதிரிகள் சுற்றவாளிகளெனக் கூறினார்கள். 2-ம் எதிரியைக் கேட்டபோது அவன் "கந்தையாவால் அனுப்புப்பட்டதற்குக் குற்றவாளி" என்றான்.

நீதியரசர்:—அவைகளை விடுத்து நீ குற்றவாளியா? அல்லது சுற்றவாளியா?

2-ம் எதிரி—குற்றவாளி.

பெண்ணைக் கடத்தும் நோக்கமாக அடாத்தாகக் கூடிய கூட்டத்தில் அங்கத்தவனா யிருந்ததற்கு?—குற்றவாளி.

சரஸ்வதியைக் கடத்திச்சென்றதற்கு?—குற்றவாளி.

சீதனப்பத்திரம் எழுதுவித்ததற்கு?—குற்றவாளி.

கள்ளக் கையொப்பம் வைத்ததற்கு?—குற்றவாளி.

ஈட்டுறுதி எழுதுவித்துக் கள்ளக் கையொப்பம் வைத்ததற்கு?—குற்றவாளி.

(2-ம் எதிரியை நோக்கி) தீர்ப்புப் பின்னர்க் கூறப்படும். நீயும் மற்றைய எதிரிகளுடன்கூட நிற்றல் வேண்டும்.

வழக்காளி சார்பாக முடிக்குரிய நியாயவாதி நிகால் குணசேகராவும், 2-ம் எதிரியின் சார்பாக நியாயதுரந்தரர் திரு. H. R. அரியகுட்டியின் அனுசரணையின்பேரில் நியாயவாதி திரு. S. துரைசுவாமி-தம்புவும், 3-ம் 5-ம் 6-ம் எதிரிகள் சார்பாக நியாயதுரந்தரர் திரு. R. R. நல்லையாவின் அநுசரணையின் பேரில் W. குணம் ஸ்பென்சரும் ஏற்பட்டார்கள்.

நீதியரசர்:—(1-ம், 4-ம் எதிரிகளை நோக்கி,) உங்களுக்காக ஒருவரும் ஏற்படவில்லையோ?

1-ம், 4-ம் எதிரிகள்:— இல்லை.

நீதியரசர்:— மிஸ்டர் ஸ்பென்சர்! நீர் அவ்விரு எதிரிகளுக்காகவும் ஏற்பட முடியுமோ?

திரு. ஸ்பென்சர்:— 4-ம் எதிரிக்காக மாத்திரம் ஏற்படமுடியும்.

நீதியரசர்:— வேறு யாராவது தயாராயிருக்கிறார்களா?

திரு. சபாரெத்தினம்:— (வந்து) நான் இடைவேளையின்பின் ஏற்படுகிறேன்.

நீதியரசர்:— மிஸ்டர் தம்பு! நீர் உமது வழக்குக் கொப்பியை இரவலாக மிஸ்டர் சபாரெத்தினத்திற்குக் கொடுக்கிறீரா?

திரு. தம்பு:— ஆம்.

(1-ம் எதிரி இடைவேளைவரையும் தனக்காகத்தானேவிவாதித்தான்.

### ஜூரிமார்கள்.

திருவாளர்கள். P. R. செல்லையாபிள்ளை, V. சோமசுந்தரம், V. கதிரேசர், C. குமாரசுவாமி, S. அருளானந்தம், A. V. றிச்சேட், S. D. சிவரெத்தினம் முதலியோர்கள் ஜூரிமார்களாகத் தேர்ந்தெடுக்கப்பட அவர்கள் திரு. S. அருளானந்தத்தைத் தலைவராகத் தெரிந்தனர்.

முதலாவதாக முடிக்குரிய நியாயவாதி வழக்கின் சாராம்சத்தை ஜூரிமார்களுக்கு எடுத்துரைத்ததின்மேல் இளையதம்பி, சுப்பிரமணியம், நாகரெத்தினம் திரிகோணமலைப் பொலிஸ் சார்ஜன்ட் முதலியோர்களை விசாரணைசெய்யப்பட்டது.

அதன்மேல் இளையதம்பி சந்தையா விசாரணை செய்யப்பட்டபோது கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"ஏறக்குறைய 3, 4 மாதங்களின் முன்னர் திரிகோணமலையில் சுப்பிரமணியம் என்பவரது வீட்டில் 1-ம் எதிரியையும் சரஸ்வதியையும் கண்டேன். அவ்வீட்டிற்கு ஒவ்வொரு நாளும் போய் வருபவன். ஓர்நாள் 1-ம் எதிரி சரஸ்வதிக்கு அடித்ததும் எனக்குத் தெரியும்."

மீண்டும் குறுக்குவிசாரணையின் போது கூறியவற்றின சாராம்சம் வருமாறு: "சுப்பிரமணியம்என்பவர் எனது ஒன்றைவிட்ட அண்ணனுவார். ஆகையால் இதுசம்பவம் நடைபெறுவதற்கு ஒரு வருடகாலம் மூதற்கொண்டு, சம்பவம் நடைபெறும்போதும் அதற்குப் பின்னரும் தினமும் போய் வருவது வழமை. 1-ம் எதிரி கைதியாகியதன்மேல் கோட்டிற்குப்போய் திரும்பி வரும் வழியில் (இமிற்றேசன் நகைகளாகிய) காப்பு, சங்கிலி முதலியவற்றை ஓர்கடதாசியிற்சுற்றி என்னிடம் தந்தார். நான் அவற்றை உதவி இன்ஸ்பெக்றரிடம் கொடுத்தேன். 1-ம் எதிரி தனது மனைவி சரஸ்வதியெனக் கூறியதை நான் மறுக்கின்றேன். இவர்கள் வரும்போதும் நான் அங்குதானிருக்கிறேன். அப்பெண்ணுடன் நான் கள்ள நட்புக்கொண்டிருப்பதாக 1-ம் எதிரி சமுசயிக்கத் தக்கதாக நான் பெண்ணுடன் நடந்துகொள்ளவில்லை. அடித்த அடியை நான் காணவிட்டாலும் ஐயோ என்ற சப்தத்தைக் கேள்விப்பட்டேன்."

பின்னர் யாழ்ப்பாணம் யூடிசல் மெடிக்கல் ஆபிசர் டக்றர் கே. இராசா விசாரணைசெய்யப்பட்டார். (விபரம் வெளியிடுவது தகுதியல்லவாகையால் வெளியிடவில்லை.)

மீண்டும் மாணிக்கப்-சுப்பிரமணியம் விசாரணைசெய்யப்பட்டார். அவர் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"இளையதம்பி கந்தையா எனது சொந்தக்காரனே. அவன் அக்காலத்தில்நான்சுகவீனமாகவிருந்ததால் ஒவ்வொருநாளும் எனது வீட்டிற்கு வந்துபோகும் வழக்கமுண்டு. அதற்கு முந்தியும் தினமும் வந்து போபவன். 1-ம் எதிரி ஓர் நாள் சரஸ்வதியை அடித்தான். நான் என்ன காரணத்திற்காக அடித்தாயென 1-ம் எதிரியைக் கேட்க அவன் தான் எங்கேயோ போவதற்கு வரும்படி அழைத்தபோது மறுத்ததற்காகவே யடித்ததாகக் கூறினான். வேறு காரணத்திற்காக அடித்ததாக நான் நம்பவில்லை. சரஸ்வதி ஓர் காகிதத்தைத் தந்து தபாலிற் சேர்க்கும்படி கேட்டுக்கொண்டாள். நானும் ஓர் காகிதம் அதற்கு அடுத்த நாள் பெண்ணினுடைய தாயாருக்கு எழுதினேன். 1-ம் எதிரியும் சரஸ்வதியும் இளையதம்பியினுடைய வீட்டிலிருக்கும்போதும் தெரியும். அதன் பின்னர் 1-ம் எதிரியைமாத்திரம் கண்டேனேயொழியச் சரஸ்வதியைக் காணவில்லை. நான் இவ்வீட்டில் சுருட்டுபவன். அக்காலத்தில் எதிரியும் சரஸ்வதியும் சந்தோஷமாயிருந்தார்களோவென்பது தெரியாது. பின்னரே 1-ம் எதிரி எனது வீட்டிற்கு வந்து தாங்கள் இருப்பதற்கு இடங்கேட்டார். அதன்மேல் எனது வீட்டிற்கு வந்தார்கள். தபாலை என்னிடம் கொடுத்ததின்மேல் நான் கேட்டபோது சரஸ்வதி இம்மாதிரி என்னைக் கொண்டுவந்தார்களெனக் கூறினாள்."

கல்முனை சப்-ஓவசியரும், அராலி மேற்கு வாசியுமாகிய நாகமுத்து-தளையசிங்கம் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தின் சாராம்சம் வருமாறு:—

"1-ம் எதிரியைத்தவிர்ந்த ஏனைய எதிரிகளை எனக்குத் தெரியாது, 1-ம் எதிரியை இதுசம்பவம் நடைபெறுவதற்கு ஏறக்குறைய 6 மாதங்களின் முன்னர் நான் கிளிநொச்சியில் கமச்செய்கைக்காகப் போய்நின்றபோது சந்தித்திருக்கிறேன். 1-ம் எதிரி வைக்கல் வாங்குவதற்காகவும் மேசன் வேலை செய்வதற்காகவும் கிளிநொச்சிக்கு வந்தவன், இவ்வருடம் மாசிமாதம் 15-ந் திகதியளவில் 1-ம் எதிரியிடமிருந்து ஓர் காகிதம் கிடைத்தது. காகிதம் ஒன்றேயாயினும் இரு கடிதங்கள் காணப்பட்டன. ஒரு துண்டையெழுதியவன் கந்தையா. மற்றத் துண்டையெழுதியவன் குமாரசாமி. அக்காகிதத்தில கல்யாணம் முடிக்காத ஓர் பெண் இருப்பதாகவும், உம்முடைய சொந்தத்துள் வசதியான மாப்பிளை இருக்கா எனவும், நீ என்னிடம் உனது மனைவி சுகவீனமானவளெனக் கூறியிருந்தாய், ஆனபடியால் உனக்கு அப்பெண்ணை முடிக்கச் சம்மதமோ எனவும், எழுதியிருக்கப்பட்டது."

நீதியரசர்:— உனக்கு ஏற்கனவே மனைவியிருக்க நீ எப்படி வேறொரு பெண்ணை மனைவியாக்கிக்கொள்வாய்?

சாட்சி:— நீ உத்தியோகமாகவிருப்பவனுகையால் வைப்பாட்டியாக வைத்துக்கொள்வதற்குச் சம்மதமோவெனவும் எழுதியிருந்தது.

மீண்டும சாட்சி தொடர்ந்து கூறியதாவது:—

"அத்துடன் பெற்றோர்கள் வயது குணம் ஒழுக்கம் முதலியவற்றைப்பற்றியும் கேட்கிறார்களெனவும் தபாலில் குறிப்பிடப்பட் டிருந்தது. அத்தபாலை நான் கிழித்துவிட்டேன். நான் கிளிநொச்சியில் இருந்தபோது வைப்புவைத்துக்கொள்வதற்குச் சம்மதித்தேன். அத்தபாலுக்கு மறுமொழியாக நான் தகப்பனுருடனும் மற்றும் பந்துக்களுடனும் யோசித்துத்தான் சொல்லுதல் வேண்டுமென எழுதினேன். பின்னரும் குமாரசாமி ஒரு தபால் அனுப்பியிருந்தார். நான் "M. குமாரசாமி, c/o பெருமாள், மூர்த்திவினயகர்கோவிலடி, இரண்டாங்கட்டையடி, நல்லூர்" என்ற விலாசத்திற்கே தபால்களை அனுப்பினேன். குமாரசாமி எழுதிய 2-ம் கடிதத்தில் எனது குடும்ப சரித்திரத்தையும் தந்தையார் முதலியோரைப்பற்றியும் எழுதும்படி கேட்டுக்கொண்டார். அதற்கு நான் தகுதியுள்ள மனைவியாக்கிக்கொள்ளாமல் வைப்பாட்டியாக வைத்திருப்பதாக எழுதினேன். அவர்கள் முடியாதெனத் தெரிவித்தார்கள். அத்துடன் இவ்விஷயத்தைப் பற்றி என்னுடன் பிரஸ்தாபிக்கவில்லை. கடந்த பங்குனிமாதம் 6-ந் திகதியன்று கல்கமுவா என்னுமிடத்தில் நான் இருந்தேனேயல்லாது யாழ்ப்பாணத்திற்கு வரவுமில்லை. சரஸ்வதியைச் சந்திக்கவுமில்லை. அவளைக்கூட்டிச் செல்லவுமில்லை.

நீதியரசர்:— நீ சரஸ்வதியைக் கலியாணம்முடித்தாயா?

சாட்சி:— இல்லை.

3342-ம் 3343-ம் இலக்க உறுதிகளில் நான் கையெழுத்து இடவில்லை. ஓர்நாள் சரஸ்வதியினுடைய தாயிடமிருந்து ஓர் தபால் வந்திருப்பதாகவும் அத்தபாலில் நான் பெண்ணைக் கல்யாணம் முடித்ததாகவும் பெண்ணை அழைத்துக்கொண்டு போனதாகவும் குறிப்பிடப்பட்டிருப்பதாக எனது தலைமை ஓவசியர் E. வேலாயுதம்பிள்ளை சொல்லியதுடன் தபாலை வாசித்துப்பார்க்கும்படியும் என்னிடம் தந்தார். நான் அத்தபாலைப் பார்த்தும் மாப்பிள்ளை நான் அல்ல எனவும் யாரோ உங்களை ஏமாற்றியிருக்கிறார்களெனவும் உடனே இது விஷயத்தைப்பற்றி பொலிசாரிடம் முறையிடும்படியும் பெண்ணினுடைய தாயாருக்கு ஓர் தபாலை எழுதி முற்கூறிய விலாசத்திற்கே அனுப்பிவைத்தேன்."

சாட்சியை நியாயவாதி குணம் ஸ்பென்சர் குறுக்குவிசாரணை செய்தபோது கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

(தொடர்ச்சி அடுத்தபக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டு விசாரஹண—18

(முன்பக்கத் தொடர்ச்சி)

நியாயவாதி:— எதிரிகளுள் யார் யாரைத் தெரியும்?

சாட்சி:— 1-ம் எதிரியை.

1-ம் எதிரி மாத்திரம் உனக்கு தபால் எழுதியிருந்தாரா?—இல்லை.

அத்தபாலில 1-ம் எதிரி வைப்பாட்டியாக வைப்பதற்கு சம்மதப்பட்டாரா?—ஆம்.

எத்தனை காயிதங்கள் எல்லாமாக உமக்குக்கிடைத்தன.—இரண்டு.

யார் யார் எழுதியவர்கள்?—ஒரு காயிதத்தில் கந்தையாவும் குமாரசாமியும் மற்றோர் காயிதத்தில் குமாரசாமியும் கையெழுத்து வைத்திருந்தார்கள்.

நீதியரசர்:— குமாரசாமியெழுதிய இரண்டாம் காயிதத்துடன் கல்யாணப்பேச்சு முற்றுப்பெற்றுவிட்டதா?—ஆம்.

நியாயவாதி:- 18-ந் திகதியளவில் குமாரசாமிக்கு நீர் ஓர் காயிதம் எழுதினீர் அல்லவா?—ஆம். அக்கடிதம் தலைமை ஒவசியருக்கு வந்ததற்காக எழுதப்பட்டது.

இக்கடிதத்தையும் குமாரசாமியினுடைய பெயருக்குத்தானே அனுப்பினீர்.—ஆம்.

குமாரசாமியும் சேர்ந்துதான் கடிதம் எழுதியதாக எண்ணினீரா?-ஆம்.

நீதியரசர்:- தாயும் குமாரசாமியும் சேர்ந்தே கடிதம் எழுதியதாகத் தெரிந்ததா?—ஆம்.

குமாரசாமியும் சேர்ந்து எழுதியிருக்காவிட்டால் நீர் அவருக்கு கடிதம் எழுதியிருப்பீரா?—இல்லை.

நியாயவாதி:- ஒவசியர்தந்த கடிதத்தைப்பார்த்ததும் யாருக்கு பதில் எழுத வேண்டுமென தெரியவந்தது?—தாயாருக்கே.

அப்போ ஏன் குமாரசாமிக்கு பதில் அனுப்பினீர்?— (பதிலில்லை)

நீர் பெண்ணை வைப்பாட்டியாகவே வைத்துக்கொள்வதாக எழுதினீர் அல்லவா?—ஆம்.

அதற்குக் குமாரசாமி எவ்விதம் பதிலனுப்பினன்.—வைப்பாட்டியாக வைப்பதற்குப் பெண்ணைக் கொடுக்கமாட்டோமென எழுதினன்.

அதன்பின்பும் நீர் கடிதம்அனுப்பினீரா?—இல்லை.

இதைப்பற்றி யோசிப்போமென்றாவது எழுதியிருந்தீரா?—இல்லை.

அப்போ நீர் பெண்ணினுடைய தாயாருக்கு எழுதிய காகிதத்தில் சித்திரை மாதமளவில் யோசிப்போமென எனக்கு எழுதிவிட்டு இப்படியாக என்னை ஏமாற்றலாகுமா என எழுதியிருந்தீர்.—ஆம்.

கல்யாணப்பேச்சு முடிவுற்றால் சித்திரைமாதமளவில் யோசிப்போம் என எழுதியிருப்பதற்குக் காரணமென்ன?— (பதிலில்லை)

நீதி:- உமது கடிதத்தில் அவ்விதம் எழுதியிருக்கிறீர் அல்லவா?—(பதிலில்லை)

அதன் கருத்தென்ன?—முன்னர் எழுதிய கடிதத்தில் எனது தம்பியாருக்காவது பெண்ணை மணம் முடிக்கலாமோவெனக் கேட்டிருந்தமையால் அவ்விதம் எழுதலானேன்.

இவ்வளவு மாய்மாலம்நிறைந்த உன்னையா சப் ஒவசியராக வைத்திருக்கிறார்கள். உன்னுடைய மடமைத்தனத்தை இங்கு காட்டவேண்டாம். உண்மையை ஒளியாது கூறு. ஏன் எழுதினீர் அவ்விதம்.—(பதிலில்லை)

நீ இவ்விடத்தில் செம்மறி ஆடுபோன்று நடக்கவேண்டாம், கூறு உண்மையை.—முடிப்பதற்கல்லவென்பது அதன் கருத்து ஐயா.

எம்மை அணுப்பவேண்டாம், நீர் எவ்வளவுக் கெவ்வளவு களட்டத்தெண்டிக்கிறீரோ அவ்வளவுக் கவ்வளவு மாட்டப்படுவீர் என்பதைக் குறித்துக்கொள்ளும்.

அதனுடைய கருத்தென்ன?—(பதிலில்லை)

உன்னையே நீ அணுப்புகிறாய். உனது புத்திக்கூர்மையைக் காட்டுவதால் இங்கு அந்தரப்படுகிறாய்.

நியா:- வேறென்ன எழுதியிருக்கப்பட்டது.—இம்மாதிரியெல்லாம் எழுதி விசாரித்துவிட்டும் வேறு ஒருவருக்குக் கொடுத்துவிட்டீரேயெனவும்எழுதியிருந்தேன்.

நீதி:-இதிலிருந்தும் நீ சரஸ்வதியைக் கல்யாணம்முடிக்கவோ அல்லது வைப்பாக வைத்துக்கொள்ளவோ எதிர்பார்த்திருந்ததாகத் தெரிகிறதல்லவா?—நான் எண்ணியிருக்கவில்லை ஐயா.

நான் நம்பியிருக்க நீங்கள் கைவிட்டுவிட்டீர்கள் என்றல்லவா விளங்கவேண்டியிருக்கிறது.—ஆம்.

இதன் கருத்தென்ன?—(பதிலில்லை)

நியா:- அந்நேரத்திலாவது குமாரசுவாமி உன்னை ஏமாற்றிவிட்டானென நினைந்தீரா?—இல்லை.

பின்னர் திரிகோணமலைப் பொலிஸ் ஸ்ரேசனைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்ரர் விஜயமால் என்பவர் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

கடந்த பங்குனிமாதம் 20-ந் திகதியன்று நானே இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட தாலிக்கொடியையும் காப்பையும் அட்டியலையும் கந்தையாவென்ற சாட்சியிடமிருந்தும் காதோலையை 1-ம் எதிரியிடமிருந்தும் பெற்று நீதிபதிமுகதாவில் ஒப்படைத்தேன்.

யூரித்தலைவர்:- சரஸ்வதி அடிபட்ட விஷயத்தைப்பற்றி முறையிட்டாளா?—இல்லை.

எவ்விதம் வாக்குமூலங் கொடுத்தாள்.—பொலிஸ் ஜார்சனே வாக்குமூலத்தைப் பதிந்தமையால் எனக்குத் தெரியாது.

இதன்பின்னர் சாட்சியை நியாயவாதி திரு. C. சபாரத்தினம் குறுக்குவிசாரணைசெய்தார்.

அதன்மேல் கடத்தப்பட்டபெண்ணின் தாயாராகிய நாகலிங்கம் கைம்பெண் சின்னம்மா என்பவள் கொடுத்த சாட்சியத்தின் சாராம்சம் பின்வருமாறு,—

இதுசம்பவம் நடைபெறுங்காலத்தில் நான் எனது தந்தையாராகிய கதிரேசுவுடனும் எனது மூன்று பெண்பிள்ளைகளுடனும் மகனாகிய பெருமாளுடனும் வசித்துவந்தேன். எனது மூத்தமகளைச் சுப்பையா என்பவர் மணம்முடித்து வேறிடத்தில் வசித்துவந்தார். சரஸ்வதியினுடையவயது 14 எனத் தெரியுமேயல்லாது அவள் பிறந்த திகதி எனக்குத்தெரியாது. இவ்வருட முற்கூற்றில் நல்லூரிலுள்ள எனதுவீட்டிற்கு 1-ம் 4-ம் 5-ம் எதிரிகள்வந்து கல்யாணம்பேசினார்கள். மூவரும் வந்தார்களேயானாலும் நான்காம் எதிரியாகிய குமாரசாமியே ஆவலுடன் கல்யாணம் பேசினான். நாலாம் எதிரியுடைய வயது 22 என எனக்குத்தெரியும்.

நீதி:- யாருக்கு யாரைப் பேசினார்கள்.—எனது மகளாகிய சரஸ்வதிக்கு வட்டுக்கோட்டைவாசியும் நாகமுத்துவின் மகனும் கல்கமுவ என்னுமிடத்தில் சப் ஒவசியராக வேலைபார்ப்பவருமாகிய தளையசிங்கத்தைப் பேசினார்கள்,

கடந்த தைமாசம் முதலாக விவாகப் பேச்சு நடைபெற்றது. அவர்கள் பேசியபோது செலவுக்குக் காசு இல்லையாகையாலும் உடமைகளில்லை யாகையாலும் வசதியீனமா யிருப்பதால் செய்யமுடியாதெனத் தெரிவித்தேன். அதனைக்கேட்ட 4-ம் எதிரி தனக்கு மாப்பிள்ளையைத் தெரியுமெனவும் நல்ல சடங்கெனவும் எப்படியேனுஞ் செய்தல்வேண்டுமெனவும் கூறியதுடன உன்னால் முடியாதுபோனால் என்னால் பெண்ணை எடுத்துக்கொடுக்க முடியுமெனவுஞ் சொன்னான்.

வைப்பாட்டியாகவா, சொந்தப்பெண்டாட்டியாகவா எடுத்துக் கொடுப்பதாகச் சொன்னான். — சகோதரியானமையினால் எடுத்துககொடுப்பதாகக் கூறினான்.

நீ நடந்த விஷயங்களிலும்பார்க்கக் கூட்டிக் குறைத்துச் சொல்லத் தொடங்கிவிட்டாய். அப்படிச் சொன்னாயேயானால் ஒருவேளை எதிரிகள் விடுதலையாகவும் கூடும். இதுவரையில் நீ சொன்ன விஷயங்களை உற்றுயோசித்தால் பொலிஸ்கோட்டில் சொன்னதற்கும் இங்கு சொன்னதற்கும் அநேக வித்தியாசங்கள் காணப்படுகின்றன. இக்கோட்டில் நடைபெற்ற எத்தனையோ வழக்குகள் கூட்டிக் குறைத்துச் சொன்னமையால் தள்ளப்பட்டன. இங்கு வந்து சொன்ன சாட்சிகளை நான் எச்சரித்தபோதும் அவர்கள் அதைக் கவனியாது உண்மையையே பேசுகின்றேன் எனச் சொல்லி கூட்டிக் குறைத்துச்சொன்னார்கள். நீயும் கூட்டிக்குறைத்துச்சொன்னால் உனக்கே நஷ்டமுண்டாகுமென்பதை ஞாபகத்தில் வைத்துககொள். உன்னுடையமகளை எதிரிகள் இம்மாதிரிச் செய்ததால் நீமாத்திரமல்லாமல் நாம் எல்லோரும் துக்கப்படுகிறோம். ஆகையால் உண்மையாகவும் பதட்டமில்லாமலும் ஆறுதலாகவும் அவதானமாகவும் மறுமொழி சொல்லு.

அதன்பின்னரும் இருமுறை கல்யாணப்பேச்சுப் பேசியதன்பின்னரே நான் உறுதியைக் கொடுத்தேன்.

நீதியரசர்:-முதல்நாட் பேசியபோது உறுதியைக் கேட்கவில்லையா?—இல்லை, 3-ம் முறை பேசும்போதே கேட்டான்.

முதல்நாள் இவைகள் நடைபெற்றது இரண்டாம்நாள் இவைகள் நடைபெற்றன என முறைப்படி பதட்டமில்லாமல் கூறு.

"முதல்நாள் பேசியபோதும் இரண்டாம் நாள் பேசியபோதும் வசதியீனம் எனக் கூறினேன். மூன்றும் முறை குமார சுவாமி அதிகம் நெருக்கிக் கேட்டதே நான் சம்மதித்தேன். அன்றைக்கே எனதும் சபாரெத்தினத்தினதும் முகதாவில் 1-ம் எதிரியாகிய கந்தையா குமாரசாமியிடம் தான் கல்கமுவாவில் இருக்கும் ஒவசியரது மேல்விலாசம் தருவதாகவும் அவருக்குக் கல்யாணவிஷயத்தை எழுதியறியும்படியும் சொன்னான்.

தளையசிங்கத்திற்கு எழுதிக்கேட்கும்படி குமாரசாமியிடமா கூறினான்?—ஆம்.

அதற்குமுன்னர் குமாரசாமிக்குத் தளையசிங்கத்தின் மேல்விலாசம்தெரியுமோ?—தெரியாது.

குமாரசாமிக்கோ தளையசிங்கத்திற்கோ தெரியுமென நினைத்தாய்?—யாரை?

தளையசிங்கத்தை? — இருவருக்குந் தெரியுமென நினைத்தேன்.

குமாரசாமி தனக்குத் தளையசிங்கத்தைத் தெரியுமென்று கூறினனா?—ஆம்.

அப்போது அவ்விடத்திற்குச் சபாரத்தினம் ஏன் வந்தான்?—இவர்களுடன் கூடிவந்தான்.

யாருடனாவது கதைத்தானா?—குமாரசாமியுடன் கதைத்தான்.

உன்னுடனும் சம்பாஷித்தானா?—ஆம்.

என்னசொன்னான்?—நீ ஒன்றுக்கும் பயப்படாதே, நல்லசடங்கு, ஆகவேண்டியவைகளைச் செய்யென்றான்.

உனக்கு இனத்தவனா?—இல்லை.

மாப்பிள்ளை பகுதிக்காகவோ பெண்பிள்ளை பகுதிக்காகவோ வேலைசெய்தான்?—1-ம் எதிரியுடன் கூடவந்ததால் கதைத்தான்.

1-ம் எதிரியை உனக்குத் தெரியுமா?—கண்டிருக்கிறேன்:

சபாரெத்தினத்தை? — கண்டிருக்கிறேன்.

சபாரெத்தினமும் தனக்குத் தளையசிங்கத்தைத் தெரியுமென்றானா?—ஆம்.

2-ந் தரமும் மூவருமாகவா வந்தார்கள்?—ஆம்.

"மூன்றும்முறையும் மூவரும் வந்து நெருக்கியமையாலேயே சம்மதித்தேன். அன்றே மாப்பிள்ளைக்கு எழுதவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் குமாரசாமி அன்றே எழுதாமல் அடுத்தநாள் எழுதினான்."

குமாரசாமி தான் எழுதிய கடிதத்தை உனக்குக் காட்டினனா? அல்லது வாசித்தானா?-காட்டவுமில்லை, வாசிக்கவுமில்லை.

எழுதியதாக உன்னிடம் கூறினனா?—ஆம். "மாப்பிள்ளை குமாரசாமிக்கு எழுதிய கடிதமும் எங்கள் வீட்டிற்கே வந்தது."

ஏனெனில், பெருமாள் மேற்பார்த்து என்றிருந்தமையால் வந்ததா?—ஆம்.

உனக்கு எழுதவாசிக்கத் தெரியுமா?-தெரியாது.

நீ பொலிஸ்கோட்டில் தெரியுமெனச் சொல்லியிருக்கிறாய்? — சிறிதளவு தெரியுமென்றேன்.

"அக்காகிதத்தை நானாவது எனது மகன் பெருமாளாவது உடைக்கவுமில்லை, வாசிக்கவுமில்லை. எனது பிள்ளைகளிலொருத்தி குமாரசாமியிடம் கொடுத்தாள். இதுசம்பவம் நடைபெற்றநாட்களுக்கு ஏறக்குறைய 4, 5 மாதங்கள் முன்னராகவே குமாரசாமி எனது வீட்டிலேயே சாப்பிட்டும் படுத்தும் வந்தான்.

குமாரசாமி வந்தான் எனச் சொன்னமைக்குக் காரண மென்ன?—1-ம் எதிரி வகையறுக்களுடன் கூடி வருவதாகச் சொன்னேன்,

"குமாரசாமி தனக்குவந்த காகிதத்தை எனக்கு வாசித்துக் காட்டினானேவென்பது ஞாபகத்திலில்லை. ஆனால் சொல்லியிருப்பானென நினைக்கிறேன்.

என்ன சொல்லியிருப்பான்?—நினைப்பிலில்லை.

உனது மகளைக் கல்யாணம் முடிக்கும் விஷயந்தானே. அவளை மணக்க விருப்பமா? அல்லவாவென நீ அறியவேண்டாமா?— சொல்லியிருக்க வேண்டும். ஆனால் நினைப்பில்லை.

நினைத்துச்சொல்?—சொன்னது தான்.

நான் ஏற்கனவே கூட்டவோ குறைக்கவோ வேண்டாமென்று சொல்லியிருக்கிறேன். நீ இப்பொழுது அதிகம் பெலப்படுத்திவிடுவோமென எண்ணுகிறாய். அது தவறு. நல்லூரிலுள்ள முட்டாட்களில் யாரோ சொல்லிக்கொடுக்க நீ மடமைநிறைந்த மனுஷியானமையால் அதனைக்கேட்டுச் சொல்லுகிறாய்?—ஒருவரும் சொல்லித்தரவில்லை. நானாகவே சொல்லுகிறேன்.

அதன்பின்னர் அதாவது காகிதம் கிடைத்ததற்கு இரண்டொருநாளின்பின் மாப்பிள்ளைக்குச் சம்மதமெனக் குமாரசாமிசொன்னான்.

மறந்துபோனேனெனச் சொல்லாது இதனை அப்பொழுதே சொல்லியிருக்கலாமே. வீணாக நேரம் அவமாகப் போய்விட்டதே.

கல்கமுவையிலிருந்து எத்தனை காகிதங்கள் குமாரசாமிக்குவந்தன.—இரண்டு.

"தளையசிங்கம் கல்யாணம் முடித்தவனென்றாவது எனது மகளை வைப்பாட்டியாக வைத்துக்கொள்ளவென்றாவது குமாரசாமி சொல்லவில்லை. ஆனால் மாப்பிள்ளைக்குச் சம்மதமென்றே சொன்னான். அதற்கு நான் சம்மதித்தால் சித்திரை மாதம் செய்வோமென்றேன். அதன்பின்னரும் (2-வது) கடிதம் எழுதியிருப்பதாகக் கூறினான். அதற்குவந்த பதிலையாவது வாசிக்கவுமில்லை. காட்டவுமில்லை. பின்னர் வந்த காகிதத்தில் சித்திரை மாதத்தில் செய்வதற்கு மாப்பிள்ளை சம்மதித்திருப்பதாகக் கூறினான். கந்தையாவிடமே தனது விஷயங்களைப் பாரங்கொடுத் திருப்பதாக மாப்பிள்ளை இரு கடிதங்களிலும் எழுதியிருப்பதாகவுங் கூறினான். 2-ந் தபால் வந்ததின்பின்பு 1-ம் எதிரியும் குமாரசாமியும் காணியை ஈடுவைக்கும்படியும் அக்காசைக்கொண்டே நகைகள் வாங்குவதாகவும் சொல்ல அதற்கு நான் சம்மதித்தேன். ஈட்டுக்குக் காசெடுக்கும் விஷயமாக 4-ம் 5-ம் எதிரிகள் வேலைசெய்தார்கள். சடங்கு நடப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னராக கந்தையா சபாரெத்தினத்துடன் வந்து காசு ஒழுங்குசெய்துவிட்டதாகவும், கையெழுத்தைப் போட்டு எடுப்பதற்காக நொத்தாரிஸ் (நியாயதுரந்தார்) குமாரசாமியினது வீட்டுக்கு வரும்படி சொல்ல நான் சென்று கையெழுத்துப்போட்டேன். அங்கு குமாரசாமி, கந்தையா, சபாரெத்தினம் காசை ஒழுங்குபண்ணிய தாகர் தம்பிப்பிள்ளை முதலியோர் நின்றனர். நான் கையெழுத்திட்டதன்மேல் நொத்தாரிஸ் 150 ரூபாவில் ஓர் பகுதியாக 45 ரூபாவை என்னிடம் தந்தார்.

நீதியரசர்:— நீ கையெழுத்து வைத்தது நோட்டுப்பத்திரத்திலா?

சாட்சி:— எக்கடுதாசியிலென எனக்குத்தெரியாது. ஓர் இடத்தைக் காட்டி கையெழுத்திடு என நொத்தாரிஸ்சொல்ல கையெழுத்திட்டேன்.

"பின்னர் குமாரசாமி என்னிடம் 10 ரூபாவை வாங்கி முதலாம் எதிரியிடம் கொடுத்தான்."

நீதியரசர்:- நீ பொலிஸ் நீதிபதிக்கு இப்படிச் சொல்லவில்லையே.—பதிலில்லை.

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க.)

## யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டு விசாரணை-18.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

குமாரசாமிக்கு வந்த கடிதத்தை யார் குமாரசாமியிடம் கொடுத்தார்கள்?—எனது பிள்ளைகளிலொருவர் கொடுத்தார்.

சந்தையா சொல்வதெல்லாவற்றையும் தளையசிங்கம் செய்வாரென நீ நம்பினுயா?—ஆம்.

பின்னர் நீ ரூபா 10-ஐக் கந்தையாவிடம் கொடுத்தாயல்லவா?

நீதியரசர்:- கந்தையாவிடமல்ல. குமாரசாமியிடமே கொடுத்ததாகச் சாட்சியங் கூறினன்.

நியா.- நீ பொலிஸ் கோட்டில் கந்தையாவிடம் கொடுத்ததாக ஏன் சொன்னுய்?—அப்படிச் சொன்னதாக ஞாபகத்திலில்லை.

நியா:- (வாசித்து) இப்படிச் சொன்னதன் காரணமென்ன?

நீதி:- நீ குமாரசாமியிடம் கொடுத்தாய். குமாரசாமி தான் கந்தையாவிடம் கொடுத்ததாகவும் அவன் காசைக் கொண்டுபோனதாகவும் சொன்னுயா?—குமாரசாமியிடம் கொடுத்ததாகவே சொன்னேன்.

2, 3 நாட்களின் பின்னர் 1-ம் எதிரி உன்னைச் சந்தித்தானு?—ஆம்.

அப்பொழுது மாப்பிள்ளையை அழைத்து வந்துவிட்டதாக உன்னிடம் சொன்னுனு?—ஆம். அத்துடன் 6-ம்௳ கல்யாணம் நடத்தவேண்டுமெனவும் கூறினன்.

கல்யாணத்தைச்சிக்கிரமாகச் செய்தல்வேண்டுமென. நீ கந்தையாவைக் கேட்கவில்லையா?—கேட்டபோது "ஓவசியருக்கு லீவில்லையானமையினுல் கெதியாகச் செய்பவேண்டும். அல்லாவிட்டால் செய்யமுடியாதெனவுங் கூறினன்.

அதன்பின்னரே, நீ கல்யாணத் தல்புடலில் ஈடுபட்டாய்?—ஆம்.

நீ உனது பெருமகனுகிய குமாரசாமியினிடம் காணியை ஈடுவைக்கும் விஷயமாகக் கதைக்கவில்லையா?—கேட்டபோது காணியை ஈடுவை எனவும் தான் உழைத்துக் கடனை (ஈட்டை) த் தீர்த்துவிடுவதாகவுங் கூறினன்.

நீதி:- கல்யாணம் முடிப்பதன் முன்னரா உறுதியைக் கொடுத்தாய்?—ஆம்.

எத்தனைநாளின் முன்பு?—3நாட்களின் முன்.

நியா:-குமாரசாமி தாகரைச் சந்தித்தமையாலேயே தாகர் தம்பிப்பிள்ளையும் கொத்தாரிஸ் வீட்டிலிருந்தார்?—ஆம்.

அங்கு போனபோது 45ரூபா உன்னிடம கொடுக்கப்பட்ட தல்லவா?—ஆம்.

அக்காசை யாரிடம் கொடுத்தாய்?—குமாரசாமியிடம் கொடுத்தேன்.

நகைகள் வாங்கும்படியாகவா கொடுத்தாய்?—ஆம்.

நகைகள் வாங்குவது யார்?—குமாரசாமிதான்.

கந்தையா தான் நகைகள் விஷபமாக ஒழுங்கு செய்திருக்கிறுனெனச் சொன்னுனு?—ஆம்.

குமாரசாமி கல்யாணத்தைப் பகலிலேயே நடத்தல் வேண்டுமெனச் சொன்னுனல்லவா?—இல்லை.

குமா:சாமி பெண்ணை அழைத்து வரும்படி எப்பொழுது கூறினன்?—இரவு 7, 8 மணியளவில்.

உண்மைதானு?—உண்மைதான்.

நீ பொலிஸ்கோட்டில் பகல் 10 மணியளவில் குமாரசாமி சொன்னதாகச் சொல்லியிருக்கிறுயே! அதன் முடிவென்ன?—அப்பொழுது கல்யாணம் நடத்தவேண்டுமெனச் சொன்னவன்தான். பின்னரும் இரவு 8 மணியளவில் கூட்டி வரும்படியும் நல்ல உடுப்பு மாட்டும்படியும் என்னிடம் கூறினன்.

இந்துசமயத்தவர்கள் முகூர்த்தவேளைகளிலேயே தாலிகட்டுவார்களென்பது உனக்குத் தெரியுமல்லவா?—ஆம்.

கல்யாணம் நடைபெற்ற வன்றும் முகூர்த்தநாள் என உனக்குத் தெரியுமல்லவா?—முகூர்த்தநாள் என 1-ம் 4-ம் எதிரிகள் சொன்னுர்கள்.

நீ குமாரசாமியை நம்பியதால் மோசம்போய் விட்டதாக இப்பொழுதாவது எண்ணுகிருயா?—ஆம்.

தளையசிங்கம் என்னசாதியைச் சேர்ந்தவனெனக் கேள்வியுற்ருய்?—வேளாளனென.

வேளாளனெருவன் உனது வீட்டிற்கு வந்து உனது மகளது கழுத்தில் தாலியைக் கட்டுவானென நீ எண்ணினுயா?—கந்தையா அப்படியே சொன்னுன்.

1-ம் எதிரி 4 ம் எதிரிக்கும், சொல்லியிருக்கக்கூடும்.—ஆம்.

உன்னுடையவும் மகளுடையவும் நன்மையை நினைந்தே கல்யாணம் பேசியிருக்கலாம்?—ஆம்.

மாப்பிள்ளை உனது வீட்டிற்கு வரமாட்டானெனச் சொல்லியமை நல்லபுத்தியல்லவா?—பதிலில்லை.

இம்மாதிரி ஒழுங்கையில் வைத்துத் தாலி கட்டாவிட்டால் இக் கல்யாணம் நடைபெற்றிருக்காதல்லவா?—நான் சம்மதித்திரேன்.

நீதியரசர்:- இவைகள் யாவும் ஏமாற்று என்பதாகவா இன்னமும் சொல்லுகிருய்?—ஆம்.

வேளாளர்கள் சாயக்காரர்களது வீட்டில் பெண்ணெடுக்கார்களல்லவா?—ஆம்.

உனது வீட்டிற்கு வந்து கல்யாணம் முடிப்பதெனச் சம்மதப்படாவிடில் என்ன செய்வாய்?—நானும் சம்மதப்படேன்,

மாப்பிள்ளை பகுதியாட்கள் சம்மதித்து உனது வீட்டிற்கு வந்தால் எவ்விதம் கல்யாணம் நடத்தியிருப்பாய்?—முறைப்படி வடிவாக நடத்தியிருப்பேன்.

நீயோ காசில்லாது காணியை ஈடுவைத்து நகைகளுக்குக் கொடுத்திருக்கிருய். அப்படியிருக்கையில் எவ்விதம் வடிவாகக் கல்யாணம் நடத்தியிருப்பாய்?—ஓரளவிற்கு நடாத்தியிருப்பேன்.

நியா:-கந்தையாவினுடைய வீட்டில் ஓர் சேலையும் ஓர் ரவிக்கையும் கெடுபட்டதல்லவா?—ஆம்

இந்துசமய முறைப்படி தாலி கட்டுவதன் முன்னராகவல்லவா கூறையும் ரவுக்கையும் கொடுப்பார்கள்.—ஆம்.

உனது மகள் அதிக சந்தோஷத்துடனல்லவா கூறையை உடுத்தாள்?—ஆம்.

நீங்கள் கார் நின்ற இடத்திற்குச் சென்றதின்பின்னர் சதாசிவத்தினுடைய வீட்டிற்குச் சென்றீர்களல்லவா?—இல்லை.

உனது மகளது கழுத்தில் தாலியைக் கட்டியது யார்?—தளையசிங்கமாக நடித்த கனகரெத்தினமென்ற 2-ம் எதிரியே கட்டினுன்.

குயிலனும் சுப்பையாவும் சதாசிவத்தினுடையவீட்டிலிருந்துதானுவந்தவர்கள்?—எங்கிருந்து வந்தார்களெனத்தெரியாது. (இந்தநேரத்தில் சின்னம்மா அழத் தொடங்கினுள்.)

யார் யார் மாப்பிள்ளைவீட்டிற்கெனப் போனுர்களெனத் தெரியுமோ?—1-ம் 2-ம் 3-ம் 5-ம் 6-ம் எதிரிகளும் சுப்பையாவும் எனது மகளும் பெருமாளும் காரிலேறினுர்கள். அந்நேரத்திலேயே நான் குமாரசாமியுடன் எனது வீட்டிற்குச்சென்றேன்.

பெண்பகுதிக்காக ஓர் ஆளாவது மாப்பிள்ளைவீட்டுக்குப்போவது எம்மூர் வழக்கமல்லவா?—ஆம்.

அதிகமாகப் பெண்கொடுத்த மச்சானே பெண்ணுடன் போகும் வழக்கமல்லவா?—ஆம்.

நீ மகளைக் கல்யாணம் முடித்துக்கொடுத்த சந்தோஷத்தினுலும், கல்யாணத்தைத் திருப்தியாக நினைத்ததாலுமே பெண்ணை அழைத்துக்கொண்டுபோகச் சம்மதித்தாய்?—இம்மாதிரி ஏமாற்றுவார்களென எனக்குத் தெரிந்திருந்தால் நான் பெண்ணை அவர்களுடன் அனுப்பியிருக்கமாட்டேன்.

சரஸ்வதியைத் தேடிக் கந்தவனக்கடவைக்குச் சென்றீர்களா?—ஆம்.

கந்தவனக் கடவைக்கு எவரிடம்போனீர்கள்?—மடத்திலிருக்கும் சாமியாரிடம் சென்றிருந்தோம்.

அதன்மேல் நியாயவாதி திரு. C. சுபாரத்தினம் சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்தார்.

நியா:- உனது குடும்பத்தில் குமாரசாமிதானே பெரிய மனிதன்?—ஆம்.

அவனுடைய தொழிலென்ன?—யாதொரு தொழிலுமில்லாது காவாலியாகத் திரிகிருன்.

உனது மகன் பெருமாளுடைய தொழிலென்ன?—நியாயதுரந்தார் அபூபக்காது கந்தோரில் "கிளாக்" ஆவதற்குப் பழகுகிருன்.

அவனிடம் இதுவிஷயத்தைப்பொறுப்பித்திருக்கலாமல்லவா?—அவன் சிறுபிள்ளையாதலால் அவனிடம் சொல்லவில்லை.

நீ உனது மகளுடைய கல்யாணத்தில் அக்கறையெடுக்கவில்லையென நான் எண்ணுகிறேன்.—நான் அக்கறையாக விருந்தேன் ஐயா.

நீ அக்கறை எடுக்கவில்லை என்பதற்கு நான் நியாயங்கூறுகிறேன். நீ யாதொரு தொழிலுமில்லாத காவாலியிடம் உனது மகளின் பொறுப்பைக் கொடுத்தமையால் அக்கறையெடுக்கவில்லையென்பது தெரிகிறதல்லவா?—கிட்டிய சொந்தக்காரனுகையால் அவனை நம்பினேன்.

யூரி:- ஓர் பெண்ணை மணம்முடித்துக்கொடுக்குந் தாயானவள் மாப்பிள்ளை எம்மாதிரியானவன் என விசாரித்தறிவது வழக்கமல்லவா?—ஆம்.

உன்னிடம் குமாரசாமி என்பவன் தனக்குத் தளையசிங்கத்தைத் தெரியுமென்றபோது நீ மாப்பிள்ளை கட்டையனு? நெட்டையனு? குணம் வாய்ந்தவனு? வடிவானவனு? வடிவில்லாதவனு? என அவனிடங் கேட்கவில்லையா?—நல்லகுணம்வாய்ந்தவனெனவும் அரசாங்க உத்தியோகமான ஓவசியர்வேலை பார்ப்பவனெனவுங் கூறினுன்.

இப்பொழுது உனது மகளுக்குத் தாலிகட்டியவன் எவ்வூர்வாசியென உனக்குத் தெரியுமல்லவா?—ஆம். மாகியப்பிட்டி வாசியானவன்.

அதன்பின் கடத்தப்பட்ட மங்கையாகிய நாகலிங்கம் சரஸ்வதி என்பவளை விசாரணை செய்தபோது கூறியவற்றின் சாராம்சம் வருமாறு :-

"எனக்குமுன் சாட்சியங்கொடுத்தவளே எனது தாயார். இவ்வருட முற்பகுதியில் எனக்குக் கல்யாணம் பேசுவதாகவும், அம்மாப்பிள்ளை வட்டுக்கோட்டைவாசியெனவும், அவர் கல்கமுவ என்னுமிடத்தில் ஓவசியர் வேலையாக விருப்பவரானவும் எனது தாயார்மூலம் அறிந்தேன். பங்குனி மாதம் 6-ந் திகதியன்று கல்யாணம் முடிப்பதற்காக நான் எனது தமையனுராகிய பெருமாளுடனும், எனது தாயாருடனும், குமாரசாமி, கந்தையாவுடனும், கந்தையா வீட்டிற்கு இரவு 12 மணியளவில் சென்றேன். அதன்முன்னர் கந்தையாவின்வீடு தெரியாவிட்டாலும் இப்பொழுது நான்சென்றவீடு கந்தையாவின் வீடென்பது தெரியும். அங்குசென்றதன்மேல் கந்தையாவின் மனைவி ஒரு சோடி காப்பைக் கையிலிட்டும் ஓர் அட்டியலைக் கழுத்திற் கட்டியும் விட்டாள். அவைகள் வெள்ளி நகைகள் என நினைக்கின்றேன். அதன்பின்னர் ஓர் கூறைச்சேலையும் ரவிக்கையும் எனக்குக் கொடுக்கப்பட்டது. அதனை நான் அணிந்து கொண்டேன். அதன்பின்பு வெளிக்கிட்டுக் குமாரசாமி கொத்தாரிஸ் வீட்டிற்கெனச் செல்கையில் அவரது ஒழுங்கையில் கார் நின்ற இடத்தில் கந்தையாவும் குமாரசாமியும் எங்களை அவ்விடத்தில் நிறகும்படி கூறிவிட்டு ஓர் வீட்டினுட் சென்று தளையசிங்கமாக நடித்த 2 ம் எதிரி, சதாசிவம், சுப்பையா, குயிலன், சுபாரத்தினம் இன்னும் சிலர் முதலியவர்களுடன் வந்தார்கள். அதன்மேல் 2-ம் எதிரியாகிய கனகரத்தினம் எனது கழுத்தில் தாலிக்கொடியைக் கட்டினுன்- (பார்த்து) இக்கொடியே எனக்குக் கட்டப்பட்டது. அதன்பின்பு கொத்தாரிஸ் குமாரசாமி வீட்டிற்கு அங்குநின்றவர்களெல்லோருடனும் போனேன். அஙகு இரு உறுதிகளுக்குக் கையெழுத்து வைத்தேன். திரும்பவும் நாங்கள் தாலிகட்டிய இடத்திறகே வந்தோம். எனது தாயாரும் குமாரசாமியும் எங்கள் வீட்டிற்குப்போக என்னைக் காரிலேற்றினுர்கள். எனது தமையன், மாப்பிளையாக நடித்த 2-ம் எதிரி, சதாசிவம், சுப்பையா, குயிலன், கந்தையா முதலியவர்களும் என்னுடன் காரிலேறினுர்கள். அதனபின் வட்டுக்கோட்டைக்குப் போவதாகச் சொல்லி மாகியப்பிட்டியிலிருக்கும் 3-வது எதிரியின் மனைவியின் வீட்டிற்குக் கொண்டுபோனுர்கள்.

நீதி :—அவ்வீடு சதாசிவத்தின் மனைவியினுடையதென எப்பொழுது தெரியும்?

சாட்சி :—அதன்பின்னரே தெரியும்.

2-ம் எதிரி உனக்குப் பொருந்திய மாப்பிள்ளையல்லவெனத் தெரிந்தால் சென்றிருப்பாயோ?—போயிருக்கமாட்டேன்.

" அங்கு சென்றதின்மேல் தளையசிங்கமாக நடித்தவனும் குயிலனும் சென்றுவிட்டார்கள். பின்பு குமாரசுவாமியை அழைத்துவரும்படி கந்தையா எனது சகோதரனை அனுப்ப, அவர்சென்று குமாரசாமியைக்கூட்டிவந்தார். சகோதரனை நான் காணவில்லை. குமாரசாமி என்னிடம்வந்து, ஒரு சோடி காதோலையைத் தந்து "தளையசிங்கம் வந்துவிட்டார். அவரது பெற்றோருக்கு இக்கல்யாணம் மிகவும் திருப்தீனமாகவிருந்தது. அவர்களை இப்பொழுது சமாதானப்படுத்திவிட்டோம். ஆகையினுல் வட்டுக்கோட்டையிலுள்ள மாப்பிள்ளையினது வீட்டிற்குச் செல்வதற்கு ஆயத்தமாயிரு" என்ருன்.

பின்பு 1-ம், 2-ம், 3-ம், 6-ம் எதிரிகளும் சுப்பையா என்பவனுமாகக் காரிலேற்றி நெல்லியடி என்னுமிடத்திற்குக் கொண்டுபோனுர்கள். அங்கு 1-ம் எதிரியையும் என்னையும் விடுத்து மற்றவர்கள் இராப்போசனமருந்தச் சென்றுவிட்டார்கள். அவ்வீட்டில் ஓர் மனுஷிமாத்திரமேயிருந்தாள். அன்றிரவு அவ்வீட்டி ஞேரறையில் நானும் அடுத்த அறையில் வீட்டு மனுஷியும், பக்கத்துத் திண்ணையில் கந்தையாவுமாகப் படுத்திருந்தோம். நான் நல்ல நித்திரையாகவிருக்கையில் 1-ம் எதிரி எனது பக்கத்தில் வந்து தொந்தரவுசெய்யத் தொடங்க நான் சப்தமிட முயன்றேன். அப்போது அவன் எனது வாயை அமர்த்திக்கொண்டு என்னுடன் பலவந்தமாகத் தேகசம்பந்தம் செய்துகொண்டான். என்னுலானமட்டும் இடங்கொடாது தடுத்தேன். வாய்க்கவில்லை. சப்தமிட முயன்றபோது "கத்தினுயேயானுல் உன்னை வெட்டிவிடுவேன்" எனவுங் கூறினுர். அடுத்தநாள் பொழுதுபடும் வேளையில் சுப்பையாவும் சதாசிவமும் அங்கு வந்தார்கள். அதன்பின் நடையிலேயே இனனுெர் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். யார் வீடென எனக்குத் தெரியாது. அங்கு ஒரு இரவும் ஒரு பகலும் இருந்ததின்மேல் வைத்தியர் ஒருவர் வீட்டிற்கும அதன்பின் வலிபுரக்கோவிலடியிலுள்ளதோர் மடத்திற்கும் அழைத்துச் செல்லப்பட்டேன். மடத்திற்கு 1-ம், 2-ம் எதிரிகளும் சுப்பையாவும் வைத்தியருமாகக் கூடிச்சென்ருர்கள். பின் அவர்கள் போய்விட்டார்கள்.

நீதி :—2-ம் வீட்டிலும் எதிரி உன்னுடன் தேகசம்பந்தஞ் செய்தானு?

சாட்சி :—ஆம்.

" அன்றிரவு நான் மடத்திலிருக்கையில் 1-ம் எதிரி என்னைப் பக்கத்தேயுள்ள ஓர் கடைக்கு அழைத்துச்சென்று அங்கும் தேகசம்பந்தம் செய்துகொண்டான். அன்றிரவு முழுவதும் எதிரியுடன் கடையிலேயே தங்கியிருந்தேன். 1-ம் எதிரி என்னுடன் முதல்முறை தேகசம்பந்தம் செய்ததின்மேல் அங்கு அகால நேரத்தில் 2-ம் 3-ம் எதிரிகளும் சுப்பையாவும் வந்தார்கள். 2-ம் எதிரி என்னை நோக்கி நீ 1-ம் எதிரியுடன் தேகசம்பந்தம் செய்துகொண்டாயோ எனக்கேட்க நான் இல்லையென்றேன். திரும்பவும் அவன் தான் நம்பவில்லையெனவும் அப்படியில்லையெனச் சத்தியஞ்செய்யும்படியும் கேட்க நான் பயமிகுதியினுல் இல்லையெனச் சத்தியஞ் செய்தேன். 2-ம் எதிரி தன்னுடன் தேகசம்பந்தஞ்செய்யவரும்படி என்னைக் கேட்கவுமில்லை.

பின்னர் 3-ம் எதிரி மாப்பிள்ளை கூட்டிவாட்டுமாம் எனச் சொல்ல நான் போவதற்கு எத்தனிக்கையில் 1-ம் எதிரி என்னைப் பிடித்துத் தள்ளியதுடன் கதவைச் சாத்திவிட்டு வெளியேயபோயவர்களுடன் பேச்சுவார்த்தைப்பட்டான். அதன் பெறுபேருக வந்தவாகள் திரும்பிச் சென்றுவிட்டனர். அன்றிரவு அக்கடையிலேயே தங்கியிருந்து அடுத்தநாட் காலையில் வேறோர் இடத்திற்குக் கொண்டுபோனுன். அதன்பின் வேறோர் இடத்திற்கு—அதன்பின் வேறோர் இடத்திற்கு—அப்படியே அனேக இடங்கட்கு அழைத்துச் சென்ருன். எதிரி இம்மாதிரி என்னை அழைத்துச் செல்லநான் பேதைப்பெண்ணுக விருந்ததாலும ஒருவருடைய உதவியுமின்றித் தனித்தவளானமையாலும், பயமிகுதியினுலும் எதிரி அழைத்த இடங்கட்கெல்லாம் நானும கூடச் சென்றேன். கடைசியாகத் திரிகோணமலைக்கு அழைத்துச் சென்று இளையதம்பியினது வீட்டில் கொணடுபோய் வைத்திருந்தான். அங்கிருக்கையில் நான 1-ம எதிரியின் செய்கைகளைப்பற்றி இளையதம்பியி

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

விண்ணுலகிலடையும் பேரின்பத்தை மண்ணுலகில் இல்வாழ்க்கையில் பொருந்திய வன்பின் பயனென்பர்.

எவ்வுயிர்க்கும் அன்பாயிரு
ஒருவனே கடவுள்
ஈழகேசரி

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண், டுளமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

—அப்பர்சுவாமிகள்.

யாழ்ப்பாணம், சுன்னாகம்:
யுவ௵ ஆவணி௴ ௩௰

## தலைமைக்காரர் நியமன முறை.

இப்போது இலங்கையில் தலைமைக்காரர் நியமிக்கப்படும்முறையைக்குறித்து விசாரணைசெய்து ஓர் அறிக்கை வெளியிடும்படி சென்றவருடம் நமது தேசாதிபதியாகும் சேர் எட்வேட் ஸ்ரப்ஸ் அவர்கள் ஒரு விசாரணைச்சபையை ஏற்படுத்தினர். அச்சபையினர் இலங்கையின்பல்வேறு பாகங்கட்குஞ்சென்று தலைமைக்காரர்களையும், அவர்கள் கடமைகளையும், அவர்கட்கும் பொதுசனங்கட்குமுள்ள தொடர்பினையும் நன்கு விசாரணை செய்து ஓர் நீண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கை இரண்டு பிரிவாகவுள்ளது. (1) தற்போதைய தலைமைக்காரர் நியமன முறையிலுள்ள குறைநிறைகள். (2) இம்முறையில் செய்யப்பட வேண்டிய திருத்தங்களும் மாற்றங்களும். பொதுவாக அநேக விஷயங்களில் இச்சபையினங்கத்தவர் இணங்கிச் சென்றனராயினும்சிலவிஷயங்களில் வேற்றுமை யுடையராய் தத்தம் பிரத்தியேகமான அபிப்பிராயங்களையும் வெளியிட்டுள்ளார்.

இச்சபையினர் தமது அறிக்கையில் காட்டிய பிரதம திருத்தங்கள் சிலவுள. மணியகாரன்மாரது பதவி முற்றாக நீக்கப்படவேண்டும்; இப்போதிருக்கும் உடையார் விதானைஎன்போரது இடங்களில் "பகுதி உத்தியோகத்தர்" (Division Officers) என ஒருவர் நியமிக்கப்படவேண்டும். கச்சேரிகளில் புதிதாக ஒரு உயர்தர உத்தியோகத்தர் (C. C. S.) நியமிக்கப்படவேண்டும். இவர்கள் பகுதி உத்தயோகத்தர்களை இடைக்கிடை சென்று மேற்பார்வை செய்யவேண்டும். அதாவது இந்த உத்தியோகத்தர்கள் தான் இதுவரையும் மணியகாரன்மார்செய்துவந்த கடமைகளைநடாத்துவரெனலாம்.

மேலே கூறிய மாற்றங்களை வகுத்த சபையினர் தற்போதைய தலைமைக்காரர்களது நிலைமையைக் குறித்து விசாரணைசெய்து வெளியிட்டன யாவும் உண்மையேயென எவரும் கூறுவர். பிரதம தலைமைக்காரன், உடையார், விதானை என்னுந் தலைமைக்காரருள் சிலரொழிந்த ஏனையோர் பொதுவாகச் சன்மார்க்கத்துக்கு விரோதமான வழிகளைக் கையாண்டுவருகின்றனரென எடுத்துரைத்தனர். கைலஞ்சம், பொய் முதலியவற்றை அஞ்சாது கைக்கொண்டு பொருளீட்டுகின்றனரென்பதையும் இவ்விசாரணைச்சபையார் ஆராய்ந்தறிந்து குறித்துள்ளார். பொதுசனங்கட்கு இவர்கள் மாட்டு நம்பிக்கையாவது அனுதாபமாவது கிடையாதென்பதும் உண்மையே. இவ்வித தலைமைக்காரர்கள் ஏற்படுதற்குத் துணையாயுள்ளதும் நெடுங்காலமாக அனுட்டானத்திலிருப்பதுமாகும் இந் நியமன முறை முற்றாகநீங்கவேண்டுமென்பதே யாவருடைய விருப்பமுமாகும்.

இதுவரை தலைமைக்காரராக நியமனம்பெறுவோர் தமது சீவிய காலம்வரையும் அவ்வுத்தியோகம் தம்மைவிட்டுக் களராதெனவும், தாம் வேறிடத்துக்கு மாற்றப்படாரெனவும் நன்கறிந்து சன்மார்க்கத்துக்கும் நீதிமுறைக்கும் மாறான எத்தனையோ காரியங்களைச் செய்ய முற்பட்டுத் தமது பரிபாலனத்துள் வைக்கப்பட்டோரைத் துக்கத்துள்ளாக்குகின்றனர். விசாரணைச்சபையாரது சிபார்சுப்படி பகுதி உத்தியோகத்தர் கச்சேரியிலுள்ள உயர்ந்த உத்தியோகத்தரால் தெரியப்படவேண்டும். தெரியப்படமுன் பரீட்சை நடத்தி அப்பரீட்சையில் சித்தியெய்துவது அவசியமெனவும் குறிப்பிடுகின்றது. கல்வி, ஒழுக்கம், தகுதி முதலிய நற்குணங்கள் அமைந்தோராயிருப்பதும் பிரதானமெனக் கூறப்படுகிறது. இலங்கையில் இவ்வாறான திருத்தம் இற்றைக்குப் பல வருடங்கட்கு முன்னரேயே ஏற்பட்டிருக்கவேண்டுமென்பது பலரபிப்பிராயம்.

அனுட்டானத்திலிருக்கும் தலைமைக்காரர் நியமன முறையைத் திருத்துவது என்பது எப்படிக் கூடும்? முழுவதும் சீர்கெட்டு நன்மை சிறிதும் பயவாத ஒன்றைத் திருத்துவது எப்படி? அதை முற்றாக நீக்கிவிட்டுப் புதிய முறையொன்றை அனுட்டானத்துக்குக் கொண்டு வருவதே முறை. பழைய முறையையும் புதிய முறையையும் கலந்து ஒருவழியை வகுப்பின், பழைய வியாதியே தலைப்பட்டு புதியதையும் பழுதடையச் செய்து பெருங் கெடுதியை விளைத்துவிடும். அரசினர் காலந்தாழ்த்தாது புதிய முறைகளைத் தேசத்தின் நிலைக்கும் தகுதிக்கும் ஏற்ப அனுட்டானத்துக்குக் கொண்டுவருவது அவசியம். அரசியல் விஷயங்களில் பல்வேறு பகுதிகளில் திருத்தங்கள் ஏற்பட்டுப் புதிய முறையிற் செல்ல, தலைமைக்காரர் நியமனமுறை மாத்திரம் பழம் பாடமாக விருப்பதா? தேசநலத்தையும் விருத்தியையும் நாடி ஏற்படுந்திருத்தங்களை யார்தான்விரும்பிஏற்கமாட்டார்? தலைமைக்காரரால் ஏற்பட்ட ஊழல்கள் எப்போது நீங்குமெனப் பெருமூச்சு விட்டோரும் பலருளர். புதியமுறை அனுட்டானத்துக்கு வரின், தேசநலத்தை உண்மையாக நாடினோர்க்குப் பெரும் உவகையுண்டாகுமென்பதில் ஐயமின்று.

---

### காதலியைத் தேடிச்சென்று காலன் கைப்பட்ட இந்திய மாணவன்

கல்கத்தாவைச் சேர்ந்த சுரேஸ் சந்திரரேய் என்பவர் இற்றைக்கு ஏறக்குறைய 5 வருடங்களின் முன் இங்கிலாந்துக்குக் கல்வி பயிலச் சென்றார். இவர் இந்தியாவுக்குத் திரும்பும்போது ஓர் அழகிய சுவீடிஸ் மங்கையைக்கண்டு காதல்கொண்டார். இவர் கல்கத்தாவுக்குத் திரும்பி வந்தபோதிலும் அப்பெண்ணுடைய எண்ணம் தினமும் மனதிற் றோன்றியதால் ஒரு முயற்சியும் இவராற் செய்ய முடியவில்லை. இவருக்கு அப்பெண்ணின் பெயர் 'இங்கிரட்' என்பதுமாத்திரமே தெரியும். உடனே இங்கிலாந்துக்குத் திரும்பவுஞ் சென்றார். அங்கு அவரது உறவினராகிய சர்வாரேய் அவரைச் சந்தித்தார். இருவருடங்களாக காதலியைத்தேடிப் பிரித்தானிய நாடுமுழுவதும் ஏற்ற ஊண், உடையின்றி அலைந்து திரிந்து க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்டு ஆச்வே வைத்தியசாலையில் காலகதியாயினர். இறக்குமுன்னராவது தமது காதலியைக் காணவேண்டுமென விரும்பியும் முடியவில்லை. இறக்கும்போது இவருக்கு வயது 23.

---

உலக அரசியற்போக்கு

# பிரிட்டிஷ் அன்னிய நாட்டு மந்திரியின் ஆணித்தரமான பேச்சு

### சமாதானத்தை நிலைநாட்ட வல்லரசுகள் ஒன்றுகூடாவிடில் நாங்கள் வெளியேறுகிறோம்

## சர்வதேசசங்கத்தின் ஆபத்தான நிலைமை

### பிரான்ஸிய மந்திரியின் பேச்சு முடிவாக்கும்

## முஸோலினியின் பிடிவாதம்

இதுவரையும் இத்தாலிய அபிசீனிய தகராறு யாவராலும் விவாதிக்கப்பட்டுவந்ததாயினும் இப்போதான் நெருக்கடியான நிலைமையை அடைந்துளது. இந்தமாதம் 10.ந் திகதி பிரிட்டிஷ் அன்னியநாட்டு மந்திரியாராகும் சேர் சாம்யேல்ஹோர் சர்வதேச சங்கத்தில்செய்த பிரசங்கம் எல்லா வல்லரசினர்மாட்டும் பெரும் திகிலையுண்டாக்கிவிட்டது. விஷயங்கள் நெருக்கடியான நிலைமையை யடைவதைக்கண்ட ஹோர் அவர்கள் மிக உறுதிப்பாடாகவும் வெளிப்படையாகவும் பிரிட்டிஷார்கொள்கை யாதென்பதை விபரமாகக் கூறிவிட்டனர். சர்வதேசசங்கப் பிரதிநிதிகள் அவர்பேச்சினைக் கேட்டதும் மனக்கிளர்ச்சியுடையராயினர்.

* *

பிரிட்டிஷார் சர்வதேசசங்க விஷயமாக நடந்துகொள்வதைநம்பி மோசம்போகவேண்டாமெனச் சிலர்கூறியதை ஹோர் அவர்கள் மிகவுந் தாக்கமாகக்கண்டித்தனர், இப்படி அபவாதம் கிளப்புதல் நீதியல்லவென்பது அவர் கருத்து. இதுவரையும் பிரிட்டிஷார் சர்வதேச சங்கத்தைப் பெரிதும் கௌரவமாக மதித்து வந்ததாகவும் இன்னும் அதன் மரியாதையைக் காப்பாற்றும்விஷயத்தில் தாம் பின்னிற்கப்போவதில்லையென்றுங் கூறினர். சர்வதேசசங்கத்தினரின் தீர்மானங்களை மதியாது யுத்தத்தை ஒருநாடு ஆரம்பித்தால் அந்நாட்டினை மற்றையநாட்டினர் ஒருங்குசேர்ந்து எதிர்த்து நல்லபாடம் படிப்பிப்பதே அவசியமெனப் பிரிட்டிஷார் சார்பாக ஹோர் அவர்கள் திடமாகக்கூறினர். சர்வதேசசங்கத்தின் மரியாதை காப்பாற்றப்படவேண்டும். இதற்குப் பிரான்ஸ் முதலிய வல்லரசினர் இணங்காவிடின் பிரிட்டிஷார் அச்சங்கத்தைவிட்டு வெளியேறுவதே முறையெனவும் ஹோர் அபிப்பிராயப்பட்டார்.

* * *

சர்வதேச சங்கத்தினர் செய்யக்கூடிய மூன்று பிரதானமான காரியங்கள் உள.

(1) சர்வதேச சங்கத்தில் அங்கத்துவம்பெற்ற அரசினர் தமது தேசத்திற்கேற்ற பாதுகாப்புக்குப் பங்கமேற்படாதிக்கத் தமது சேனையையும் யுத்ததளவாடங்களையும் ஆயுதங்களையும் குறைக்கலாம்.

(2) உலக சமாதானத்துக்குத் தீமையைவிளைப்பனவற்றைஎல்லா அரசினரதும் ஒற்றுமையுடன் அகற்ற முயலலாம்.

(3) சர்வதேச சங்கத்தின் கோட்பாட்டை மீறி இருநாடுகளுக்கிடையில் யுத்தம் ஏற்படின், சங்கத்தின் கட்டளையை மீறின நாட்டிற்கெதிராக மற்றைய வல்லரசுகள் யுத்தம் நிகழ்த்திச் சமாதானத்தை நாட்டவேண்டும்.

சர்வதேச சங்கத்தின் கட்டுப்பாடுகளைமீறி யுத்தங்கள் ஆரம்பிக்கப்படுகின்றனவென்று சேர் சாம்யேல் ஹோர் உருக்கத்துடன் பேசினார். யுத்த ஆயுதங்களைக்குறைக்கமுயன்றதனால் ஆயுதங்கள் கூட்டப்படுவதாயிற்று என்றார். சர்வதேசசங்கத்தில் சில பெரிய வல்லரசுகள் சேராதிருந்தது மிகத் துக்கமான காரியமாகவிருந்தது. ஆனால் அங்கத்துவம்வகித்த வல்லரசினர் சிலர் (ஜேர்மனி, யப்பான்) அதைவிட்டுச் சென்றது இன்னும் நட்டமாயிற்று. ஆகையால் இப்போது அங்கத்துவம் வகிக்கும் பிரான்ஸ், பிரிட்டிஷ் ஆகிய இந்நாட்டினராவது சர்வதேச சங்கத்தின் கௌரவத்தைக் காப்பாற்றாவிடில் பெரும் நஷ்டமேற்படுமே. யார்விட்டு வெளியேறினும் அதன் அதிகாரங்கள் அப்படியேயுள. *

சர்வதேச சங்கத்தின் முடிவுகளைப் பொருட்படுத்தாது விடுவோரைத் தண்டிக்கப் பிரிட்டிஷார் உண்மையாக ஆயத்தமெனவும் ஹோர் கூறினர். யுத்தம்நிகழாதிருப்பதற்கு, யுத்தமேற்படுதற்குக் காரணங்களை அறிந்து அக்குறைகளை நீக்கிவிடுவது அவசியம். நினைத்தவுடனே அரசியலில் மாற்றம் ஏற்படவேண்டுமென்ற நியதி உண்டு. இத்தாலியர் யாதாயினும் குறைகளை அபிசீனியர்மாட்டுடையராயின் அதைச் சர்வதேச சங்கத்தில் எடுத்துரைத்து அதை நாட்டவேண்டும். இத்தாலியர் யுத்தவெறி கொண்டால் அதற்குச் சர்வதேச சங்கம் ஆமாச்சொல்ல முடியுமா? அபிசீனிய அரசியலில் மாற்றம் ஏற்படுத்தவேண்டின் அந்நாட்டவரின் அங்கீகாரத்துடன் செய்யவேண்டும். பலாத்காரமாக மற்றையோர் தங்கள் எண்ணத்தை நாட்டுவதென்பது சாமானிய விஷயமன்று. சமரசமாக முடிவுசெய்வதே உசிதம். * *

அபிசீனியாவைத் தமது ஆதிக்கத்துள் இத்தாலியர் கொண்டுவரவேண்டுமென முயற்சிசெய்வது, அந்நாட்டிலுள்ள இயற்கைப் பொருள்களைக் கண்டே. சில வல்லரசினர் கீழுள்ள குடியேற்றநாடுகள் தொழில் செய்வதற்கு வேண்டிய பொருள்களை உடையனவாயிருக்கின்றன. சில அவ்வாறன்று. அதற்காகப் புதிதாகச் சில நாடுகளின் சுதந்திரத்தைப் பாதிக்கப் பார்ப்பது நீதியாகாதென்பது சேர் சாம்யேல் ஹோரின் அபிப்பிராயம். இவ்விஷயங்களை நன்காலோசித்து முடிவுசெய்யின் யுத்தமேற்படக் காரணமின்றெனவுங் கூறுகின்றார்.

* * *

சேர் சாமயேல் ஹோர் அவர்களின் உறுதியான பேச்சு இத்தாலியில் அதிகம் பரபரப்பை உண்டுபண்ணிவிட்டது. வாய்க்கு வந்தவாறு இத்தாலியப்பத்திரிகை ஹோர் அவர்களின் பேச்சினைக் கண்டிக்கின்றன. சர்வதேச சங்கம் மரியாதையுடன் நிலைபெறவேண்டின் இத்தாலியர் அச்சங்கத்தின் தீர்மானங்களை அங்கீகரிக்க வேண்டுமென ஹோர் சொல்ல இத்தாலியர் ஏற்றுக்கொள்கின்றாரில்லை. சர்வதேசசங்கம் மரியாதையைக் காப்பாற்ற வேண்டில் அபிசீனியா விஷயத்தில் சிறிதும் தலையிடாதிருப்பதுதான் முறையென இத்தாலியர் கூறுகின்றனர். அபிசீனிய விஷயத்தைத் தாமே முடிவுசெய்வதாக இத்தாலியர் கூறுகின்றனர். ஹோர் அவர்களின் பேச்சை நம்பி அவம்போகாதிருக்கும்படி பிரான்சியரை இத்தாலியர் எச்சரிக்கைசெய்கின்றனர். முசோலினி முன்னரே கூறியதிலிருந்து ஒரு மயிரிடைதானும் விலகமாட்டாராம். ஹோர் அவர்களின் பயமுறுத்துதலுக்கு முசோலினியர் அசைபவரெனவும் கூறப்படுகிறது. இத்தாலியர் சர்வதேச சங்கத்தை விட்டு வெளியேறுநாளை ஹோர் சமீபிக்கும்படி செய்துவிட்டாராம்.

* * *

தற்போது ஜெனிவாவில் சர்வதேச சங்கக்கூட்டத்தில் சமுகமளிக்கும் பிரான்சிய அந்நியநாட்டு மந்திரியாராகும் லவார் என்பவர் நிலைமை நெருக்கடியாகின்றது. இவர் என்னசெய்வதென வறியாது கலங்குகிறார். இன்னும் சமாசத்தை நாட்ட முயலுமென முசோலினியுடன் தந்தி மார்க்கமாகச் சம்பாஷிக்கிறார், ஆனால் முசோலினியோ சிறிதும் விட்டுக்கொடுக்கிறாரில்லை. அடுத்தபடியாக சர்வதேச சங்கத்தில் லவால் தமது பிரசங்கத்தால் பிரான்சியரின் கொள்கை யாதென்பதை எடுத்துக்காட்டுவார். பிரிட்டிஷாருடன் சேர்ந்துநின்று சர்வதேச சங்கத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுவதே அவசியம். இவர் ஹோர் அவர்களைப் பின்பற்றுவாரென்பதே இத்தாலியரின் அபிப்பிராயம். இவரின் அபிப்பிராயம் யாவராலும் மிகவும் ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்படுகிறது. பிரான்சியர் தம்முடன் இணங்கி நின்று சமாதானத்தை நாட்ட முயலாவிடின் தாம் ஐரோப்பிய விஷயங்களில் சிறிதும் தலையிடாது விலகவேண்டி வருமென்றும் ஹோர் நன்கு எடு

# இந்தியச் செய்திகள்.

## ஸ்ரீமதி கமலாநேரு

கமலாநேரு தைரியம் மிகக் குறைந்தவராயும் அதிக மாற்றமடைந்தவராகவும் காணப்படுகின்றார். நோய் சுகமடைவதும் சிறிதுசிறிதாகவே ஆகவேண்டியிருக்கிறது" என்னும் தந்திச் சமாச்சாரத்தைப் பண்டிதர் நேரு பேடன்வெயிலர் என்னுமிடத்திலிருந்து மகாத்மா காந்தியடிகட்கு அனுப்பியுள்ளார். ஆகாயக்கப்பல் மூலமாகத் தமது மனைவியார் வசிக்கும் இடத்திற்குச் சென்ற வெள்ளிக்கிழமை (4–9–35) புறப்பட்டுத் திங்கட்கிழமை போய்ச்சேர்ந்தனர். கமலா நேருவின் ஆரோக்கியம் இன்னுங் கவலைக்கிடமாக இருக்கின்றதென்பதாக அறிவிக்கப்படுகிறது. உட்கொள்ளும் உணவு ஜீரணமாகின்றதில்லையாம். எப்படியாயினும் தமது நாயகர் பக்கத்தில் நிற்பது அம்மையாருக்குப் பெரும் ஆறுதலாகும்.

## மகமதிய தலைவர்கள் கடத்தப்பட்டனர்

லாகூரில் இடிக்கப்பட்ட பள்ளிவாசலை மறுபடியும் கட்டுவிக்கும் நோக்கமாக மகமதியர் தாம் சட்டமறுப்பியக்கத்தை ஆரம்பிக்கவேண்டுமெனறுவல்பிண்டி மகாநாட்டில் முடிவுசெய்தனர். செப்டம்பர்மீ 20-ம்வ தொடக்கமாக ஷை இயக்கம் ஆரம்பிக்கப்படுமென மகமதிய தலைவர்கள் அறிக்கை வெளியிட்டனர். இவர்களில் அறுவர் அரசினரால் இப்போது கைதியாக்கப்பட்டு பாஞ்சாலநாட்டில் தூரத்திலுள்ள பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டனர். அவ்விடங்களில் இவர்கள் நிபந்தனைகட்கடங்கும்படி உத்தரவிடப்பட்டிருக்கின்றனர். லாகூரில் கலகம் நிகழ்ந்தால் அதனை அடக்கும் பொருட்டு மேலதிகமாக 100 பொலிசார் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

## பொலிசார் வேலை நிறுத்தம்.

லாகூருக்குச் சமீபமாகவுள்ள ஒரு ஊரில் சென்று நான்கு பொலிசார் நீதியீனமாக நடந்து கொண்ட குற்றத்திற்காக இப்போது அவர்கள் தமது பதவியிலிருந்து நீக்கப்பட்டனர். இரு உயர்தர பொலிஸ் உத்தியோகத்தர் வேலையில் சிறிது தாழ்த்தப்பட்டனராம். பயிரைக்காக்க அமைத்த வேலி பயிரை அழித்தால் பின் என் செய்வது?

## கண்டிக்கின்றார்.

இப்போது வியன்னு நகரில் வைத்தியசிகிச்சைபெறும் சுபாஸ் சந்திர வஸு அவர்கள் நினைத்தபிரகாரம் எல்லாவிடங்கட்கும் செல்லவியலாதவராயிருக்கின்றனர். இந்தியாவிலிருந்து ஐரோப்பா செல்லுங்கால் இவருக்கு அரசினரால் கொடுக்கப்பட்ட உத்தரவுச்சீட்டுப்படி (Pass Port) இவர் இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் போகவியலாதவராவர். வியன்னு நகரிலிருந்து இவ்விஷயமாக இந்தியா மந்திரிக்கு நிருபம் விடுத்தனர். இந்தியா மந்திரி ஜெர்மனிக்குப் போகலாமெனவும் ஆங்கிலேயர் நாட்டிற்குப் போகவியலாதெனவும் உத்தரவிட்டனர்.

இப்போது வஸு அவர்கள் இந்த உத்தரவு விஷயமாக ஆங்கிலேய சமூகத்தவர்க்கு ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். தாம் ஒரு பிரிட்டிஷ் பிரஜையாகவிருந்தும் இங்கிலாந்துக்குள் தம்மைப் போகவிடாது தடுப்பது முறையல்லவென்கின்றார். அரசினர் தம்மை அராஜகக் கட்சியினருள் வைத்து எண்ணுவது நீதியீனமான விஷயமென்றுங் கூறுகின்றனர். இந்திய சாதீய காங்கிரஸ் சபையின் காரியதரிசியாக விருந்தவராகும் தம்மீது அரசினர் அவநம்பிக்கை கொள்வது முறையல்லவென்கின்றார். இப்போதும் தான் வங்காள மாகாணக் காங்கிரஸ் சபையின் தலைவராக இருப்பதையும் அரசினர் அறிவராம். கேம்பிறிட்ஜ் சர்வகலாசாலையில் கற்றுப் பட்டம்பெற்ற தம்மை அரசினர் நீதியீனமாக நடாத்துவதைக்கண்டும் இன்னும் பிரிட்டிஷ் பொதுசனங்கள் ஒன்றுமே செய்யவில்லையென்று துயருறுகின்றார். மேலும் தமக்கு ஒரேயொரு ஆறுதலுண்டாம். வங்காளத்தில் 2500 பேர் தமது உரிமைகளை இழந்து என்னைப்போல் கட்டுப்பாடுகட்கு ஆளாகவேண்டியிருக்கின்றனர். அவருடன் நாமும் தாய்நாட்டின் பொருட்டு கஷ்டமடைவதே.

## காங்கிரஸ் தலைவர்.

காங்கிரஸ் சபைத்தலைவராகும் பாபு இராஜேந்திரப் பிரசாத் ஒக்டோவர் மாதம் 17-ந் திகதி சென்னை நகரில் வந்து சேருவார். அப்போது இவர்க்கு வேண்டிய உபசரணை செய்தற்காகச் சென்னை ஆந்திர காங்கிரஸ் சபையினர் வேண்டிய ஆயத்தங்கள் செய்கின்றனர். தமிழ்நாட்டுக் காங்கிரஸ் சபையினரும் வேண்டிய உபசாரங்கள் செய்ய முன்வந்துள்ளாராம். மேலும் சென்னையில் அகில இந்திய காங்கிரஸ் சபையும் கூடுகின்றது. அதற்குச் சமுகமளிக்க வருவோருக்கும் வரவேற்பு உபசரணை நடத்தப்படும்.

---

த்துக் காட்டினர் அதாவது இத்தாலியர் சர்வதேச சங்கத்தினின்று விலகுமுன் பிரிட்டிஷாரே விலகிவிடுவார் என்பதே.

*　*　*

பேடித்தனமாக எல்லா விஷயத்திலும் சர்வதேசசங்கம் நடந்து கொள்வதாயின் அதில் அங்கத்துவம் வகிப்பதால் ஒரு பயனுமின்றென்பது பிரிட்டிஷார் மாத்திரமன்று வேறும் சில அரசினரின் அபிப்பிராயம். சர்வதேசசங்கம் சமாதானத்தை நிலைநாட்டாவிடின், சங்கத்தீர்மானங்களை அங்கீகரியாது யுத்தம் ஆரம்பிக்கும்நாடுகளைத் தண்டியாவிடின் தாமதிவிருந்து தாமதியாது விலகிவிடுவதாக டென்மார்க், நோர்வே, சுவீடின் முதலிய நாட்டரசினரும் அறிவித்திருக்கின்றனர். இது முறையே. சர்வதேசசங்கம் தமக்கு இடப்பட்ட முயற்சிகளை நிறைவேற்ற வேண்டும் அல்லது குலைக்கப்படவேண்டும். *

இத்தாலியிலுள்ள பாப்பாண்டவரும் இடைக்கிடை தமது அபிப்பிராயத்தையும் வெளியிடுகிறார். முஸலோனியை இவர் கண்டிக்கக் கூடுமா? அன்று. யுத்தம் ஏற்படின் அதனால் ஏற்படும் கொடுமைகளையும் அநியாயங்களையும் எடுத்துக் காட்டினர். ஒரு நாட்டினைக் கைப்பற்றும் நோக்கமாகச் சண்டை செய்யப்படின் அச்சண்டை அநீதியானதென்றார் ஆனால் இத்தாலிக்குச் சொந்தமான நாட்டின் எல்லைப்புறத்தைக் காக்கும்படி யுத்தம் ஏற்படின் அது ஏற்றதென்கிறார். ஆனால் யுத்த மேற்படாது வழிகளைக் கண்டு பிடிப்பதை நிற்பாட்டி யுத்தத்தை ஆரம்பிப்பது தமக்குத் துக்கத்தை விளைவிக்கின்றதென்கிறார். சமாதான வழியொன்று ஏற்படும்படி தாம் கடவுளைத் துதிக்கப்போவதாகச் சொன்னார்.

*　*　*

ஹோர் செய்த பிரசங்கம் பிரான்ஸியரின் மனதையும் அதிசயிக்கச் செய்துவிட்டது. இத்தாலியருடன் பகைக்கப்பிரியமின்றிச் சிறிதுசிறிதாகச் சன்று சமாதானத்தை நாட்டலாமென்று நின்ற பிரான்ஸியர் சடுதியில் யாது செய்வதென முடிவு செய்யவேண்டியவராகின்றனர். ஹோரின் பேச்சு மிகவும்பயமுறுத்துந்தன்மையதாக விருந்ததாகவும் இனிச் சமாதானத்தை நாட்டுவது கஷ்டமென்பதும் பிரான்ஸிய பத்திரிகைகளின் அபிப்பிராயமாகும். இனி பிரான்ஸிய மந்திரியார் மறைந்து நிற்கவியலாது. தமது கொள்கைகளை வெளியாகக் கூறவேண்டியதே. பிறிட்டிஷாரையே பிரான்ஸியர் சார்ந்து நிற்பாரென இத்தாலியர் கருதுகின்றனர்.

திடமாக நின்று பிறிட்டிஷார் கொள்கைகளை எடுத்துரைத்த ஹோர் அவர்களின் பேச்சை மெச்சி பிறிட்டிஷ் பத்திரிகைகள் கட்டுரைகள் வரைகின்றன. பிறிட்டிஷாரைப்போல் மற்றைய வல்லரசினரும் திடமாக நிற்பின் சர்வதேச சங்கம் கௌரவத்தைப் பெறுமெனக் கூறப்படுகின்றது. பிறிட்டிஷார் இத்தப்பிரதானமான விஷயத்தில முன்மாதிரி காட்டியது போற்றப்பட வேண்டுமாம். சர்வதேச சங்கம் இவ் விஷயத்தில் பங்கமடையில் ஐரோப்பாவினையும். பிறிட்டனையும் இதுவரையும் இணைத்தபாலமும் முறிந்து விழுமாம். சமாதானத்தை நாடின வல்லரசுகள் இந்த அரிய சமயத்தில் ஒன்றுசேர்ந்து நின்று உண்மையை நாட்டாவிடின் விரைவில் இவர்களே வரப்போகும் தீமைகட்கு இரையாவர். சர்வதேச சங்கத்தின் பெருமை இனி பிரான்ஸியர் பொறுப்பிலுளது. அவர்களும் திடமாக நிற்பின் எல்லாம் நன்மையாகும்.

---

# சுற்றுடல்.

—"வாராந்தன்."

பண்டித ஜவஹர்லால்நேரு ஆகாயவிமான மார்க்கமாகப் பிறின்டிஸியில் நோய்வாய்ப்பட்டிருக்கும் தமது மனைவியாரிடம் போய்ச் சேர்ந்ததும் கமலாவின்நிலை பயங்கரமாகவே யிருக்கிறதெனவும், பெரும்பாலும் நோய் குணமாகுமெனத் தாம் நினைக்கிறதாகவுஞ் செய்தியனுப்பியிருக்கிறார். இவர் இந்தியாவிலிருந்து விமானத்திற் பிரயாணமாகுமுன்னர் கைரேகை நிபுணர் ஒருவர் இவரது மனைவியார் குணமடைவாரெனவும் நேரு அவர்கள் இந்தியாவுக்கு அரசராவாரெனவும் சோதிடங் கூறினாராம். நேரு தம்மை "அரசர்" எனபதுடன் சேர்க்கவேண்டாமென்று கூறியதும் ரேகை நிபுணர் தமது வசனத்தைமாற்றி இந்திய குடியரசாட்சி முதற்றலைவராவாரெனக் கூறினாராம்.

## "முடிசூடா மன்னர்'

நேருவிடம் பிரயாணத்துக்குப் போதிய உடைகளில்லாமையால் தமது தந்தையாரின் பழைய உடைகளைச் சாத்திக்கொண்டு சென்றிருக்கிறார். இவரைக் கைதுசெய்தபோது இவரது உடைகள் அரசினராற் கைப்பற்றப்பட்டன. இந்த நூற்றாண்டில் பல கண்டங்களிலும் ஆடையாபரணங்களற்றவர்களாகச் சிறைச்சாலையனுபவம் பெற்றவர்களே தலைவர்களாக விளங்குகிறார்கள். இதற்கு உதாரணமாக கிற்லர், முசோலினி, கெமல் பாஷா, டீ வலரா முதலியவர்களிருக்கிறார்கள். ஆகையால் நமது நேரு அவர்கள் இந்திய குடியரசாட்சியின் முதற்றலைவராவாரென்பதை யார் மறுப்பர்? இவரை இத்தாலியபட்டினத்தில் வரவேற்றது நமது முசோலினியின் அந்தரங்ககாரியதரிசியாம். இவரைத் தற்போது முடிசூடா மன்னரெனப் பலர் மொழிவர்.

## மாண்டாயோ!

அமெரிக்க ஐக்கிய அரசியற் றலைவராவதற்குப் போட்டிசெய்வதற்கெண்ணியிருந்த ஹோய் லோங் என்பவர் சென்ற திங்கட்கிழமை தமது எதிரி ஒருவரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இரையானார். இவர் தம்மை எமபெருமானது கையில்ஒப்படைத்தல் செய்யத்தமது எதிரிகள் சதியாலோசனை செய்திருந்ததை முன்னரேயறிந்திருந்தார். இவர் இதைச் சபையிற் கூறியபோது ஒருவரும் நம்பவில்லை. இவர் எங்கு சென்றாலும் துப்பாக்கிகளையேந்திய இரு தோழர்களைக் கூட்டிக்கொண்டே சென்றார். ஆனால் விதி மதியை வெல்வது வழக்கமே. இவரது உயிர்த்தோழனாகவிருந்து தொண்டாற்றியவர் ஒரு பாதிரியார். இவரது பெயர் சங். கில்பேற் சிமித். இவர்போன்ற அனேகர் ஆற்றொணாத் துயரில் அமிழ்ந்தியிருக்கின்றனரெனச் செய்திகள் கிடைத்திருக்கின்றன.

## இத்தாலியரின் யுத்தம்.

இத்தாலிய—அபிசீனிய விஷயத்தையிட்டு எனது நண்பர் ஒருவருடன் ஒருநாள் சாயந்தரம் உலாவி நிற்கையில் சம்பாஷித்தேன். அப்பொழுது அவர் முசோலினியைப்பற்றிய சம்பவமொன்றை என்னிடங் கூறினார். இத்தாலிய அரசராகும் விக்றர் இமானுவல் அவர்களது தம்பியாருக்கும் நமது முசோலினிக்குமிடையில ஏதோ ஓர் சம்பவத்தையிட்டுத் தகராறு ஏற்பட்டது. இருவருஞ் சண்டையிட்டே அதைத் தீர்த்துக் கொள்வதாகத் தீர்மானித்தார்கள். அரசரது தம்பியார் வாளால் ஓங்கி முசோலினியின் நெஞ்சில் தாக்கினார். முசோலினி உள்ளுக்கு இரும்பாற் செய்த சட்டையணிந்திருந்ததினால் வாளே முறிந்தது; அரசருடைய தம்பியார் கோபாவேசங்கொண்டு "நீ ஒரு கோழை நெஞ்சனாயிருக்கிறாய்" என்று கூறி முகத்தில் முறிந்த வாளை எறிந்துவிட்டுச் சென்றார். அக்காயங் காரணமாக முசோலினி வைத்தியசாலையிற் சில நாட்களைக் கழித்தாராம்.

## பாப்பாண்டவரின் போதனை

ஆகாயத்தில் 'வானவில்லு'த் தோன்றுவதற்குக் காரணம் கிறிஸ்தசமய நூலில் கூறப்பட்டிருக்கின்றது. வெள்ளப்பிரளயத்தில உலகம் அழிந்த காலத்தில் யேசுக கிறிஸ்து தோன்றி இனிமேல் உலகில் பிரளயம் ஏற்படாதென்பதற்குச் சாட்சியாக இந்த வில்லை வானத்தல் அமைத்தாராம். சென்ற கிழமை கிறிஸ்தவகுருத் தலைவராகிய பரிசுத்த பாப்பாணடவர் ரோமாபுரியில இத்தாலிய—அபிசீனிய யுத்தத்தையிட்டுக் கூறியவை:—

"ஆகாயத்தில் வானவில்லுக் காணப்படுகிறது. நாங்கள் சமாதானத்தையே உண்டாக்கும்படி சருவேசுரனை வேண்டினோம். பெரியவர்களிடையேயுள்ள விருப்பங்களும் உன்னத நிலையை அடையவேண்டுமென்ற ஆசைகளும் பூர்த்தியடைதலவேண்டும். ஆனால அவைகளை நீதியாகவும் சமாதானமாகவும் மகிமையாகவும் அடைதல்வேண்டும். ஏனெனில் நீதிக்கு மாறுகப் பாவமொன்றேயுளது. அது மனிதரைக் கேவலமாககிவிடும. எங்களுக்குச் சமாதானமே தேவை. ஏனெனில் அதுயுத்ததாலவிளையக்கூடிய தீங்குகளைத்தவிர்த்துவிடும."

## பார்சிப் படையெடுப்பு.

பார்சிப் பெண்கள் படக்காட்சியில் நடிப்பது அவமானமாம். இருபார்சிப் பெண்கள் படக்காட்சி நடிப்பில பங்குபற்றி விட்டதன் காரணமாக பார்சி சாதியத்தாருள் கண்டனக் கூட்டங்களும் படையெழுச்சியுமாகவேயிருக்கிறது. இதன் காரணத்தை ஓர் பார்சி அன்று விபரித்தார். "இந்தியாவில் படக்காட்சியிற் தோன்றும் பெண்களின் நடத்தையும மரியாதையும் விரும்பத்தக்கதல்ல. ஆகையால பார்சிப்பெண்களும் அவர்களுடன் சேர்ந்துநடிப்பது கௌரவக்குறைவாகும். உலகத்தின் கண்ணே 100,00 பார்சிகள் மாத்திரமே இருக்கிறார்கள். தொகையிற் குறைந்தவர்களாயிருத்தலால் ஒருவரோடொருவர் உறவினராவோம். அதுகாரணமாக நமது சாதியத்தாரில் ஒவ்வொருவருக்கும் அது அவமானமாக விருககும" என்றார்.

## யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டு விசாரணை-18

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ன் மனைவியிடம் முறையிட அவள் இளைய தம்பியிடம் கூறினுள். அதன்பின்பு சுப்பிரமணியம் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கு நாங்கள் புருடன்-மனைவி போல வாழ்ந்துவந்தோம். அங்ஙனமிருக்கையில் எதிரி என்னை இருமுறை அடித்தார். அதன்பின் திரிகோணமலைப் பொலிசார் என்னை அழைத்துச்சென்றனர்.

நீ இளையதம்பியின் மனைவியிடமும் 1-ம்எதிரி உன்னுடன் பலவந்தமாகத் தேகசம்பந்தம் செய்துகொண்டதாக முறையிட்டாயா?—ஆம்.

நீ அச்செயலுக்குச் சம்பந்தப்படாதுவிட்டாலும் உன்னால் அதனைத் தடுக்க முடியாதல்லவா?—ஆம்.

ஓர்காலமும் நீ கண்டிராத அன்னிய தேசத்தில் மிகவும் அந்தரப்பட்டுவிட்டாய். எமக்கும் மிகுந்த துக்கம் என்பதை அறிந்துகொள்.—ஆம்.

சாட்சியை நியாயவாதி திரு. குணம் ஸ்பென்சர் குறுக்குவிசாரணை செய்தார்.

நியா: இதற்குமுன்னரும் கந்தையாவைத் தெரியுமா?—தெரியாது.

உனது சகோதரனுடன் 1-ம் எதிரி சினேகிதமல்லவா?—தெரியாது.

பெருமாளுக்கு என்ன தொழில்?—திரு. அபூபக்கரது கந்தோரில் கிளாக்காகப் பழகிறார்.

கச்சேரியில் கிளாக்காக இருப்பதாக முன்னர்கூறியிருக்கிறாயே?--(பதிலில்லை)

நீ திரிகோணமலையில் நீதிபதி முன்னிலையில் கந்தையாவைத் தவிர்ந்த ஏனைய எதிரிகளைப்பற்றியாவது ஏனைய செயல்களைப் பற்றியாவது தெரிவிக்கவில்லையே—ஆம்.

உன்னைச் சதாசிவம் வீட்டிற்குக் கொண்டுபோனபோது அவ்வீடு அலங்கரிக்கப்பட்டிருந்ததா?—இல்லை.

யாராவது மணப்பெண்ணாகிய உன்னை வரவழைத்தார்களா?—இல்லை.

அங்கு சென்றபோது சதாசிவத்தின் மனைவி வரவேண்டாமெனத் தடுத்தாளா? இல்லை.

நீ அங்குசென்றமை அவளுக்குச் சம்மதமில்லையல்லவா?—ஆம்.

அங்கு உன்னை 2-ம் எதிரி விட்டுப்பிரிந்தாரல்லவா?—ஆம்.

அன்றைய தினத்தில் காலைமுதல் மாலைவரையில் யார் யார் நின்றார்கள்?—1-ம் 3-ம் எதிரிகளும் சுப்பையாவும்.

(இங்கிலையில் சாட்சி சென்ற வீடுகளை விஸ்தரித்தாள்.)

நல்லூரில் நொத்தாரிஸ் வீட்டிற்குப் போனபோதும் 6-ம் எதிரியைக் கண்டாயா?—ஆம்.

உனனிடம் காதோலையைத் தந்தது யார்?—குமாரசாமி.

காதோலையைத் தந்ததின்மேல் பெருமாளையும் அழைத்துச் சென்றான்?—தெரியாது.

அதன்மேல் அல்வாய்க்கு அழைத்துச் செல்லப்பட்டாய்?—ஆம்

அவ்வீட்டிலிருந்த மனுஷியின் பெயர் தங்கம்மாவா?—தெரியாது.

நீதி: (தங்கம்மாவைக் காட்டி) இவள் தானா அவ்வீட்டிலிருந்தவள்—ஆம்.

நியா:- நீங்கள் நெல்லியடியிலிருந்து வைத்தியர் வீட்டிற்குச் செல்கையில் யார் யார் கூடவந்தார்கள்?—2-ம், 3-ம், 6-ம், எதிரிகளும் சுப்பையாவும்.

அடுத்தநாள் அவ்விடமிருந்து அத்தாய் என்னுமிடத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டாயா?—ஆம்.

குயிலனாகிய 6-ம் எதிரியும் சுப்பையாவும் சதாசிவமும் ஒவ்வொரு இடமும் கூடிவந்ததாகத் தெரிவித்திருக்கிறாய்?—இல்லை.

மடத்திற்குக் கொண்டுபோனபோது 3-ம் எதிரியும் கூடவந்தானா?—ஆம்.

வல்லிபுரக்கோவிலுக்குக் கூட்டிச்செல்லும்போது யார் யார் கூடவந்தார்கள்?—2-ம் 3-ம் எதிரிகளும் சுப்பையாவும்.

வைத்தியர் வீட்டிலிருந்து புறப்படும்போது வைத்தியருங்கூடவந்தாரா?—ஆம்.

உறுதி எழுதும்போது 3-ம் எதிரி அங்கு நின்றானா?—ஆம்.

இதற்குமுன்னர் சதாசிவத்தைத் தெரியுமல்லவா?—இல்லை.

அதன்பின்னர் நியாயவாதி சபாரத்தினம் விசாரணை செய்தபோது கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:-

குமாரசாமி உங்கள் வீட்டில் வசித்தமைக்குக் காரணமென்ன?—பெற்றார் இறந்துவிட்டமையினாலேயே.

அதற்குமுன் அவன் எங்கிருந்தான்?—தெரியாது.

தெரியுமா?—தெரியாது.

குமாரசாமிதானே உனது கல்யாணத்தை ஒழுங்குபண்ண அதிகம் பிரயாசைப் பட்டவன்?—ஆம்.

நீதி:-ஏன் அதிக பிரயாசை எடுத்தான்?—தெரியாது.

நியா:-ஏனெனில், அக்காலத்தில் உனது நடத்தை நன்மையாகவில்லாததால் இம்மாதிரி உன்னைக் கட்டியடிக்கப்பார்த்தார்கள்?—அப்படியில்லை.

அதன்மேல் சரஸ்வதியின் சகோதரனாகிய நாகலிங்கம்-பெருமாள்பிள்ளை சாட்சியாக விசாரணை செய்யப்பட்டார். அப்போது சாட்சி தாயாரதும் சகோதரியினதும் சாட்சியத்தையொட்டியே வாக்குமூலங் கொடுத்தார்.

பின்னர் நியாயதுரந்தரும் நொத்தாரிசுமாகிய திரு C. T. குமாரசாமிஎன்பவர் கொடுத்த வாக்குமூலத்தின் சாராம்சம் வருமாறு:—

1-ம், 3-ம், 5-ம் எதிரிகளும் சதாசிவமுமாகச் சேர்ந்தே முதன்முதல் உறுதியைக் கொண்டுவந்து தந்தார்கள். அப்போது ஈட்டுக்காசின் ஒருபகுதியாகிய 45 ரூபாவை முற்பணமாகப் பெண்ணினுடைய தாயாரிடம் கொடுத்தேன். 6-ந் திகதியன்றே கல்யாணம் செய்யப்போவதாக எனக்குக் கூறியதுடன் அன்றே இரவு 7 மணியளவில் உறுதிமுடிப்பதற்கு வருவதாகவும் சொல்லிச்சென்றார்கள். நான் அவர்களை இரவு 10 மணி வரையில் காத்திருந்து விட்டுப் படுக்கைக்குச் சென்றேன். சரியாகப் 12 மணிவரையில் வந்தார்கள். சின்னம்மாவும் 1-ம், 2-ம், 4-ம், 5-ம் எதிரிகளும், சரஸ்வதியும், பெருமாளும், தரகர் தம்பிப்பிள்ளையும் வந்தார்கள். இன்னுமனேகரும் வந்தார்கள். ஆனால் நான் கவனியாது எனது தொழிலில் ஈடுபட்டிருந்தேன். அப்போது நல்லூரிலுள்ள சொரியலான ஓர் காணியின் பங்காகிய 14 குளிகளைத் தாயாராகிய சின்னம்மா சீதனமாகக்கொடுக்க மணப் பெண்ணாகிய சரஸ்வதியும் மாப்பிள்ளையான தளையசிங்கமும் (2-ம் எதிரியைக்காட்டி) அதனை ஏற்றதாக 3342-ம் இலக்க உறுதியில் கையெழுத்திட்டார்கள். கட்டளைச்சட்டத்தின்படி எனக்குத் தெரியாதவர்களைச் சாட்சிக்காரர் கூறிய உறுதியின்படி சத்தியவாசகத்திற் காட்டியிருக்கிறேன். 1-ம் 5-ம் எதிரிகளே சாட்சிக்காரர்களாகக் கையெழுத்திட்டிருக்கிறார்கள். 3343-ம் இலக்க ஈட்டுறுதியிலும் சரஸ்வதி, தளையசிங்கம், சின்னம்மா, குருசாமி முதலியோர் கையெழுத்திட 1-ம 5-ம் எதிரிகள் சாட்சியாகக்கையெழுத்திட்டிருக்கிறார்கள். அவ்வுறுதியில் $1\frac{229}{356}$ குளியெனவும் ரூபா 150 எனவும் காட்டப்பட்டிருக்கிறது. அவர்கள் கையெழுத்துவைப்பதன்முன்பு நான் எனது கடமைகளாகிய வாசித்துக்காட்டல், விளங்கப்படுத்தல் முதலியவற்றைத் தவறாதுசெல்தேன். பின்னர் எனது சலாரைக் கழித்துக்கொண்டு மிகுதியாகிய 85 ரூபாவைக்கொடுக்கவேண்டியவர்களிடங்கொடுக்கையில், அவர்கள் 1-ம் எதிரியிடம் கொடுக்கும்படி சொன்னமையால் நான் அவனிடமே கொடுத்தேன்.

இந்துசமய ஆசாரப்படி தாலிக்கொடியை மாத்திரம் கட்டினால் அது சடங்காக ஏற்றுக்கொள்ளப்படுகின்றதா?—வறியவர்களுள் அப்படியும் சிலர் செய்வார்கள்.

மிகவும் ஆச்சரியம்.

சாட்சியை இரு நியாயவாதிகளும் குறுக்குவிசாரணை செய்தார்கள்.

அதன்பின்பு மணப்பெண்—மாப்பிள்ளையைக்கொண்டுசென்ற காரின் டிரைவராகிய முருகேசு-சின்னத்தம்பியும் சரஸ்வதியின் மாமனாகிய வைரமுத்து-ஆறுமுகம், மாகியப்பிட்டியிலிருந்து நெல்லியடிக்குச் செலுத்திய காரின் சொந்தக்காரனான இரங்கசாமி-அமிர்தலிங்கமும் அக்கார் டிரைவராகிய கந்தையா-சின்னத்துரையும் பெண்ணை வைத்திருந்த வீடுகளுள் ஒன்றின் (அல்வாயில்) சொந்தக்காரியாகவிருந்த இளையதம்பி பெண் தங்கம்மாவும், அளவெட்டிப்பகுதிப் பொலிஸ்விதானை சரவணமுத்துவும்விசாரணைசெய்யப்பட்டார்கள்

இத்துடன் வழக்காளிபக்க விவாதம் முடிவுற்றது.

அதன்மேல் இவ்வழக்கின் 3-ம் எதிரியும் தையல் மெசீன் கம்பெனி ஏஜண்டுவுமான சூரியர்-சதாசிவம் வாக்குமூலங் கொடுத்தார். சாராம்சம் வருமாறு—

“பங்குனி மாதம் 6-ந் திகதியன்று 2-ம் எதிரி என்னிடம் வந்து அன்றையதினம் தனக்கு நல்லூரில் கல்யாணம் நடக்கப்போவதாகவும், தான் ஓர் நண்பனாகையால் தன்னுடன் கூடி வரும்படியாகவும், எனது சகோதரியின் வீட்டில்தான் தங்கியிருப்பதற்கு உதவிசெய்யும்படி கேட்டார். நான் தங்கியிருக்கலாமெனச் சொல்லியதுடன் கூடச்சென்றேன். போனபோது தெருவில் 1-ம் 6-ம் எதிரிகளையும் சந்தித்து நாங்கள் நால்வருமாகக் கந்தரோடையிலிருக்கும் சின்னத்தம்பியிடம் சென்று அவருடைய காரைக்கேட்டோம், பின்னர் நால்வரும் ஏறிச் சுன்னாகம் சந்தைக்குச் சென்று மரக்கறிச் சாமான்கள் வாங்கிக்கொண்டு நல்லூரிலுள்ள எனது சகோதரியின் வீட்டிற்குச் சென்றோம். உடனே 1-ம் எதிரி எங்கோ போய் சிறிது நேரத்தின்பின் அங்கு வந்து 2-ம் எதிரியுடன் சம்பாஷித்தார், இராவானதின்மேல் 1-ம் எதிரி சிலருடன் அங்குவர—அதாவது மணப்பெண், அவள் தாயார், பெருமாள், 4-ம் எதிரி, மாப்பிள்ளை, இன்னுஞ் சிலர் முதலியோர்கள் ஒழுங்கையிலுள்ள படலையடிக்கு வந்தார்கள். 1-ம் எதிரி 2-ம் எதிரியிடம் தாலிக்கொடியைக் கட்டும்படி சொல்ல, தாலிக்கொடியை 2-ம் எதிரி கட்டினார். பின்னர் 1-ம், 2-ம், 4-ம், 5-ம் எதிரிகளும் சின்னம்மாவும் பெருமாளும், ஏனையோர்களும் நியாயதுரந்தரர் குமாரசாமியினது வீட்டிற்குச் சென்றார்கள். என்னையும் குயிலனையும் 1-ம் எதிரி அங்கு நிற்கும்படி சொன்னமையால் நாங்கள் செல்லாது காரடியில் நின்றோம். சிறிது நேரத்தின்பின் யாவரும் காரடிக்கு வந்தார்கள். பின்னர் தாயையும் குமாரசாமியையும் தவிர்ந்த நாங்களெல்லோரும் காரிலேறி மாகியப்பிட்டிக்குச்சென்று 2-ம் எதிரியின் வீட்டுக்குச்செல்லும் ஒழுங்கையடிக்குப்போனோம். அங்கு கார் மறிக்கப்பட்டது. அப்பொழுது 2-ம் எதிரி என்னை நோக்கித் தான் தனது பெற்றார்களுடைய சம்மதமில்லாமல் கல்யாணம் செய்துகொண்டதாகவும் தான் பெண்ணை அழைத்துக்கொண்டு தனதுவீட்டிற்குப்போனால் தனது பெற்றோர் தன்னைப் பேசுவார்களாகையால் அங்கு போகமுடியாதெனவுங் கூற அதன்மேல் நாங்கள் எனதுவீட்டிற்குச்சென்றோம். அங்குசென்றதும எனது மனைவி விருப்பமில்லாதிருக்க நான் அவளைச் சமாதானஞ்செய்து மணப்பெண்ணையும் மாப்பிள்ளையையும் அங்குவிட்டேன்.

உடனே இரண்டாம் எதிரி வெளியே போய்விட்டு திரும்பிவந்து தனது பெற்றோர்களுக்குச் சம்மதமில்லையென்று சொல்ல நானும் எனது மனைவிக்கு விருப்பமில்லையாதலால் இங்கிருக்க முடியாதெனச் சொன்னேன். பின்னர் இரண்டாம் எதிரிஒரு காரைப்பிடித்து ஏறிக்கொண்டு என்னையும் அழைக்க நானும் கூடப்போனேன். கார் நேராக அல்வாய்க்குச் சென்று முதலாம் எதிரியின் மனைவியினுடைய வீட்டிற்குப் பெண்ணைக் கொண்டு போனார்கள். சிறிதுநேரத்தின் பின் முதலாம் எதிரியையும் பெண்ணையும் அங்கு விடுத்து நாங்கள் திரும்பி விட்டோம். அடுத்தநாளாகிய சனிக்கிழமையன்று பின்னேரம் மூன்று மணியளவில் இரண்டாம் எதிரி என்னிடம் வந்து தான் கொண்டுபோய் விட்டஇடத்தில் பெண்ணைக் காணவில்லையாதலால் தேடிப் பார்க்கலாம் வாவென அழைக்க நானும் சுப்பையாவும் இரண்டாம் எதிரியும் சைக்கிளில் சென்று அல்வாய், நெல்லியடி முதலிய இடங்களில் தேடிப் பார்க்கும்போது நடுநிசியாய் விட்டதால் நெல்லியடியில் படுத்துறங்கினோம். மற்றநாள் அதிகாலையில் எழுந்து சரணவாய் வைத்தியர் வல்லிபுரம் வீடு முதலியவற்றைத் தேடி வருகையில் ஓர் மோட்டார்பஸ் சாரதி என்னைச் சந்தித்து, அவர்கள் வல்லிபுரக்கோயிலடியில் நிற்பதாகக் கூற நாங்கள் இரவு 12 மணிவரையில் அவர்கள் தங்கியிருந்த கடைக்குச் சென்று கூப்பிட்டோம் உடனே 1-ம் எதிரி எழும்பி வர 2-ம் எதிரி பெண்ணையும் 1-ம் எதிரியையும் வரும்படி அழைக்க அவன் மறுத்ததால் திரும்பவும் பெண்ணையாவது தன்னுடன் விடும்படி கேட்டான். அதற்கு 1-ம் எதிரி ஓர் பொறுப்பைத் தந்துவிட்டுப் பெண்ணை அழைத்துச் செல்லும்படியும் கூறச் சிறிதுநேரம் வாக்குவாதம் நடந்தது.

அதன்பின் முடிக்குரிய நியாயவாதி திரு. குணசேகராவும், நியாயவாதி திரு. குணம் ஸ்பென்சரும் தத்தமது கட்சிகளை வலுப்படுத்தும் நோக்கமாக நீண்ட சொற்பொழிவு செய்தார்கள். நீதியரசரும் வழக்கின் திட்பநுட்பங்களை மிகவும் நுணுக்கமாக யூரிமாருக்கு எடுத்துக் கூறினர்.

சிறிதுநேர ஆலோசனையின்பின யூரிமார் 6-ம் எதிரியின் விஷயத்தில் 6 பேரினது அபிப்பிராயம் ஒத்திருப்பதாகவும், மற்ற எதிரிகளது விஷயத்தில் ஏகமனதாக இருப்பதாகவுங் கூறி, 1-ம் எதிரியாகிய கந்தையா 3-ம், 4-ம், 5-ம், 10-ம், 12-ம் குற்றச்சாட்டுகளுக்குக் குற்றவாளியெனவும், 3-ம், 6-ம் எதிரிகள் 3-ம் குற்றச்சாட்டுக்குக் குற்றவாளிகளெனவும், ஏனைய 4-ம், 5-ம் எதிரிகள் சுற்றவாளிகளெனவுங் கூறினர்.

நீதியரசர் 4-ம், 5-ம் எதிரிகளை விடுதலை செய்துவிட்டு 1-ம் எதிரியை நோக்கி, “நீயே இச்சம்பவம் முழுவதையும் நடத்தியிருக்கிறாய். மற்றைய எதிரிகளையும் ஏமாற்றியிருக்கிறாய். அத்துடன் உலக விவகாரமறியாத இளம்பெண்ணையும் ஏமாற்றி உனது காவாலிக்குணத்தைக் காட்டிக் கெடுத்துவிட்டாய். நீ அவளை ஓர்முறை கெடுத்ததல்ல; அவளது சீவியத்தைப் பாழாக்கிவிட்டாய். ஆனமையால் முறையே 3, 10, 1, 1 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கிறேன். நீ எல்லாத் தண்டனையையும் ஒரேகாலத்தில் (10 வருடம் அநுபவித்தல் போதுமானது” 2-ம் எதிரியைநோக்கி “நீ எல்லாக் குற்றச்சாட்டிற்கும் குற்றவாளியென ஒத்துக்கொண்டாலும் நான் மிகுதியை விடுத்து 6-ம் 9-ம் 11-ம் குற்றச் சாட்டுகளுக்கு மாத்திரமே உனக்கு 5 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கிறேன்” எனவும் 3-ம் 6-ம் எதிரிகளை நோக்கி “உங்களுக்குத் தனித்தனி 3வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கிறேன்” எனவுந் தீர்ப்புச்செய்தார்.

இன்றுடன் சுப்பிறீம்கோட்டு விசாரணை முடிந்தது.

## ஆடவரின் உடையுடன் தப்பி ஓடிய ஆசிரியை

கம்பகா, 9

வெலிப்பிலாவ வித்தியாசாலையில் ஆசிரியையாயிருக்கும் டோனா மலிக்கா என்னும் 26 வயதுடைய மங்கையை ஜோன் பெரேரா, அப்பு, பெர்னாண்டோ, ரூபல் அப்பு, பயசகாமி, பென்சா பெர்னாண்டோ, அல்பெனிஸ் பெரேரா என்பவர்கள் சட்டத்துக்கு மாறாகக் கடத்திச்சென்றார்களெனப் பொலிஸ் பரிசோதகர் திரு. W. A. தசநாயக்கா கம்பகாப் பொலிஸ் கோட்டில் குற்றஞ் சாட்டினர். கென்டாலியத்தைப் பொலிஸ்விதானையும் எதிரிகளுக்குஇதுவிஷயத்தில் உதவிபுரிந்தாரெனக்குற்றஞ்சாட்டப்பட்டது.

டோனா மலிகையின் சாட்சியம்:

“செப்டம்பர் மாசம் 3-ந் தேதி காலையில் நான் இரு மாணவர்களுடனும் லெசின்நோனா, சீலாவதி என்பவர்களுடனும் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்தேன். நாங்கள் விதானையினுடைய வீட்டு வாயிலுக்குச் சமீபத்தில் போகும்போது ஜோன் பெரேரா வந்து எனது கையில் பிடித்தார். அவருடன் கூடிச்செல்ல மறுத்தால் கையில் வைத்திருந்த கத்தியால் வெட்டிவிடுவதாகப் பயமுறுத்தினார். பின்னர் என்னை அவர் காட்டுக்குள் இழுத்துச்சென்றார். அன்று மாலை 6 மணி வரையிலும் அவருடன் அங்கிருந்தேன். மறுநாள் முழுவதும் ஜோன் பெரேராவுடன் காட்டிலிருந்த குகையில் கழித்தேன். செப்டம்பர் 6-ந் தேதி பெரேரா நித்திரை செய்த சமையம் ஒரு பெனியனையும் சாரத்தையும் உடையாக அணிந்துகொண்டு தலையை ஒரு துவாயால் மூடிக்கொண்டு வீடுவந்து சேர்ந்தேன். பின்னர் எனது உறவினருடன் பொலிசாரிடம்போய் நடந்த சம்பவத்தை முறையிட்டேன்.

எதிரிகள் குற்றவாளிகளல்லரெனக் கூறினார்கள். நீதிபதி எதிரிகளை விளக்கமறியலில் வைத்திருக்கும்படி கட்டளையிட்டு வழக்கை 19-ந் தேதிக்குத் தவணையிட்டார்,

பரிசோதகர் ஏக்கநாயக்கா விதானைமீது வேறுகுற்றச்சாட்டுகள் தான் கொண்டுவரவிருப்பதாகக் கூறினர்.

# யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டு விசாரணை—18

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

"தலையசிங்கத்தை அழைத்து வருவதற்காக றெயில் கூலியாகவே 10 ரூபா கொடுத்தேன். நான் கொடுக்கும்போது கந்தையா எனது சமுகத்திலில்லை. சிறிது நேரத்தின்பின், தான் கந்தையாவிடம் காசைக் கொடுத்துவிட்டதாகவும் அவன் கல்கமுவாவுக்குச் சென்றுவிட்டதாகவும் குமாரசாமி சொன்னான். நான் பொலிஸ் நீதிபதி முன்னிலையில் கந்தையாவிடமே 10 ரூபாவைக் கொடுத்தேன் எனச் சொல்லவில்லை, அதன்பின் இரண்டு நாட்களின் பின்னர் முதலாம் எதிரி மாப்பிள்ளையைக் கூட்டிவந்து விட்டதாகவும், பங்குனிமாசம் 6-ந் திகதியன்றே கல்யாணத்தை முடித்துவிட வேண்டுமென்றும எனனிடம் சொன்னான். பெண்ணுக்கு கொடுக்கப்பட்ட நகைகளை என்னிடம் தரவில்லை. 6-ந் திகதியன்று இரவு 7, 8 மணியளவில் பெண்ணைக் கூட்டி வரும்படி அறிவித்ததின்மேல் நான் பெண்ணை அழைத்துக்கொ கொண்டு கந்தையாவீட்டிற்குச் சென்றேன். குமாரசாமியே என்னிடம்வந்து 'பெண்ணைக் கூட்டிக்கொண்டு போகவேண்டுமெனவும், பெண்ணை அலங்கரித்து ஆயத்தமாக வைத்திருக்கவேண்டுமெனவும் கூற, நான் அப்படிப் பெண்ணைக் கூட்டிவர முடியாதெனத்தெரிவித்தேன். அதற்கு அவன் இனத்தவர்கள் இக்கலியாணத்தைக் குழப்புவார்களாகையினால் கொண்டே போகவேண்டுமென்றான், என் நன்மையை நாடி உழைக்கும் நெருங்கிய பந்துக்கள் எனக்குக் கிடையாது. ஏறக்குறைய 12 மணியளவில் குமாரசாமி கந்தையாவுடன் கூடிவந்து கந்தையாவைப் படலையடியில் நிற்க வைத்து என்னிடம் வந்து பெண்ணைக் கூட்டிவரும்படி சொல்ல நானும் எனது மகன் பெருமாளும் சரஸ்வதியுமாகச் சென்றோம். கந்தையாவும் எம்முடனேயே வந்தான் நேராகக் கந்தையா வீட்டிற்குச் சென்றோம். அங்கு கந்தையாவின் பெண்சாதியும் கந்தையாவின் தமையனாகிய நவரத்தினத்தின் பெண்சாதியும் சபாரத்தினமும் நின்றார்கள். கந்தையாவின் பெண்சாதி ஓர்சோடி காப்புகளை எனது கையில் இட்டாள். அட்டியல் ஒன்றை எனது கழுத்தில் மாட்டினாள், அதன்பின் ஓர் சேலையையும் சட்டையையும் சரஸ்வதிக்குமுன்னால் குமாரசாமி வைத்து அணிந்துகொள்ளும்படி கூறினான். எனது மகள் அணிந்துகொண்டாள்."

உனதுமகள் முன்னர் உடுத்திருந்த சேலையா, பின்னர் உடுத்த சேலையா திறமானது? — இதனை உடுக்கச் சொல்லிச் சொன்னமையால் உடுத்தாள். (பார்த்து இவைகளே கொடுக்கப்பட்ட நகைகள்.

இந்நகைகளெல்லாம் 45 ரூபாவிலிருந்து வாங்கியதாகவா நினைத்தாய்?—அட்டியல் மாத்திரம் ரூபா 60 பெறுமதியெனவும் மிகுதி கொடுத்தல்வேண்டுமெனவும் கூறினார்கள்.

"அதன் பின்னர் நானும் சரஸ்வதியும் பெருமாளும், முதலாம் எதிரியும் நான்காமெதிரியும் ஐந்தாம் எதிரியுமாக நியாய துரந்தரர் குமாரசாமியினுடைய வீட்டைநோக்கிப் போனோம் வழியில் அதாவது ஒழுங்கையில் ஓர் கார் நின்றது. அக்காரில் ஒருவன் படுத்திருந்தான். அவன் யாரெனத் தெரியாது. அவ்விடத்தில் 1-ம் 4-ம் எதிரிகள் எம்மை நிற்கும்படியும் தாங்கள் சென்று மாப்பிள்ளையை அழைத்து வருவதாகவும் கூறி ஓர் வீட்டினுள் சென்று சிறிதுநேரத்தின்பின் 2-ம் எதிரியுடனும் வேறும் நாலு ஐந்து பேர்களுடனும் வந்தார்கள். அங்கு வந்ததும் முதலாம் நாலாம் எதிரிகள் இரண்டாமெதிரியைக் காட்டி இவரே மாப்பிள்ளையென்றார்கள். அம்மாப்பிள்ளையாகிய இரண்டாம் எதிரி ஒழுங்கையில் வைத்தே எனது மகள் சரஸ்வதியின் கழுத்தில் (காட்டி) இத்தாலிக்கொடியைக் கட்டினர்."

அப்படி நடைபெற்றதுதான் கல்யாணமா?—ஆம்.

"அதன்பின் எங்களில் ஐந்து பேர்களும் மாப்பிள்ளையும் வேறும் நாலைந்து பேர்களுமாக நொத்தாரிஸ் வீட்டிற்குச் சென்றோம். நாங்கள் முதலாம் நாலாம் எதிரிகள் சென்ற சதாசிவத்தின்வீட்டிற்குச் செல்லவில்லை. சதாசிவத்தைஎனக்குத்தெரியுமேயொழியச் சதாசிவத்தின் வீட்டை எனக்குத் தெரியாது.

பின்னரே சதாசிவத்தின் வீடென அறிந்தேன். மாப்பிள்ளையுடன் கூடவந்தவர்களுள் ஆறும் எதிரியும் சுப்பையா என்ற இன்னொருவனும் கூடவந்தார்கள். சுப்பையா என்பவன் இவ்வெதிரிகளுடன் இங்கு நிற்கக் காணவில்லை அவனை இதற்கு முன்னராவது இதற்குப் பின்னராவது நான் காணவில்லை. ஆனல் கல்யாணத்திற்கு அடுத்தநாளும் எனது வீட்டிற்கு வந்தானும். நொத்தாரிஸ் வீட்டிற்குத் தரகர் தம்பிப்பிள்ளையும் வந்தார். அவர் எங்கிருந்து வந்தாரெனத் தெரியாது. நொத்தாரீஸ் முகதாவில் இரு உறுதிகளுக்காக ஆறுகொப்பிகளில் கையெழுத்திட்டேன். இதுவேயெனது கையெழுத்துகள். ஒன்றில் எனக்குச் சொந்தமான பங்கை எனது மகளுக்குச் சீதனமாகவும், மற்றதில் 150 ரூபாவுக்கு ஈடாக நானும் சரஸ்வதியும் கையெழுத்து வைத்தோம். அதன்பின்பு நொத்தாரிஸ் குமாரசாமி நானவது சரஸ்வதியாவது மாப்பிள்ளையாவது கொடுக்கச் சொல்லாமலிருக்க அவர் முதலாம் எதிரியிடம் மிகுதியான 105 ரூபாவைக்கொடுத்தார். அதன்பின்னர் நாங்கள் யாவரும் கார் நின்ற இடத்திற்கு வந்தோம். அங்கு வந்ததும் 1-ம் எதிரி குமாரசாமியிடம் என்னைக் கூட்டிக்கொண்டுபோய் வீட்டில்விடும்படி தெரிவிக்க, அவரும் நானும் வீட்டிற்குச் சென்றோம். நான் போகுமுன் 1-ம் எதிரி பெண்ணை வட்டுக்கோட்டைக்கு அழைத்துச் செல்வதாகச் சொல்ல, பெருமாளை அவ்விடத்தில் விட்டு நான் வீட்டிற்குச் சென்றேன். அடுத்தநாள் சாயங்காலம் 4 மணியளவில் பெருமாள் என்னிடம் வந்து பெண்ணை வட்டுக்கோட்டைக்கு அழைத்துச் செல்லவில்லையெனவும் மாப்பிள்ளையினது பெற்றோர்களுக்கு இக்கலியாணத்தையிட்டு மனவருத்தமிருப்பதாகவும், அவர்களைச் சமாதானப்படுத்தியே பெண்ணை மாப்பிள்ளை வீட்டுக்குக் கொண்டுபோகவேண்டுமெனவும், அதனல் பெண்ணை மாகியப்பிட்டியில் சதாசிவத்தின் பெண்சாதி வீட்டில் கொண்டுபோய் வைத்திருக்கிறார்களெனவும், குமாரசாமியிடம் ஒருசோடி காதோலை வாங்கிக் கொடுத்தனுப்பும்படியும் கூறினன். அப்போது பெருமாளுடன் குமாரசாமியும் ஆறுமுகம் என்றொருவனும் நின்றார்கள். நான் ஒருசோடி காதோலையை இரவலாக வாங்கிக் கொடுத்தேன். அவர்கள் போனார்கள். அன்றிரவே 8மணியளவில் பெருமாளும் ஆறுமுகமும் திரும்பி வந்துவிட்டார்கள். பெருமாள் என்னிடம் ஏதோ தொந்தரவு இருப்பதினல் தன்னைத் தனது சகோதரியைப் பார்க்கவிடாது தடுத்துவிட்டார்களெனச் சொன்னான். அதன்பின்னர் எனக்கு ஓர் புதினமும் எட்டவில்லை. தேடிப் பார்த்தேன், சந்திக்கவில்லை. ஏறக்குறைய 15, 18நாட்களின்பின் ஓர் பஸ் காரன் எனது மகள் திருக்கோணமலையிலிருப்பதாகச் சொன்னான். அதன்முன்னர் நான் இதுவிஷயத்தைப் பொலிஸ் ஸ்ரேசனுக்குச் சென்று முறையிடுவோமென நினைந்து குமாரசாமியையே துணையாகக் கூட்டிக்கொண்டுவந்தேன். வரும்வழியில் கல்கமுவா ஓவசியருக்கு இதுவிஷயத்தைப்பற்றிக் கடிதம்எழுதுவோமென நான்சொல்ல அவன் பெரியதெருவிலிருக்கும் நியாயதுரந்தரர் அப்புக்குட்டியின் கந்தோருக்குச்சென்று ஓர் கடிதத்தை எழுதிவந்தான். அக்கடிதத்தை எனக்குக் வாசித்துக் காட்டவுமில்லை. நான் பார்க்கவுமில்லை. அவனே அதைத் தபாலில் சேர்த்தான். அக் காகிதத்திற்குத் தலையசிங்கம் பெருமாள் மேற்பார்த்துக் குமாரசாமிக்குக் கொடுப்பது என ஓர் காகிதம் எழுதியிருந்தார். அக்காகிதத்தை வாசித்ததின்பின்னரே எனக்கு யாவும் விளங்கின. இம்மாதிரி என்னை அனுப்பாவிட்டால் நான் இக்கலியாணத்துக்குச் சம்மதிக்கமாட்டேன்.

உங்களுடைய ஊரில் தாலிக்கொடியை மாத்திரம் கட்டினல் அது சடங்காக ஏற்றுக்கொள்ளப்படுமா ?—அப்படி வழமை இல்லையையா. ஆனல் என்னை ஏமாற்றிவிட்டார்கள்,

நீயும் கலியாணம்முடித்த மனுஷியாகவிருப்பதால் உனக்கும் கலியாண வைபவத்வதப்பற்றித் தெரியுமல்லவா ?—ஆம்.

அம்மாதிரிக் கலியாணத்தை நீ ஏன் நடத்தவில்லை ?— நான் இக்கலியாணத்துக்குச் சம்மதிக்கவில்லை. அப்போது 1-ம் எதிரி என்னை நம்பு. நான் துரோகஞ் செய்யமாட்டேன் என்று சொன்னமையால் நான் சம்மதித்தேன்.

நீ கலியாணம் முடிக்கும்பொழுது உனது கலியாணம் பதிவுசெய்யப்பட்டதா ?—இல்லை.

அப்போ சமயாசாரப்படி பிராமணன்வந்து பிள்ளையார் பூசைபண்ணி உனக்குத் தாலி கட்டப்பட்டதா ?—ஆம்.

ஓமமும் வளர்க்கப்பட்டதா ?—ஆம்.

இவைகள் யாவும் தெரிந்த நீ சமயாசாரப்படியுமின்றி, முறையாண பதிவுமின்றி ஒருவனிடம் உனது மகளை விட்டுவிட்டுச்செல்ல உனக்கு மனம்வந்ததா ?—வருகிற சனிக்கிழமை கலியாணப்பதிவு செய்துகொள்ளுவோமெனக் கந்தையா சொல்லி யிருந்தாரையா.

உங்கள் ஊரில் ஓமம் வளர்ப்பதற்குமுன்னராக நொத்தீஸ் போட்டுக் கலியாணப் பதிவு செய்துகொள்ளும்வழக்கம் உண்டல்லவா ?—ஆம்.

இதன்பின்னர் இச் சாட்சியை நியாயவாதி திரு. குணம் ஸ்பென்சர் அவர்கள் குறுக்கு விசாரணை செய்தார். அப்போது சாட்சி கூறியவற்றின் சாராம்சம் பின்வருமாறு :—

நியா :— நீ என்ன வகுப்பைச் சேர்ந்தவள் ?

சாட்சி :— சாயக்காரவகுப்பைச் சேர்ந்தவள்.

உனது கணவன் என்ன சாதி ? —அவர் சாயக்காரன். ஆனல் நான் வேளாளர் வகுப்பைச் சேர்ந்தவள்.

உனது சொந்த ஊர் யாது ?—தெல்லிப்பழை.

நீ சாயக்காரன் ஒருவனுடன் கூடி ஓடினயா ?—இல்லை. எனது பெற்றோர்களே என்னைக் கல்யாணம்செய்து கொடுத்தார்கள்.

தெல்லிப்பழையைச்சேர்ந்த வேளாளவகுப்பினராகிய மரியாதையாண குடும்பத்தவர்கள் உன்னைச் சாயக்காரனுக்கு மணமுடித்துக் கொடுத்தார்களெனவா கூறுகிறாய்?—எனது கணவன் என்ன வகுப்பைச்சேர்ந்தவனெனத் தெரியாது என்னைக் கல்யாணம் முடித்துக்கொடுத்திருக்கலாம்.

உனது கல்யாணம் பதிவுசெய்யப்பட்டதா?—இல்லை.

சமய ஆசாரப்படி கல்யாணம் செய்யப்பட்டதா?—சோறு கொடுத்ததன்மேல் கூட்டிவந்தார்கள்.

சோறு கொடுத்தால் அதனைச் சடங்கென ஏற்றுக்கொள்ள லாகுமோ?—அதற்குரிய சடங்குகளைச்செய்து தாலியுங் கட்டினல் ஏற்றுக்கொள்ளப்படும்.

யாழ்ப்பாணத்தில் தரகர்மார்களே கல்யாணம்பேசுவார்கள்?—ஆம்.

1-ம் எதிரியைத் தெரியுமோ?—ஆம்.

நல்லூரில் அவனை ஓர் கல்யாணத்தரகனென யாவருக்கும் தெரியுமல்லவா?—இல்லை.

கந்தையா என்பவன் பிறதேசச் சஞ்சாரியெனத்தெரியுமல்லவா?-ஆம்.

அவன் மேசன்வேலை செய்வதால் அநேகருக்குத் தெரிந்திருக்குமல்லவா?—எனக்குத் தெரியாது.

குமாரசாமியை உனக்கும் பெருமாளுக்கும் தெரியுமல்லவா?—ஆம்.

கல்யாணம் பேசுவதானல் நெருங்கிய சொந்தக்காரரிடந்தானே பேசுவார்கள்?—ஆம் வசதிபோலப் பேசுவார்கள்.

ஊர்வழமையும் அப்படித்தானு?-ஆம்.

குமாரசாமி என்பவன் உனது மகளுக்கு என்னமுறை?—தமையன்.

இதுசம்பவம் நடைபெற்றபோது குமாரசாமியும் உனது வீட்டிற்றுனேயிருந்தான்?—ஆம்.

குஞ்சியாச்சி! இது நல்ல சடங்கு எனச் சொன்னனல்லவா?—ஆம்.

மாப்பிள்ளை சப் ஓவசியரெனவும் கூறினனல்லவா?—ஆம்.

நீ வசதியில்லையென்று சொல்ல அவன் செய்யும்படி தூண்டினனல்லவா?—ஆம்.

5-ம் எதிரியையும் அவன் தந்தையையும் தெரியுமா?—ஆம்.

என்ன தொழில்?—தட்டாரவேலை பார்ப்பவர்கள்.

கூடவந்த சபாரெத்தினமும் கல்யாணம்பேசினனு?—நீ வறிய மனுஷியானமையினல் இம்மாதிரி மாப்பிளை கிடைப்பதரிது. ஆகையால் இச்சடங்கைச் செய்துவிடு எனக் கூறினான்.

4-ம், 5-ம் எதிரிகளுக்குத் தலையசிங்கத்தைத் தெரியுமெனச்சொன்னர்கள்.—ஆம்.

தலையசிங்கம் நல்ல மாப்பிள்ளை. நல்ல வேலையாயிருக்கின்றாரெனச் சொன்னமையால் தெரியுமென நினைத்தாய்?—ஆம்.

குமாரசாமி தலையசிங்கத்திற்கு எழுதிய கடிதங்களை உனக்கு வாசித்துக்காட்டினன்?—இல்லை.

உனக்கு எழுத வாசிக்கத்தெரியுமா?—தெரியாது.

பொலிஸ் நீதிபதிமுன்பு சாட்சியங் கூறும்போது தெரியுமென்று கூறியிருக்கிறாய்—செம்மையாகத் தெரியாது.

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

## இனம்! ரூபா 5-00 இனம்!

BT. காத்தான்குடியில் தபாற்கந்தோர்த் தலைவராய் இருக்கும் C. கணபதிப்பிள்ளையாகிய நான் அறியத்தருவது: J கச்சேரியடியில் இருக்கும் என்னுடைய வீட்டில் வேலைபார்த்துவந்த மாரிமுத்து என்னும் மறுநாமமுடைய கந்தையா தெய்வநாயகி என்னும் மட்டக்களப்பைச் சேர்ந்த பொதுநிறமும் வரிசை ஒழுங்கற்ற பற்களும் கத்தரிக்கப்பட்ட தலைமயிரும் குறுகிய தோற்றமும் ஏறக்குறைய 12 வயதுமுடைய பெண், நாலு வாரங்களுக்குமுன் காணமற்போய்விட்டாள். அவளைப் பிடித்துத் தருபவர்கட்கு அல்லது விபரம் தெரிவிப்பவர்கட்கு ரூபா 5-00 இனம் கொடுக்கப்படும்.

(Sgd:) C. கணபதிப்பிள்ளை
போஸ்ற் மாஸ்றர்.

காத்தான்குடி
(32) 15-9-35.

சிறுவர் பகுதி

# தெசியஸ் கதை.

சி. த.

(முற்றொடர்)

அதென்ஸ் நகரத்தை யடைந்ததும் நகரமாந்தர் யாவரும் அவனை வரவேற்கப்போனார்கள். அவனுடைய வீரச்செயல்கள் யாவும் அந்நகரத்தில் ஏலவே பிரசித்தமாயிருந்தன. தெசியஸ், ஈஜஸ் என்பவனுடைய அரண்மனைக்குப்போய், வாசற்படியிலேநின்றான். ஒருவேலைக்காரன் ஓடிப்போய் ஈஜஸுக்கு இவனது வருகையைத்தெரிவித்தான். தெசியஸ் ஈஜசைக் கண்டதும் ஆனந்தங் கொண்டான். தன் தந்தையின் கழுத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டு சந்தோஷ மிகுதியால் அழுதான். தன்னை இன்னாரென்று கூறினான்.

மாரிகாலம் முழுவதும் தெசியஸ் தந்தையுடனே நின்றான். இலையுதிர்காலம் சமீபித்ததும் அதென்ஸ் நகரவாசிகள் யாவரும் மிகவும் துக்கத்திலாழ்ந்தனர். இதைத் தெசியஸ் அறிந்து, காரண மென்ன வென்று கேட்டான். ஒருவரும் அவனுக்கு விடைசொல்லவில்லை. அவன் தந்தையிடம் போனான். தந்தை முகத்தைத் திருப்பி யழுதுகொண்டு, "இப்போது என்னைக்கேளாதே விபத்துக்கள் வரும்போது அவற்றை யெதிர்ப்பதே கடமையாகும்" என்று கூறினான்.

கோடைகாலம் பிறந்ததும் ஒரு தூதன்வந்து சந்தைகூடு மிடத்திலே நின்று 'வருடாந்தத் திறை எங்கே?' என்று ஊத்துக்கேட்டான். பின்பு பட்டினம் முழுவதும் ஒரு பெரிய துக்கம் குடிகொண்டது. ஆனால், தெசியஸ் எழுந்து, "ஏ! நாய்த்தலையனே! திறை கேட்கும் நீ யார்?" என்று கேட்டான், தூதன் தெசியசை நோக்கி, "வாலிபனே! நான் நாய்த்தலையனல்லன். நான் எனது அரசனாகிய மினோஸ் என்பானது கட்டளையை நிறைவேற்றவே வந்தேன். எனது அரசனே நூறு நகரங்களையுடைய கிறீற் என்னும் தேசத்து அரசனவன். பூமியிலேயுள்ள எல்லா அரசருள்ளும் இவனே புத்திசாலியாயுள்ளவன். நீ இந்தநகரத்துக்குப் புதியவனாக இருக்கவேண்டும். இல்லாவிடில் ஆண்டுதோறும் வரும் என்னை "நீ யார்" என்று கேட்கமாட்டாய் என்று சொன்னான். "நான் ஒரு புதியவன்தான். நீ ஏன் இங்கு வந்தாய் என்பதை எனக்குக் கூறுவாயாக" என்று தெசியஸ் கேட்டான். திறையைப் பெற்றுக்கொள்ளவே வந்தேன் என்று தூதன் கூறினான். "இந்தத் திறை ஈஜஸ் மன்னனால் மினோஸ் அரசனுக்கு வாக்குப்பண்ணப்பட்டது. ஏனெனில், மினோஸ் ஈஜசுடைய நாடு முழுவதையும் வெற்றிகொண்டான். மினோஸ் அரசனுடைய மகன் இங்கு வந்தபோது, இங்குள்ளாரை விளையாட்டில் வெற்றிகொண்டான். சனங்கள் அவனை மிகவும் மெச்சினார்கள். அதுகண்ட அரசன் ஈஜஸ் என்பான் அவன்மீது பொறாமைகொண்டு சூழ்ச்சியா லவனைக் கொல்வித்தான். மினோஸ் என்பான் இங்குவந்து கடும் போர்புரிந்து இந்நாட்டை வென்றான். ஏழு வாலிபரையும் ஏழு கன்னியரையும் வருடவீதம் திறையாகக் கொடுக்கவேண்டுமென்று கட்டளையிட்டு மீண்டேகினன்" என்றுந்தூதன் கூறினான்.

இதுகேட்ட தெசியஸ் தந்தையிடம் போனான். சங்கதிகள் எல்லாவற்றையும் விசாரித்தான். தந்தை மகனை நோக்கி, "காட்டிலே இரத்தம் வீணாகச் சிந்தப்பட்டது. இரத்தத்தினாலே அது பழிவாங்கப்பட்டது. வினாக்களினாலே என் இருதயத்தைப் புண்படுத்தாதே. மௌனமாக விருப்பதே நலம் என்று கூறினான்.

பின்பு தெசியஸ் என்பவன் "நானே இந்த ஏழு வாலிபரோடும் ஏழு கன்னியரோடும் போய் மினோஸ் என்னும் அரசனை அவனுடைய சிங்காசனத்திலேயே கொல்வேன்" என்று சபதங் கூறினான். இதைக்கேட்ட தந்தை ஈஜஸ் அலறிக்கொண்டு, "மகனே! நீ போகவேண்டாம்; நீ போகவேண்டாம்; எனக்குப் பின் நீயே இந்த நாட்டை ஆளவேண்டும். ஆதலால் நீ போகவேண்டாம். போய்ப் பயங்கரமான மரணத்தை அடையவேண்டாம். இந்தக் கன்னியரும் வாலிபரும் அங்ஙனமே யிறப்பார்கள். ஏனெனில் இவர்களை மினோஸ் ஒருபள்ளத்திற் றள்ளிவிடுவான். அங்கிருந்து ஒருவரும் தப்பியோட முடியாது. மினோற்றர் என்னும் ராட்சதன் அவர்களை விழுங்கிவிடுகிறான்" என்று சொன்னான். தந்தை கூறிய வார்த்தைகளைக் கேட்டதும், தெசியசுக்கு மிகவும் கடுங் கோபம் வந்தது. "தந்தையே! ஆனபடியாற்றான் யான் அங்கு போக விரும்புகிறேன். அந்தப் பொல்லாத மினோஸ் என்பவனைக் கட்டாயம் தொலைத்தே தீரவேண்டும்" என்றான் தெசியஸ். அங்கு போவோர் நிராயுதபாணிகளாயே போகவேண்டும் என்றும், அந்தநிலையில் அவனைக் கொல்வது எப்படி முடியுமென்றும் ஈஜஸ் கூறினான். "அப்பள்ளத்திலே கற்கள் கிடையாதோ? எனக்குக் கைகள் இல்லையோ?" என்று தெசியஸ் கூறினான். பின்பு தெசியஸ் தூதன் நிற்குமிடத்திற்குப் போனான். "நானும் வருகிறேன்" என்று கூறினான். அவர்கள் யாவரும் கிறீற் தேசம் நோக்கிப் போனார்கள். அதென்ஸ் நகர மாந்தர்கள் யாவரும் துக்கப்பட்டனர். தெசியஸ் அவர்களைத தேற்றிவிட்டுச் சென்றான். கடைசியாக கிறீற் என்னும் தேசத்தையடைந்தார்கள்.

(தொடரும்

# கலம்பகம்

மலேரியா நிபுணரான கர்னல் ஸி. ஏ. ஜில்லின் என்பவரின் அறிக்கையில் அடங்கியவற்றை ஆராய்ச்சிசெய்து ஆகவேண்டியன புரிவதற்கெனப் பிரத்தியேகமான ஒரு சபை நியமிக்கப்படுமாம்.

o o o

தஞ்சை றிசேவ் பொலிஸ்பகுதியைச் சேர்ந்த 412-ம் நம்பர் பொலிஸ் உத்தியோகத்தராகிய இராமானுஜம் என்பவர் சென்ற 3-ம்௳ இரவு மரியாயி என்னும் ஓர் பெண்ணின் கழுத்திலுள்ள தாலிக்கொடியைக் களவாடுகையில் பிடிக்கப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறாராம்.

o o o

தமது மாதப் படிச்செலவை அதிகப்படுத்தவேண்டுமென ஆள்வார் மகாராசா செய்துகொண்ட மனுவை இந்திய அரசினர் நிராகரித்துவிட்டனராம்.

o o o

மலாய்நாட்டில் தற்போது இரண்டரை லட்சம் இந்தியர் கிரந்தாமாகச் சீவித்து வருகின்றனராம்.

காலி முற்றவெளிக்கு எதிராக ஒரு பஸ் நிலையத்தை அமைக்கக் காலி நகர சபையார் செய்திருக்கும் தீர்மானத்தை அங்குள்ள பொதுசனங்கள் கூட்டங்கூடிக் கண்டித்தனராம்.

o o o

சிங்கப்பூருக்கும் பினங்கிற்குமிடையில் தினம் 2 முறை ஆகாயவிமானப் போக்குவரத்து சமீபத்தில் ஏற்படப்போகின்றதாம்.

o o o

தற்போது உலகில் 3 கோடி மோட்டார்வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. கிறேற் பிரிட்டனில் நாளொன்றுக்கு 30 லட்சம் கலன் பெற்றோல் உபயோகமாகிறதாம்.

o o o

ஜெகூர் சுல்தான் அவர்களின் 62வது பிறந்ததினக் கொண்டாட்டமும், சிம்மாசனம் ஏறிய 40-வது வருடக் கொண்டாட்டமும் வருகிற 17-ம்௳ அதி விமரிசையாகக் கொண்டாடப்படுமாம்.

o o o

புள்ளிவிபரங்களைத் தயாரிப்பதில் நிபுணரும், லண்டன் மிட்லண்ட்ஸ் காட்டிஸ் றெயில்வேயின் தலைவரும், பிரிட்டிஷ் அரசாங்கப் டணவைப்பு நிலையத்தில் உத்தியோகம்பார்த்தவருமாகிய சேர். யோசையா ஸ்டாம்ப் என்பவர் பிரிட்டிஷ் சங்கக் கவுன்சிலின் 1936-ம் ஆண்டுத் தலைவராக நியமனம் பெற்றிருக்கிறாராம்.

o o o

சென்ற ஆகஸ்டு௴ 31-ம்௳ பம்பாய் துறைமுகத்திலிருந்து 1,41,59,959 ரூபா பெறுமதியான தங்கம் ஏற்றுமதியாயிருக்கிறதாம்.

o o o

ஜப்பான்தேச யுத்த மந்திரியாகிய ஜெனறல் ஸெஞ்சுரோஹயாஷி என்பவர் தனது பதவியிலிருந்து விலகிவிட்டாராம்.

o o o

களுத்துறை ஹோமுகிராஸ் கல்லூரிக்குச் சமீபமாக ஒருதோட்டத்தின் அதிபரான திரு. எம். ஆர். ஸி. பெரேரா என்பவரது வீட்டில் வேலையாளாகவிருந்த 14 வயதுடைய சிறுவன் வீட்டு எசமானின் மகனுடன் தெருவில் விளையாடிக் கொண்டு நிற்கையில் அவ்வழியாக வந்த மோட்டார் பஸ் ஒன்றினால் மோதப்பட்டு உயிர்துறந்தானாம்.

o o o

கிராமச்சங்க அங்கத்தவரும், ஆயுள்வேத வைத்தியருமாகிய திரு. சந்திரசேகரர் என்பவர் ஆனையிறவு என்னுமிடத்தில் கஞ்சாச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட லேகியத்தை வைத்திருந்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு 250 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றாராம்.

o o o

சென்ற 7-ந் திகதி மாலை ஆறரை மணியளவில் வட வங்காளத்தைச் சேர்ந்த பலவிடங்களில் பூமிநடுக்கங் காணப்பட்டதாம்.

o o o

பண்ணுருட்டி என்னுமிடத்தைச்சேர்ந்த காங்கிரஸ்வாதியான திரு. தேவநாயகம் ஐயா அவர்கள் பிணையின்பேரில் சிறையிலிருந்து விடுதலைசெய்யப்பட்டாராம்.

o o o

இலங்கையின் போட்டியால் தென்னிந்தியாவில் தெங்குத்தொழிலுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டத்தைப்பற்றி அதிகாரிகளிடம் கலந்துபேசுவதற்காகத் திருவாங்கூர்ச் சட்டசபை அங்கத்தவரான திரு. வி. பரமேஸ்வரம்பிள்ளை என்பவர் சிம்லாவுக்குச் சென்றிருக்கிறாராம்.

o o o

துன்னாலையைச்சேர்ந்த சுவாமிநாதர்-செல்லப்பா என்பவர் தனக்குச்சொந்தமான 12 ஆடுகளை ஒரு சிறுவண்டியில் அடைத்து வெய்யில் படும்படியாகவும், உணவின்றியும் கொண்டுபோகும்படி செய்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு 5 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றாராம்.

o

சென்ற ஜனவரிமாதம் திரு. ஜே. டி. மோடி என்னும் இந்திய விமானி டாடா கம்பனிக்குச் சொந்தமான தபால் விமானமொன்றைச் செலுத்திச்சென்று, ஒரு பெண்ணும் குழந்தையும் இறப்பதற்குக் காரணமாக விமானத்தை விபத்துக்குள்ளாக்கினாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு 1000 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றாராம்.


## விளம்பரம்

வருகிறது! வருகிறது!!

காங்கேசன் துறையில்

எல்லோரும் வசதியாய் பெற்றுக்கொள்ளக்கூடிய

திறம் ஜர்மன் சீமேந்து

TITAN BRAND CEMENT




பயில்வான் மார்க் சீமேந்து

பீப்பாக்கள் & பக்கற்றுகள்

இரண்டுமாத காலமாக எதிர்பார்த்திருந்ததும், உலகப் பிரசித்தி பெற்றதும், யாழ்ப்பாணத்தில் அதிகம் பிரியமாகவும்பெருந்தொகையாகவும் விலைப்படுவதுமான

"பயில்வான்" மார்க் ஜர்மன் சீமேந்து

இம்மாதம் (September புரட்டாதி) 17-ம் திகதி (17-9-35) அளவில் ("Marin Saundo") மரின் சான்டோ என்ற கப்பலில் காங்கேசன்துறைக்கு வருகிறது.

இரண்மோதகாலமாக ஷ சீமேந்து கைவசம் இல்லாதிருந்ததினிமித்தம், இப்போதே அனேகமான பீப்பாக்களும் பக்கற்றுகளும் விலைப்பட்டுவிட்டதனால், மற்றும் தேவையுள்ளவர்களும், இத்தருணத்தைத் தவறவிடாது முன்னடியே வந்து ஒழுங்குசெய்துகொள்ளும்படி கேட்கிறோம்.

M. O. OthumanLebbe & Sons
Grand Bazaar
JAFFNA
2-9-35

மு. உ. உதுமான் லெப்பை அன் சன்ஸ்
பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்
2-9-35

(28) 8-9-35—2

# கனிஷ்ட பாடசாலைத் தராதரபத்திர பரீட்சைப் பேறு

## J. S. C. (ஆடி 1935)

### மட்டக்களப்பு

கல்லடி உப்போடை M.
BT. 2 தங்கவேல் K

களுதாவளை
5 சாமித்தம்பி J S

கருங்கோடிதீவு R C M
6 ஆதாம்லெப்பை M
7 வேலுப்பிள்ளை S

காத்தாங்குடி (Main Road)
9 மகமது இஸ்மாயில் M

காத்தாங்குடி பழையதெரு B
10 தம்பிப்பிள்ளை K
12 ஆதாம்லெப்பை S

பளுகாமம் மெதடிக்ஸ் M
24 அய்யங்காரப்பிள்ளை P

பந்திரிப்பு மெதடிக்ஸ் M
28 கதிரவேற்பிள்ளை K

பெத்தாலை சென் யோன்ஸ் M
32 அம்பிகாவதி K
34 மொகமது உஸன் K
37 கணபதிப்பிள்ளை M A

சிங்களவாடி மெதடிக்ஸ் M
39 துரையப்பா K

சென் மேரிஸ் சாதனபாடசாலை B
45 சபாஞயகம் F
47 சிவகுணம் M

கல்முனை மெதடிக்ஸ் G
48 ஆறுமுகம் P
51 செல்லையா S
52 செல்லையா T
53 கனகம்மா S
57 நல்லம்மா A
58 செல்வரத்தினம் V
61 தெய்வானை M

காலி
GT. 1 வக்கீல் S A

### யாழ்ப்பாணம்

சிவியாதெரு asstd M
J. 1 சோமசுந்தரம் S

கொழும்புத்துறை R C B சாதனபாடசாலை
6 சொலமன் A
8 போல் V
11 அல்பிறெற் A
19 லாசர் M
22 அருளானந்தம் R

கல்வியங்காடு சைவவித்தியாசாலை M
34 தியாகராசா K
36 இராசகுலசூரியர் P
37 இராசையா P

காரைநகர் சுந்தரமூர்த்திநாயனர் வித்தியாசாலை M
38 சுப்பிரமணியம் A
39 வைத்தியலிங்கம் A
40 தம்பிப்பிள்ளை K
41 சினியன் S

புங்குடுதீவு ஸ்ரீ கணேசவித்தியாசாலை M
53 கந்தையா A
56 நல்லைபா S
57 நடராசா M

தொல்புரம் விக்கிநேஸ்வர வித்தியாசாலை M
71 தியாகராசா A

தோப்புக்காடு மறைஞானசம்பந்த வித்தியாசாலை M
75 ஐயாமுத்து V

வண்ணார்பண்ணை நாவலர்வித்தியாசாலை M
83 முத்துச்சாமி S
85 பிச்சாண்டி R

காரைநகர் சுந்தரமூர்த்திவித்தியாலயம் M
91 சுந்தரம் T

வளலாய் A M M
95 கார்த்திகேசு P

வேம்படி பெண்பாடசாலை (Bdg)
96 செல்லப்பா N
97 தம்பிப்பிள்ளை N

கோண்டாவில் சைவவித்தியாசாலை M
JA. 2 தேவராசா V
4 துரையப்பா V
7 கதிரவேல் K
8 அப்புத்துரை S
9 கிருஷ்ணசாமி N

கோப்பாய் சைவவித்தியாசாலை M
10 பொன்னம்பலம் S

கோப்பாய்வடக்கு சரவணபவானந்த வித்தியாசாலை M
12 இராசரத்தினம் V

நுணுவில்கிழக்கு சைவவித்தியாசாலை M
25 மாணிக்கம் S

புத்தூர் சோமாஸ்கந்தவித்தியாசாலை M
32 கந்தசாமி K

சிறுப்பிட்டி சைவவித்தியாசாலை M
35 செல்லையா A
36 கந்தையா M

திருநெல்வேலி முத்துத்தம்பி M
39 பொன்னம்பலம் T
40 தாமு P

கோப்பாய் C M S பெண்பாடசாலை
43 துரையப்பா P
44 கந்தையா R
45 முருகேசு M
46 முத்துச்சாமி N
48 சபாபதிப்பிள்ளை A
49 தம்பு M T (முதற்பிரிவு)

மீசாலைதெற்கு விக்னேஸ்வர வித்தியாசாலை M
53 ஊதயல்நாயகி M

நுணுவில்கிழக்கு சைவவித்தியாசாலை
54 அன்னபூரணம் S

### நாத்தாண்டியா

உணுப்பிட்டியா தமிழ் வித்தியாசாலை M
NE. 1 முகம்மது ஹப்பிடீன் E M

### பருத்தித்துறை

கரணவாய் வேதாரணியேஸ்வர M
P 8 சபாரத்தினம் A

கரணவாய்வடக்கு M
10 சிவசாமி N
11 முருகேசு K
12 வல்லிபுரத்தார் M
13 சின்னத்துரை S
15 குமாரு T
23 சின்னத்தம்பி N

நெல்லியடி M
35 பொன்னையா V

தம்பகட்டி மெதடிக்ஸ் M
37 வீரகத்திப்பிள்ளை K
38 சுப்பிரமணியம் M
39 நடேசன் P
40 முருகுப்பிள்ளை S

வாணிவடக்கு சிவப்பிரகாச M
47 செல்லையா K

தம்பசிட்டி மெதடிக்ஸ் M
54 செல்லம்மா V

### தெல்லிப்பழை

அளவெட்டி நாகபூஷணிவிதாலயம் M
TL. 1 திருச்சிற்றம்பலம் V
2 இராசையா T
3 சின்னத்துரை S
4 சின்னையன் M
5 கதிரவேலன் V

சங்கானை A M M
12 சின்னையா E

சுன்னாகம் சைவவிதாலயம் M
13 இரத்தினம் S
14 அருளப்பு G
15 நாகமுத்து S
16 வேலுப்பிள்ளை N

ஏழாலை M
19 குமரையா S

ஏழாலைவடக்குவிக்னேஸ்வரவிதாலயம் M
23 இராசையா S
24 சின்னத்துரை S

கோல்லங்கலட்டி M
35 காசிப்பிள்ளை A

துரும்பகட்டி M
36 இலங்கைநாயகம் A (முதற்பிரிவு)
40 முத்துக்குமாரு A

உடுவில்தெற்கு சைவவிதாலயம் M
43 கணேசன் N
45 நல்லையா T
46 மார்க்கண்டு M
47 செல்லத்துரை S

விளிசிட்டி M
49 கனகபை A
50 கந்தையா P

அளவெட்டி நாகபூஷணி M
52 நாகரத்தினம் S

சுன்னாகம் சைவவிதாலயம் M
56 தங்கம்மா K

காங்கேசன்துறை சைவ வித். M
58 சேதுப்பிள்ளை C

உடுவில்தெற்கு சைவவிதாலயம் M
60 அமுதம் S

---

## கொழும்பு விவேகானந்தசபை

### சித்தாந்த பண்டித, பாலபண்டித பரீட்சைகள்

அன்பார்ந்த ஐய!

மேற்படி சபையாரால் சென்ற ஸ்ரீமுக வருஷம் ஆவணி மாசத்தில் முதன்முதல் ஆரம்பித்து நடத்தப்பட்டுவரும், சித்தாந்த பண்டித, பால பண்டித பரீட்சைகள் வருகிற தாது வருஷம் நடத்தப்பெற மாட்டாது. அடுத்த பரீட்சைத்திகதி முதலியன பின்னர் வெளியிடப்படும்.

சபையாரால் நடத்தப்பெறும் அகில இலங்கைச் சைவசமயப் பாடப் பரீட்சைகள் வழக்கம்போல மார்கழி மாதத்தில் நடைபெறும்.

பெ. கணபதிப்பிள்ளை,
பரீட்சாவிஷயக் காரியதரிசி

---


## திருநெல்வேலி ஒற்றுமைநிதி
(வரைவுளது)

**அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 500,000**

ஒரு பங்கு 25 சதமாக எண்பது மாதங்கள் செலுத்தி
**ரூ. 25ம் ஆதாயமும் பெறலாம்.**

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றது.

வேண்டிய இடங்களில்
**கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.**

தேசீயகருமங்களை வளர்ப்பதால்மாத்திரம் சுயேச்சை பெறமுடியும்
ஆதலால்
முதலைவளர்த்து, வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
**நோக்கமுடைய இந்நிதியை ஆதரியுங்கள்.**

இலகுவானமுறையில் இறுக்கக்கூடிய கடன்கள்கொடுக்கிறோம்
உயர்ந்த வட்டிவிகிதத்தில், தவணைக்கும் நிபந்தமாயும்
சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.

**பங்குகளுக்கு முந்துங்கள்**

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருட்களும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

வ.சோமசுந்தரம், காரியாதிகாரி.

(203) 18-11-34—11-35


---

சுப்பிறீங்கோட்டு விசாரணை 15

## வல்லுவெட்டித்துறை வழக்கு

### மனைவியைக்கொன்ற குற்றத்துக்கு 2 வருடச் சிறை

யாழ்ப்பாணம் 9

யாழ்ப்பாணம் சுப்ரீம் கோட்டில் நீதியரசர் திரு. L. M. மாட்டினெஸ் முன்பாகவும் திரு. S. அருளானந்தத்தைத் தலைமையாகக் கொண்ட யூரிக் கனவான்கள் முன்பாகவும் சென்ற ஆனி மாதம் 13-ந் திகதியளவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வல்வெட்டித்துறை என்னுமிடத்தில் அவ்வூர் வாசியாகிய சிவசம்பு—பொன்னம்பலம் அல்லது பொன்னுமணி என்பவன் மீது அவனது மனைவியாகிய பொன்னம்மா என்பவளது மரணத்தை வருவித்ததாகத் தொடரப்பட்டு நடைபெற்றவிசாரணை ஏற்கனவே நமது கேசரியில் வெளி வந்துளது.

அவ்வழக்கில் இன்று நீதியரசர் எதிரிக்கு 2வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார். ந. நி.

---

## ஆண் பெண் சமத்துவம்
அல்லது
## அவராவதி கண்ட உண்மை.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பிறப்பில் தவறவிட்டிருப்பேன்! அக்குடிசை ஓங்கி வாழ்க!" என்ற பல எண்ணங்களும் அவள் மனதிற் பட்டு மறைகின்றன.

அன்றைய முயற்சியின் சித்தியைப்பற்றி அமராவதி வழக்கம்போல் சுருக்கத்திலேனும் சொல்லாது பின் தொடர்வதையும் அவளின் ரோசா மலர் நிறமன்ன வதனம்மாறடைந்திருப்பதையும், அன்னமென்னநடை பின்னல் படுவதையும், கண்ட தந்தை இன்று ஏதோ பயங்கர சமாச்சாரம் நடந்திருக்க வேண்டுமென்றுணர்ந்து தன் தனிப்புதல்வியை நோக்கி, "மகளே! இன்று உனக்கு நேர்ந்த இடர் யாது? உன்முகம் பாலென வெழுத்திருக்கின்றதே! உன் மனதில் உள்ள ஏக்கத்தை அது கண்ணடி போன்று பிழையில்லாது காட்டுகின்றது. ஆழ்ந்த யோசனையுடன் நடக்கின்றனையே; அத்தப் பித்தன் புலம்பலைக் கேட்டு அசையாது இதுகாறும் அங்கு நின்ருய்! உனக்கு இன்று நேர்ந்ததென்ன? உன்பிரிய தந்தைக்கு ஒழியாது கூறுதி" என்று கூறுகிருர். அமராவதி பெரிய பெருமூச்சொன்றுடன், "அப்பா! என் அறியாமையை இன்றே உணர்ந்தேன். அந்தப் பித்தன் புலம்பலே இன்று என்னை நல்லுணர்ச்சிக்குக்கொண்டு வந்தது. அவன் குடிசை ஓங்கிவாழ்க! அதுஎன் சீவிய நோக்கத்தை முற்ருய் மாற்றிவிட்டது. அரசசபையிற் புகுந்து இனியான் செய்யக் கூடியது யாதென்று தெரியவில்லை. இப்போலிச் சேவையிலும், இன்று என் இருள் மனதில் அவியா வெளிச்சத்தை ஏற்றிய அக்குடும்பத்தை ஈடேற்றின் எவ்வளவு? அப்பா! தாங்கள் என் பொருட்டுச் சேமித்து வைத்திருக்கும் பொருள் அம்மட்டுமெனிலும் இக்குடிசைக்கு இன்பத்தைக் கொண்டு வரமாட்டாது! அதின் இன்பம் வருந்தும் அம்மனையாளிலேயே தங்கியிருக்கிறது. அப்பா! அரசசபைக்குச் செல்லுமெண்ணத்தை நான் முற்ருய் என மனதிலிருந்து நீக்கிவிட்டேன். எனனேடொத்த சௌகரியங்களையுடைய பெண்களேயே ஈடேற்றவேண்டிக்கிடக்கின்றது. அவர்கள் இருள் இல்லங்களில் வெளிச்சத்தை மூட்ட வேண்டும். நான்மணவாழ்க்கையில்ஈடுபட்டு அவர்களுக்கிலக்காய் வாழ நிச்சயித்து விட்டேன்! தங்கள் சொற்களையே இவ்விஷயத்தில் தள்ளிய தங்கள் தனிக் கெட்டகுமாரத்தியை மன்னியுங்கள்" என்கிருள்.

---

## விவாகமுதலிய சுபகருமங்களில் தேங்காயுடைத்தால் நன்றோ தீதோவென்பதை அறிய.

"அடியது பருத்து முடிகுறுகி வட்டமதாகில் ஆக்கமுக் கூறுயிடின், அதிகசந்தோஷமாம் ஐந்திரண் டாயுடையில் அளவிலாச் செல்வமுளதாம், நெடிநரம் பிருகோண மாகிலோ துன்புறும் நிதானமாம் வாழ்வுதானும், நிறையோ டகன்றுதான் முட்டைபோ லாகிடின் நீலாத் தினஞ்சேருமாம், வடிவுசுக் கெட்டாகில் அரிசிவத்தியானமாம் வட்டமா யுடையினன்றும், மகாகணபதி யின்முன்தேங்கா யுடைக்குமுன், மகிழ்சுபா சுபசகுனமாம்"

என்னும் பிரமாணப்படி தேங்காயுடைத்த போது அடிபருத்து முடிசிறுத்து வட்டமாயிருந்தால் இலாபமுண்டாம். அடி மூன்றிலிரண்டு பாகமாயும், முடியொருபாகமாயுமிருந்தால் சந்தோஷமுண்டாம். அடி ஐந்திலிரண்டு பங்காயும், முடி மூன்று பங்காயுமிருந்தால் அதிக செல்வமுண்டாம். நரம்புக்கு நேராக இரண்டு கோணமாக உடைந்தால் துன்பமுண்டாம். மேலோடு நீங்கி முட்டைபோல் இருந்தால் நீலாத்தினஞ் சேரும். அஃதாவது நிறைந்த அதிஷ்டமுண்டாம். எட்டுச் சுக்கலாக இருந்தால் கடவுளைத் தியானிக்கவேண்டும். [பெருங்கஷ்டமுண்டாம்] சமமாக வட்டமாய் அடிப்புறம் காலபாகமும், மேற்புறம் முக்கால்பாகமும்; அல்லது இதற்கு மாறாகவும் உடைந்தால ஸ்திரீ புருஷர்களுக்குள் கலகமுண்டாமென்றும், பொடிப்பொடியாகவுடைந்தால் காரியக்கேடுண்டாமென்றும், கண்களின் பக்கமாயுடைந்தால் தலைவனுக்குக் கேடு உண்டாமென்றும், முதன்மையான கண்ணின் நரயபில் உடைந்தால் குருவுக்குத் தீங்குண்டாமென்றும், தென்புறக் கண்ணின் நரம்பில் உடைந்தால் கிராமமும் தனது இருப்பிடமும் கெட்டுவிடுமென்றும் வடபுறத்தின் கண்ணினை யடுத்த நரம்பில் உடைந்தால் அரசனுக்குக் கேடு உண்டாமென்றும், முகத்திலுடைந்தால் தீமை யென்றும், நீளடு உடைந்தால் பயமுண்டென்றும், கையைவிட்டு நழுவிவிழுந்தால் கருப்பச்சேத முண்டென்றும், உள்ளே இளநீரில்லாதிருந்தால் [ஓல்லி] மழைபெய்யாதென்றும், குடுமியில்லாதிருந்தால் பொருள் நட்ட முண்டாமென்றும், துர்க்கந்தமான இளநீரிருந்தால செல்வநாச முண்டாமென்றும், அழுகி நாற்றமடிததால் வைசூரியால் துனபமுண்டாமென்றும், வேறுநூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. கெடுதியாகவுடைந்தால் உடனே வேறொரு நல்லகாயையுடைத்துக் கணேசனைத் தியானஞ் செய்வது உத்தமமாம்.

தேங்காய்களுள்ளே அதிக இளங்காயையும் அதிகமாக முற்றிய காயையும் நீக்குதல் வேண்டும். நடுத்தரமான காயாகப் பார்த்து வாங்குவது உத்தமம். வாங்கும்போது கண்ணிலாததும், மிகச் சிறியதும், மிகப் பெரியதும், அழுகியதும், துர்ச்சந்தமுடையதும, கோணலுடையதும், குடுமியில்லாததும், நீர் வற்றியதும், அதிக நீளமானதும், மழுமழுப்பில்லாததும், பினனமானதும், மற்றும் பல குறறமுடையதுமானவைகளைக் கவனிதது நீக்குதல் வேண்டும். பெருவிரல நீளமான குடுமியுள்ள தேங்காயை முகத்தின் பாகமாய்ப் பிடித்துக்கொண்டு கத்தியை ஒரு சாணளவு மேலேதூக்கி இஷ்டதேவதையின் மந்திரத்தைக் கூறி ஒரே முறையில் இருவேறுபாகமாகும்படி உடைத்தல் வேண்டும். பின்னமில்லாமல் வட்டமாக உடையும்படி செய்வது உத்தமம்.

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்,
சுதுமலை.

நாடகப் பகுதி.

# தருமபுத்திரர் அல்லது துரோபதி துகில்.

(மானிப்பாய். திரு. தா. சுவாமிநாதன் அவர்கள்.)

[உரிமை ஆக்கியோனுக்கே உரியது.]

(முற்றொடர்)

**தருமர்:**—தேர்ப்படைகளை வைத்தாடுவோமா?

**சகுனி:**—துரியோதனா!

**துரி:**—மாமா, சந்தேகமெதற்கு! தேர்ப்படைகளை யானும் வைத்துவிட்டேன்.

(இலக்கங்கூறிக் கவறெறிந்தனர். சகுனி வஞ்சனையால் வென்றனன்.)

**தருமர்:**—யானை, குதிரை.

**சகுனி:**—துரியோதனா! யானை, குதிரை.

**துரி:**—மாமா! தடையே கிடையாது. வைத்துவிட்டேன்.

(இலக்கங்கூறிக் கவறெறிந்தனர். சகுனி வஞ்சனையால் வென்றனன்.

**சகுனி:**— தரும! இராச்சியத்தையும், அரசபதவியையும் வைத்தாடுவோமா?

**தருமர்:**—ஆடுவோம்.

**துரி:**—மாமா, கவனமாயெறியுங்கள்.

(இலக்கங்கூறிக் கவறெறிந்தனர். சகுனி வஞ்சனையால் வென்றனன்.

**சகுனி:**—இனி ஒட்டப்பொருள் யாது?

**தருமர்:**—காண்டவவனமெரித்த அரிச்சுனனுக்கு ஓரிரவு கங்கைக்கரையில் விஞ்சையன் சித்திராங்கதன் கொடுத்த ஆடன்மா முதலியவற்றை வைக்கின்றேன்.

**சகுனி:**— மருக! இதற்கு நீ யாது கூறுகின்றாய்?

**துரி:**—மாமா! இவைக்குச் சரியான ஒட்டங்களை யானும் வைக்கின்றேன்.

(இலக்கங்கூறிக் கவறெறிந்தனர். சகுனி வஞ்சனையால் வென்றனன்.)

**சகுனி:**—இனி வைக்கும் ஒட்டப்பொருள் யாது?

**துரி:**—மாமா! தருமரையும் தம்பிமாரையுங்குறித்து ஓர் முறை எறியப்பாருங்கள்.

**சகுனி:**— தரும! உன்னையும் உன் தம்பிமாரையுங்குறித்து ஓர்முறை ஆடுவோமா?

**தருமர்:**—ஆடுவோம்.

(இலக்கங்கூறிக் கவறெறிந்தனர். சகுனி வஞ்சனையால் வென்றனன்.)

**சகுனி:**—ஏ தரும! நீங்கள் ஐவரும் எமக்கு அடிமைகளாகிவிட்டீர்கள். நீங்கள் அடிமைகளானபின்பு உங்கள் தேவியாகிய துரோபதியும் எங்களுக்கு அடிமையாகிவிட்டனள். ஆயினும் அவளை ஓர்முறை வைத்தாடுவதற்கு யானிசைகின்றேன். அங்ஙனம் புரிதற் குன்மனம் இணங்குகின்றதா?

**தருமர்:**— ஆம், இணங்குகின்றது.

**விதுரன் :**— (திருதராட்டிரனை விளித்து) ஏ அந்தகனாகிய அண்ணா!

"திருகுநெஞ்சின் வஞ்சராகி யிளைஞர்தீமை செய்தகால், உருகுகின்ற தாதை நீ யுடன்படுத் திருப்பதோ!, மிருகமன்ற பறவையன் றிரக்கமின்றி மேவுநின், அருகுவந் தணைந்தநெங்க ளறிவிலாமை யாகுமே."

"பின்பிறந்த தம்பிமைந்தர் பீடழிந் திரங்கவே, முன்பிறந்த தமையன்மைந்தர் மொய்ம்பினு லடர்ப்பரோ!, வன்பிறந்த தேனுநீதி யழியநீ நடத்தினல், என்பிறந்து முடியுமண்ணி லெண்ணில்கால மின்னுமே."

உங்கள் விழிகள் குருடாயிருக்கின்றபடியாலா வார்த்தையின்றி இருக்கின்றீர்கள்! இப்பொழுதுதானும் உங்களது மைந்தனின் செயல்களைக் கடிந்துகொள்ளவேண்டாமா? பெற்ற பிள்ளைகள் பிழையைச்செய்யும்போது பிதாமாதாவு மதற்குடன்பட்டவர்போல் பேசாதிருக்கலாமா? தம்பி பிள்ளையைத் தமையன்பிள்ளை கெடுக்கப் பார்க்கலாமா? அன்பில்லாவிடினும் நீதிநெறி தவறி நடக்கலாமா? மறைவான வஞ்சகமுறையிற் சகுனி தருமனை வெற்றியடைந்த பிற்பாடு கொடிபோன்ற துரோபதியையும் ஒட்டப்பொருளாக வைத்து ஆடத் துணிவது தருமமல்லவே. உங்களுக்கு நாசகாலம் வந்துசேர்ந்தபடியாலன்றோ இந் நீதியற்ற செயல்களைக்குறித்து மனமசையாமலிருக்கின்றீர்கள்.

(குருடன் செவிடனைப்போலிருந்தனன். இலக்கங்கூறிக் கவறெறிந்தனர். சகுனி வஞ்சனையால் வென்றனன்.)

**சபையில் 1-ம் ஆள் :**—ஆ, இந்தத் துரியோதனனென்பான் மிக்கவோர் கொடிய வேந்தன்.

**2-ம் ஆள் :**— இவனுடைய மாதுலன் சகுனியென்பான் தன் மருமகனைக் கொல்லவந்த ஓர் மறலி.

**3-ம் ஆள் :**— தருமபுத்திரன் இயற்றிய தவமனைத்தும் அவமாகிவிட்டதே!

**4-ம் ஆள் .**— வீமசேனன் ஒருபோது இனிக் கொச்சித்தெழுப்புவானே!

**1-ம் ஆள் :**— துரியோதனன் தன் கிளைஞரையும் தழுவி நடப்பானில்லை.

**2-ம் ஆள்:**— தருமமும் மனுநீதியும் இன்றையோடு அற்றுப்போயின.

**3-ம் ஆள் :**— துரோபதியம்மாளின் நெறி ஒருபோதும் பொய்யாகாது.

**4-ம் ஆள் :**—அதோ பார் அரிச்சுனனுடைய விழிகள் சினத்தாற் சிவந்துவிட்டன.

**1-ம் ஆள் :**—பழிக்சஞ்சாப் பாதகனாகிய குருட்டுத் தாதை யாதொன்றும் மொழிகின்றானில்லை.

**2-ம் ஆள் :**—அவனுக்குக் கண்ணிருந்தாலன்றோ நடப்பவற்றை உணரும் ஆற்றலுடையனாயிருப்பன்!

**3-ம் ஆள் :**—இவனொற்றான் இவனுடைய தனயரின் வாழ்வு குலையப் போகின்றது.

**4-ம் ஆள் :**— இவன் புரியும் கொடுமையின் பயன் தலைமுறை தலைமுறைதோறும் நிலைநின்று விளங்குவதாகும்.

**துரி :**— (வீட்டுமரை நோக்கி) பெரியீர்! தருமனின் வினைப்பயனோ, தம்பியாரின் புத்திவலிமையோ, அந்தப் பொதுமகள் துரோபதியின் ஒழுக்கக் குறைவோ, அல்லது எங்கள் சகுனிமாமாவின் தவப்பயனோ அறிகிலேன், இங்ஙனமாக நிகழ்ந்ததற்குக் காரணம். தருமனின் செருக்கும், தம்பிமாரின் தருக்கும், துரோபதியின் சிரிப்பும், மாமா எறிந்த கவற்றிலே அடங்கிவிட்டன. "துள்ளின மாடு பொதி சுமக்குமல்லவா?"

**வீட்டுமர்:**—துரியோதனா! வசைமொழி கூறி நகைத்தலாகிய தொழில் நமது குருகுலத்தவர்க்கு ஏற்றதன்று. ஆகையின் உனது அசந்தையான கூற்றுக்களை நிறுத்திவிடுவாய்.

**துரி :**—(விதுரனை நோக்கி) சிற்றப்பா! ஏவலாளரை அனுப்பித் திசைகடோறுஞ்சென்று தருமனுடைய தேர், யானை, குதிரை யாவற்றையும் கவர்ந்துவருமாறு செய்வீர், நகரத்திற் றோரணங்கள் தூக்கும்படி சட்டளையிடுவீர். பாண்டவருடைய திரவியங்களனைத்தையுங் கவர்ந்து எனது மாளிகையிற் கொண்டுவந்து சேர்க்குப்படி ஏவி, அப்பாண்டவர் ஐவரும் எனக்கு அடிமைகளாயினரென்பதையும் எங்கும் பறைசாற்றி அறிவிப்பீர். பொதுமகளாகிய அந்தத் துரோபதியையும் இவ்வேந்தரவைக்கண் இழுத்துவரக் கட்டளையிடுவீர்.

(தொடரும்)


## ஜோதிட விளம்பரம்

ஜாதகம் எழுதுவித்துக்கொள்ள விரும்புவோர்
தங்கள் தங்கள் இஷ்டப்படி
சுத்தமாகவும் சீக்கிரமாகவும் செய்வித்துக்கொள்ளலாம்.

கிரகஸ்புடம், பாவஸ்புடம், தசவர்க்கம், அஷ்டவர்க்கம், கிரகசமயம், கிரகபலன், அஷ்டவர்க்கபலனும், காலதெசை, பிராணதெசை, சீவதெசை, மனோதெசை, மிருத்துதெசை, இவைகளுப், மகாதெசை அந்தரபலனுக எழுதியுங் கொடுப்பதற்கு ரூபா 60
ஷை ஒருதெசைக்கு அந்தரபலனும் மிகுதி புத்திபலனுமெழுத ரூ. 35.
ஐந்துவருஷ அந்தரபலனும் மிகுதி புத்திபலனும் எழுத ரூபா 10.
முற்றும் புத்திபலனும் சுருக்கமான பிறபலன்களும் எழுத ரூபா 5.
குறிப்பு எழுத ரூபா 1. விவாகப் பொருத்தம் பார்க்க ரூபா 2.

கோவில், வீடு, கிணறு முதலிய கிருகசம்பந்தமான கருமங்களும் எம்மிடம் செய்வித்துக்கொள்ளலாம்.

ஜாதகம், குறிப்பு, ரேகை முதலியனமூலம் தற்காலம் நடக்கும் பலாபலன் அறிய விரும்புவோர் ரூபா 1 கொடுத்தல்வேண்டும்.

☞ ஜாதகம் எழுதுவித்துக்கொள்ள விரும்புவோர் பிறந்த ஊர், வருஷம், மாதம், தேதி, நேரம், ஆண், பெண் முதலியவற்றின் சரியான விபரத்துடன் மேற்காட்டிய விகிதத்திற் பாதி முற்பணமாக அனுப்பவேண்டும்.

K. Vaithilingam,
Astrologer,
Urelu, Jaffna.

க. வைத்தியலிங்கம்,
சோதிடர், ஊரெழு,
சுன்னுகம், யாழ்ப்பாணம்.

(188) 9-9-34


புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை, யகத்துறுப் பன்பி லவர்க்கு.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 1538

காலஞ்சென்ற சின்னத்தம்பியார் தாமோதரம்பிள்ளையின் தத்துவகாரன்,

கரவெட்டி மேற்கு
(1) கந்தப்பர் வேலுப்பிள்ளை கந்தையா
(2) சின்னத்தம்பியார் தாமோதரம்பிள்ளை கைம்பெண் வள்ளியம்மை.

வழக்காளிகள்.

கரணவாய் தெற்கு
(1) நல்லதம்பி கந்தவனம் ஏகாம்பரழம்
(2) பெண் வேதாத்தையும்

எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 1538-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணிகள் 1935-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 5-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோயிற்றுப்பற்று கரவெட்டி வதிரிக்குறிச்சியிறை பணிக்கபுலம் இரண்டுபிரிவுகளும் வீடு ஒன்றும் கூடிய நிலப்பரப்பு 13 குளி 15. பனைகள் வடலிகள் கொட்டில்வீடுகளும். எல்லை: கிழக்கு கந்தர் ஆழ்வாருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு சங்கரப்பிள்ளை பெண் பத்தினிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு ஒழுங்கை. தெற்கு ஒழுங்கையும் சிலம்பன பெண் தெய்விக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதனடங்கலும்.

2. ஷெ உடுப்பிட்டிக் கோவிற்பற்று கரணவாய் வீரபத்திராயன் குறிச்சியிறை ஊரிச்செம்பாடு. ஏக்கர் 7 பேட்ஸ் 9. எல்லை: கிழக்கு முடிக்குரிய நிலம், வடக்கும் மேற்கும் ஒழுங்கை. தெற்கு வேலுப்பிள்ளை நாகமுத்தருக்குரிய ஆதனம். இதனடங்கலும்.

3. ஷெ கரணவாய் வீரபத்திராயன் குறிச்சியிறை மிசுங்கான். நிலப்பரப்பு $6\frac{1}{4}$, ஷெ நிலப்பரப்பு $12\frac{1}{4}$, ஷெ நிலப்பரப்பு $18\frac{3}{4}$, ஷெ நிலப்பரபபு $4\frac{1}{4}$ கூடிய நிலப்பரபபு $41\frac{1}{2}$. எல்லை: கிழககும் மேற்கும் மேற்குறிதத 1-ம் எதிரிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு வேலுப்பிள்ளை பெண் கதிராத்தைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு மேற்குறித்த 1-ம் எதிரிகுடைய ஆதனமும் வேருதனமும். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம பனைகள், வடலிகள், வேம்புகள், தென்னைகள், கிணறு அடங்கலில் சொரியலாய் நிலத்தில் நிலப்பரப்பு $16\frac{1}{2}$ யும், பனைகள் வடலிகள் வேம்புகள் தெனனைகள் கிணறு இவைகளில் இதற்குரிய பங்கும், இதற்கெல்லைக்காணியில் தெற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும்,

வே. க. சின்னத்தம்பி
கொம்மிஷனர்.

யாழ்ப்பாணம், 10-9-35.
(31) 15-9-35.

---

## ஆசிரிய தராதர பத்திர வகுப்பு
## (Teachers' Certificate Class)

மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் 18-9-35 தொடக்கம் ஷெ வகுப்பு வைத்து நடத்தப்படும். ஷெ வகுப்பிலும் சி. பா. த. வகுப்பிலும (S. S. C. Class) சேரவிரும்புவோர் 30-9-35 க்குமுன் தங்கள் விண்ணப்பப் பத்திரங்களைத் தலைமை ஆசிரியருக்கு அனுப்பவேண்டும். விடுதி வசதியும் உண்டு.

க. பா. த. பரீட்சையில் சித்தியடைந்து சி. பா. த. பரீக்ஷை எடுக்கக் காலம்போதா திருப்பவர்களுக்காக, யா. ஆ. தி. பா. சங்கப் பிரவேசவகுப்பும் வைத்து நடத்தப்படுகிறது. அவ்வகுப்பில் 1-10-35 க்குமுன் சேர்பவர்கள் 36-ம் ஆண்டுப் பிரவேசப் பரீக்ஷைக்குத் தோற்றலாம்.

பண்டிதர் கா. போ, இரத்தினம்,
தலைமை ஆசிரியர்.
சை. பி. வித்தியாசாலை
மூளாய்—சுளிபுரம்.
(30) 15—9—35—2.

---

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டு விசாரணை—17

# கன்னுதிட்டி மகாலட்சுமியைக் கடத்திய வழக்கு.

## எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

## சிறைத்தண்டனையும் அபராதமும்.

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் 10.

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டில் நீதியரசர் திரு. L. M. மாட்டினெஸ் முன்பாகச் சென்ற ஆனிமாதம் 11-ந் திகதியளவில் வண்ணார்பண்ணையைச்சேர்ந்த கன்னுதிட்டி என்னுமிடத்தில் நாகலிங்கபபத்தர்—துரையப்பாப்பத்தரின் மகளாகிய 15 வயதுடைய மகாலெட்சுமி என்னும் பக்குவ மங்கையைக் கடத்திச்சென்றதாக அவ்வூர்வாசிகளாகிய (1) ஆறுமுகம்—நாகலிங்கம் அல்லது அப்பாமணி, (2) (அவர்தம்பி) ஆறுமுகம்—தங்கராசா, (3) துரைசுவாமி—குமாரசுவாமி, (4) பொன்னுத்துரை—சடையப்பா முதலியவர்கள்மீதும், C. செல்லையா என்பவரை விளையாட்டுத் துவக்கால் சுட்டுக் காயப்படுத்தியதாக 1-ம் எதிரிமீதும் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரிகள் யாவரும் தத்தமது குற்றங்களை ஒப்புக்கொண்டனர்.

அதன்மேல் நியாயவாதி திரு. S. துரைசுவாமி தம்பு அவர்கள் ஓர் நீண்ட சொற்பொழிவாற்றினர். அவற்றின் சாராம்சம் வருமாறு —

கடத்தப்பட்ட பெண்ணின் தந்தையும் எதிரிகளும் ஒரே சாதியினர். தட்டார வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்களின் மூதாதையர்கள் இந்தியாவிலிருந்து இங்குவந்து வசித்தவர்கள். பெண்ணுக்கு அதிக சீதனம் இருப்பதினாலும் அனேகரின் தூண்டுதலினாலுமே இவர்கள் இச்செயலிலீடுபட்டார்கள். இச்செயலினால் வழக்காளிபக்கத்துக்கு அதிக நஷ்டம் உண்டாகவில்லை. 1-ம் எதிரி குளித்துக்கொண்டுநின்ற பெண்ணைத் தூக்கிக்கொண்டு வாசல்வரையுமே கொண்டு வந்தான். அச்செயலுக்கு உடந்தையாகவே அவனது தம்பி அங்குசென்றானயினும் அதிகம் தீங்கிழைத்தவனல்லன். எதிரிகள் மிகவுஞ் சொற்பவயதுடையவர்கள். 1-ம் எதிரி பெண்ணைத் தூக்கிக்கொண்டு வந்தபோது சத்தத்தைக் கேள்விப்பட்ட செல்லையா முதலியோர் அவ்விடம் வந்தார்கள். பகலிலேயே இச்சம்பவம் நடைபெற்றது. இன்ன தண்டனை விளைக்கக்கூடிய குற்றமெனத் தெரியாதவர்கள். பெண்ணாகிய மகாலெட்சுமிகப்பைக்கட்டிப்பிடித்தபோது கையை மாத்திரமே இழுத்துவிட்டவன் 2-ம் எதிரி. மற்றவர்கள் வெளியேநின்றார்கள். 1-ம் எதிரி விளையாட்டு றிவோல்வரால் வேடிக்கையாகவே சுட்டான். டக்டரின் சாட்சியமும் விளையாட்டு றிவோல்வர்ச் சூடெனவே குறிக்கின்றது. 1 ம் 2-ம் எதிரிகள் பழைய மோட்டாரிரதமொன்று வைத்துக் கூலிக்குவிடுபவர்கள். பணக்காரரல்ல.

அதன்பின்னர் நியாயவாதி திரு. M. A. மாசிலாமணியவர்கள் 3-ம் எதிரியின்சார்பாகசிறிதுநேரம் பேசினர். முடிக்குரிய நியாயவாதி திரு. நிகால் குணசேகரா அவர்களும் சாரத்தைச் சிறிதளவு கூறியதுடன் முறையே 25 22, 26, 27 வயதுடையவர்களெனவுங் கூறினர்.

அதன்பின் யாழ்ப்பாணம் ஜுடிஷல் மெடிக்கல் ஆபீசர் டக்டர் R. இராசா அவர்கள் செல்லையாவினது முகத்தில் உண்டாகிய காயம் குண்டுபட்ட காயமல்லவெனவும், மெல்லியதோற்புரைக் காயமெனவும், விளையாட்டு றிவோல்வர் காயமாயிருத்தல் வேண்டுமெனத் தாம் அபிப்பிராயப்படுவதாகவுங் கூறினர்.

கோட்டார் கடத்தப்பட்டபெண்ணாகிய மகாலெட்சுமியை வரவழைத்துப்பார்த்தார்கள்.

யாழ்ப்பாணம் 11.

இன்றுகாலை கோடு கூடியதும் நீதியரசர் 1-ம் எதிரிக்கு (இருவகைக் குற்றச்சாட்டுகளுக்குமாக) 3 மாதக் கடூழியச் சிறைத்தண்டனை யெனவும் 2-ம் எதிரிக்குக் கோடு கலையும் வரையில் மறியலும் ரூபா 50 அபராதமும் தவறினால் 1 மாதக் கடூழியச் சிறைத்தண்டனை யெனவும், 3-ம் 4-ம் எதிரிகளுக்கு ரூபா 100-ல் 2 வருட நல்நடத்தைப் பிணை எனவும் தீர்ப்புச் செய்தார்.

புதுச்சேரியிலிருந்து வெளிவரும்

## "வித்தகம்"

என்னும் ஒரு செந்தமிழ் வாரப் பத்திரிகை.

உண்மைச் சைவத்தை நிலைநாட்டி நம்மை வாழ்வித்த அருள் வள்ளல்களாகிய மணிவாசகர், ஞானசம்பந்தர், அப்பர் தம்பிரான்றோழர், திருமூலர் முதலியவர்களால் அருளிச்செய்யப்பட்ட வேதாகம சாரங்களை அடிப்படையாகக் கொண்டு "வித்தகம்" என்னும் திருநாமம் பூண்ட இத்தமிழ்ப்பத்திரிகை ஓராண்டு நிறைவு பெற்று இரண்டாவது ஆண்டு வெளிவருகின்றது.

யாவரும் இன்றே சந்தாதாராகச் சேருங்கள்!

வித்தகத்தைப் பெற்றுப் படித்து உண்மையை உணர்ந்து வித்தகத்தை அடையுங்கள்!!

இன்ப வாழ்வில் ஈடுபட்டு உண்மை நிலையை அடைய முயலுங்கள்!!!

சந்தா விபரம்:-

உள்நாட்டிற்கு ரூபா 3-0-0, வெளிநாட்டிற்குரூ. 4-0-0

முதல்வருட சஞ்சிகைகள் புத்தகமாகக்கட்டப்பட்டன.

விலை ரூபா 3-8-0

"வித்தகம்" ஆபீஸ்
புதுவை.

## அறிவித்தல்.

பாவிட்டபுரம் பட்டிக்கடவையென்னுங் குறிச்சியிலிருக்கும் ம. முருகனாகிய நான் சகலருக்குந் தெரிவிப்பதாவது:— மல்லாகம் முருகர்—பாமு என்பவர் என்னிடம் பற்றிக்கொண்ட ரூபா முந்நூறு (300)-க்கும் ஆதாரமாக 1933-ம் ஆண்டில் என் பேருக்குக் கொடுத்த நோட்டும், மேற்படியாரின் கொள்விலை ஆதன உறுதியொன்றும், சென்ற ஆடி மாதம் 20-ந் திகதியின்பின் என்வசமிருந்து காணமற்போய்விட்டன. இந்த நோட்டினபோரால் எனக்கு வருமதியான முதலையும் வட்டியையும் குறித்த முருகர்—பாமு என்பவரிடத்திலிருந்து சென்ற ஆவணிமாதம் 4-ந் திகதியன்று பெற்றுக்கொண்டேன் என்பதையும், குறித்த நோட்டிற் சொல்லப்பட்ட தொகையை அறவிட எனக்காவது அல்லது வேறு எவருக்காவது உரிமையில்லையென்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
மாவிட்டபுரம் (29) 15-9-35. ம. முருகன்.

---

## யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்க 1936-ம், 37-ம் ஆண்டுப் பரீட்சைப் பாடவிதானம்

விலை சதம் ஐந்து.

வெளிநாட்டு அன்பர்கள் எட்டுச்சதமுத்திரை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

தனலக்குமி புத்தகசாலை,
சுன்னாகம்.

---

## யாழ்ப்பாணக்கல்லூரிப் பழையமாணவர்சங்கம், கொழும்பு.

### பிரதம ஆசிரியரின் தேநீர்க்கொண்டாட்டமும் புதிய ஆசிரியர் வரவேற்பும்.

1935-ம் ஆண்டு செப்டெம்பர்மீ 7உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில், கொழும்பு கிறிஸ்தவ இளம்பெண்கள் சங்க நிலையமண்டபத்தில், ஷெ சங்க வருடாந்தக் கொண்டாட்டம நடைபெற்றது.

அத்தினம் ஓர் சிறந்த தினமாகக்கொண்டு யாழ்ப்பாணக கல்லூரிகுப் புது ஆசிரியராக அன்றே அமெரிக்காவிலிருந்துவந்திறங்கிய திரு. தியடோர் எஸ். ஒப்பன்ஹீம், பீ. ஏ., பீ. டீ., அவர்களை வரவேற்றுபசரித்தனர்.

திரு. ஒப்பன் ஹீம் அவர்கள், தாம் கொழும்பில் வந்திறங்கி அந்நகர்க் காட்சி கண்டு பின் தமக்குரிய கல்லூரிக் கடமைக்கேகுவதே நோக்கமாகக்கருதியிருப்ப, இத்தகைய வரவேற்புநிகழ்ந்தமை பெரிதும்பாராட்டப்படத்தக்கதென்று கூறி, தாம் கல்லூரிக்கு 3வருடத்துக்கே ஆசிரியராக வந்துளராகவும், அமெரிக்காவிலுள்ளோர் இலங்கையின் பெருமையை நன்குணராதிருப்பதுபற்றி இவ்விலங்காபுரியின வரலாற்றை இயன்றவரை அறிந்து மீண்டு அமெரிக்காவுக்குச்சென்றதும் தாம அறிந்துள்ளவற்றை அங்குள்ள நண்பர்களுக்கு எடுத்துப் புகட்டி இருதிறததாருள்ளும் நல்லெண்ணம் தோனறப பெரிதும் முயறசிப்பதாகவும் சொல்லினர்.

கனம் பிக்னல் அவர்கள் கல்லூரியின் நடவடிக்கைகளைப்பற்றிப் பழைய மாணவருக்கு இனிதெடுத்தியம்பினர்.

ஷெ சஙகத்தின்போரால் திரு. மு. இராமலிங்கம் அவர்கள், அத்தினத்தில் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டாடவைத்த கனம் பிக்னல் அவர்களுக்கும் அவர்கள் தம் பாரியாருக்கும் நன்றிகூறினர்.

சமாதான நீதிபதி திரு. ஜே. வி. செல்லையா அவர்களும், வழக்கறிஞர் திரு, க. பாலசிங்கம் அவர்களும் புதிய ஆசிரியர் அவர்களுக்கு நன்றிமொழி புகன்று உபசரித்தனர். இத்துடன் கூட்டம் முற்றுப் பெற்றது.

கடித.

Registered as a Newspaper. 16 Pages

# "The EeLAKESARI"

THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol 6 } Chunnakam, Jaffna, 15th September 1935, Sunday. { No: 11

## சாலாமிசிரி லேகியம்

இந்த லேகியத்தை நான் அனேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பிரபுக்கள் மாத்திர மல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுநலத்தைக் கருதியே இப்போது இதைப்பற்றி விளம்பரப் படுத்தினோம்.

இது சாலாமிசிரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாக, பீதானுசாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவானி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம் அப்ரக் பஸ்பம், பவள பஸ்பம், வெள்ளி பஸ்பம், அயக்காந்த செந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒரு வருஷத்துள் உண்டாயிருக்கும் பக்க வாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அனேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டு வந்தால் மேற் சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இதன் விலை ராத்தல் ஒன்றுக்கு ரூபா. 20. அரை ராத்தல் ரூபா 10. கால் ராத்தல் ரூபா 5. தாபற்செலவு வேறு.

சிங்கப்பூர், பினாங்கு, முதலிய தொடுவாய் ராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணியார்டர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்ட், மட்டக்களப்பு, சிலோன்.
Kattankudi P. O. Batticaloa, Ceylon

(25) 21-1-34.

## பவுண்மார்க் ஓடுகள்

இப்பொழுதும் விசேடமாக மதிப்புப்பெறும் பவுண்மார்க் ஓடுகள் இவைகளே.



எப்பொழுதும் நல்ல மதிப்புடன் அழகு மிளிரும் உன்னத மாளிகைகளில் வேயப்படுகின்றன.

இலங்கை இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் அனலுக்கும் குளிருக்கும் நலனுக்கும் பேலனுக்கும் பாவனைக்கும் மாதிரிக்கும் ஏற்புடைத்தாய், அழகும் அழுத்தமும் படிவும் மலிவும் மிருதுவும் மேன்மையுமுள்ளதேனப் பரீட்சித்த பலர் கண்ட சிறப்பும் தீர்க்கமுமுள்ள ஓடுகள் இவைகளே.

பவுண்மார்க் ஓடுகளெனச் சொல்லி மற்றைய ஓடுகளைக் காட்டும் போதும் சில பவுண்மார்க் ஓடுகளை இடையிடையே குறிப்பாக வைத்திருந்து எடுத்துக் காட்டித் தமது ஓடுகளை விற்பவரிடமும் கவனமாயிருங்கள். பவுண்மார்க் ஓடுகளின் ஏசண்டுகள் நாங்களே.

இங்ஙனம்
### சி. வீரகத்திப்பிள்ளை அண்டு சன்ஸ்

(இவை விற்குமிடங்கள்)

யாழ்ப்பாணம் { பெரியகடை, பறங்கித்தெரு
பருத்தித்துறை ....
வல்வெட்டித்துறை
காங்கேயன்துறை
} சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்

காரைநகர் .... .... சி. க. ஆறுமுகம்பிள்ளை
ஊர்காவற்றுறை .... பி. ம. தம்பிஐயா அன் சன்ஸ்

(103) 23-9-34.

அகில இலங்கை
## ஆதாய ஏலச்சீட்டுக் கம்பனி

### THE LANKA BENEFIT CO.,
GRAND BAZAAR, VANNARPONNAI, JAFFNA.

தலைமைக் காரியாலயம் :
பெரியகடைத்தெரு, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

கிளைக் காரியாலயங்கள்:
சங்கானை, காங்கேசன்துறை, சுன்னாகம்

பின்வரும் வகுப்புகள் இப்போ அமைக்கப்படுகின்றன

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | 5-ம் வகு. | 1000/- | ரூபா | 40/- | ரூபா | வீதம் | 25 | மாதத்திற்கு |
| B | 8-ம் | ,, | 500/- | ,, | 20/- | ,, ,, | 25 | ,, |
| C | 14-ம் | ,, | 250/- | ,, | 10/- | ,, ,, | 25 | ,, |
| D | 7-ம் | ,, | 125/- | ,, | 5/- | ,, ,, | 25 | ,, |
| BMC | 2-ம் | ,, | 250/- | ,, | 10/- | ,, ,, | 12½ | ,, |
| WC | 3-ம் | ,, | 250/- | ,, | 5/- | ,, ,, | 50 | கிழமைகட்கு |
| WD | 4 | ,, | 125/- | ,, | 5/- | ,, ,, | 25 | ,, |
| தினசரி | 6&7ம் | ,, | 100/- | ,, | 1/- | ,, ,, | | |

வேண்டிய விபரங்கட்குக் கீழ்க்காணும்விலாசத்திற்கு எழுதி அறிக.

மனேஜர், அகில இலங்கை ஆதாய ஏலச்சீட்டுக் கம்பனி
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(175) 5-8-34

விலை நிதானம்! நயம் சரக்கு!

## எ ங் கே?

யாழ்ப்பாணம் பெரியகடை
கேங்காசத்திரத்திற்கு மேற்குப்பக்கமாய் இருக்கும்

### மூ. குமாரசாமிப்பிள்ளை கடையில்

நெல், அரிசி முதலிய தானியவகைகளும்,
கயிற்றுவகைகளும், நூல், வாளியும்
பலவிதமான சாய்ப்புச்சாமான்களும்

விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.

திறம் இங்கிலீஷ்மேக்குடைகளும், யப்பான்குடைகளும் குறைந்த விலையில் ஏராளமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம் தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மூ. குமாரசாமிப்பிள்ளை,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

(22) 19-2-24

சிட்டுக்குருவி சத்தினால் செய்யப்பெற்ற
## மின்சார லேகியம்
சாப்பிடுங்கள்

ஒரேவேளையில் குணந்தரும்

48 நாள் டின் 1க்கு ரூபா **5-0-0.** வி. பி. வேறு
இனம்! — வியாபாரிகள் பரீட்சிக்க சாம்பிள் டின் இனம்!

### எம். முகம்மது யூசுபு வைத்தியசாலை,
பரங்கிப்பேட்டை, (Porto Novo.)

கொழும்பு ஏசண்டு :
ச. இ. காதர் மெய்தீன், 39, ஓல்ட் பிட்சர்ஸ் ஸ்ரீட், கொழும்பு.
[(10) 14-7-35—12.]

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டி தெற்கு "திருமகள் நிலைய"த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் "தலையாட்டி"யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1935-ம் ஆு செப்டெம்பர் மீ 15-ந் உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.